


விலை 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 69

வள்ளுவர் ஆண்டு 2043 தை 20 வெள்ளிக்கிழமை (03/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# அவசரமாக வருகிறார் ரொபேர்ட் ஓ பிளேக்

## கொழும்பில் பரபரப்பு; கூட்டமைப்புடனும் சந்திப்பு



கொழும்பு, பெப்ரவரி 3

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் எதிர்வரும் பதினொராம் திகதி கொழும்பு வருகிறார்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகள் நெருங்கிவரும் நிலையிலும் அந்தக் கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாகக் கொண்டுவரப்பட உள்ள தீர்மானத்துக்கான முன்மொழிவை ஆதரிக்க வோஷிங்ரன் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் பிளேக் கொழும்பு வருகிறார். அவரது இந்த அவசர

27

## சென்னையில் பற்றி எரிந்தது இலங்கைத் தேசியக் கொடி

சென்னை,பெப் 3

சென்னையில் நடைபெறும் தோல் பொருள் கண்காட்சியில் இலங்கை நிறுவனம் பங்கேற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத் தப்பட்ட போராட்டத்தில் அங்கு ஏற்றப் பட்டிருந்த இலங்கையின் தேசியக்கொடி கீழே இறக்கப்பட்டு எரிக்கப்பட்டது.

சென்னை, நந்தம்பாக்கம் வணிக நிலையத்தில் அனைத்துலகத் தோல்பொருள் கண்காட்சி நடைபெறுகிறது. இதில் இலங்கை நிறுவனம் கலந்துகொள்வதைக் கண்டித்தும், அங்கு ஏற்றப்பட்டுள்ள இலங்கைக் கொடியை அகற்றக் கோரியும் நேற்றுக் காலை 10 மணியளவில் விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் முன்னணி நிர்வாகிகள் மற்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்

27

## நகரில் பாதுகாப்பு அதிகரிப்பு

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வருகையை முன்னிட்டு நேற்று முதல் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. வீதிகளிலும் பொது இடங்களிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் வழமையை விட அதிகமாக குவிக்கப்பட்டுள்ளனர். இன்றைய தினம் பிரதமர் டி.எம். ஜயரட்ண யாழ்ப்பாணம் வருகிறார். நாளை மறுதினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வருகிறார். இதனை முன்னிட்டுக் குடாநாட்டின் வீதிகள், பொது இடங்கள் எங்கும் இராணுவம் வழமையைவிட அதிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. நகரின் முக்கிய வீதிகளில் சில இடங்களில் வீதித் தடையை ஏற்படுத்தும் இரும்பு வேலித் தடைகளும் வைக்கப்பட்டுள்ளன. (த-15-17)

## 42 போராளிகள் விடுதலை

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் 42 பேர் எதிர்வரும் 8ஆம் திகதி சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அநுராதபுரம் - ஓயாமடுவ பகுதியில் இடம்பெறவுள்ள தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் வைத்து எதிர்வரும் 8ஆம் திகதி இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளதாக அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (த)

## எண்ணெய் வள நாடுகளுடன் இலங்கை பேச்சு

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடை காரணமாக இலங்கையிலும் எண்ணெய் இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனையடுத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண எண்ணெய் ஏற்றுமதி நாடுகளுடன் பேச்சு நடத்தவுள்ளதாகப் பெற்றோலிய துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார். இதன் முதற்கட்டமாக ஓமான் நாட்டுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (த-323)

## பறவைக் காய்ச்சல் அபாயம் இல்லை

இலங்கையில் பறவைக் காய்ச்சல் அபாயம் இல்லை என இலங்கைச் சுகாதாரத் துறையினர் உறுதிப்படுத்தி உள்ளனர். விலங்குகள் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் குமார டீ சில்வா இதனை உறுதிப் படுத்தியுள்ளார். குருநாகல் பிங்கிரிய பண்ணை ஒன்றில் நோய்த் தாக்கத்தால் கோழிகள் இறந்தமைக்குப் பறவைக் காய்ச்சல் காரணம் அல்ல என்றும் அவர் கூறியுள்ளார். மருத்துவப் பரிசோதனைகள் மூலம் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-323)

# இந்தியா விரைந்தார் சொல்ஹெய்ம்

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு பெற

புதுடில்லி,பெப். 3

ஜெனிவாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள மேற்குலக நாடுகள் அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறும் முயற்சிகளில் இறங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்காக நோர்வே அமைச்சர் எரிக் சொல் ஹெய்ம் இந்தியாவுக்கு விரைந்துள்ளார்.

அமெரிக்காவின் ஆதரவுடன் கொண்டு வரப்படவுள்ள இந்தத் தீர்மானம் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்குக் கடந்த வெள்ளியன்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்ரன் அதிகாரபூர்வமாகத் தெரியப் படுத்தியிருந்தார்.

இந்தத் தீர்மானத்துக்கு இந்தியாவும் ஆதரவு வழங்குவதாகவும் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டிச் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தநிலையில் இந்தியாவின் ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் மேற்குலக நாடுகள் ஈடுபட்டிருப்பதாக புதுடில்லித் தகவல்கள் கூறுகின்றன.

இதன் ஒரு கட்டமாக நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைக்கான சிறப்பு சமாதான தூதுவராகப்

27

## புதுமாத்தளனில் எவரும் மீளக் குடியமர முடியாது

### இப்படிக் கூறுகிறார் கருணா

கொழும்பு,பெப் 3

வடக்கிலும் கிழக்கிலும் நிரந்தரப் படைமுகாம்களை அமைப்பதற்காக பொதுமக்களின் காணிகளை அரசு சுவீகரிக்கவுள்ளது, புதுமாத்தளனில் நிரந்தரப்படை முகாம் அமையவுள்ளதால், அங்கு மக்கள் மீளக்குடியேற ஒரு போதும் அனுமதிக்கப்படமாட்டார்கள் இவ்வாறு மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

வடக்கில் மட்டுமன்றி கிழக்கு, தெற்கு உள்ளிட்ட அனைத்துப் பிர்தேசங்களிலும் நிரந்தரப்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளன. இந்தப் படை முகாம்

27

# எந்த முகத்துடன் அரசு ஜெனிவா செல்கிறது?

## அரசிடம் கேள்வியெழுப்புகிறது ஐ.தே.க.

கொழும்பு, பெப்.3

மனித உரிமை பாதுகாப்பு செயற்றிட்டமொன்று நாட்டில் இருக்குமாயின், சுயாதீனமாகச் செயற்பட முடியவில்லை எனத் தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் ஏன் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும்? இந்த நிலையில் எந்த முகத்துடன் அரசு ஜெனிவாவுக்குச் செல்கிறது?

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுக் கேள்வியெழுப்பியுள்ளது.

நீதிமன்றம், பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களங்கள் என்பன சுயாதீனமாக செயற்படவேண்டும் எனவும் ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனிவா மாநாட்டில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை சமர்ப்பிக்க மாட்டோம். அதற்காக மனித உரிமைகள் பாதுகாப்புச் செயற்றிட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

அவ்வாறானதொரு செயற்றிட்டம் உள்ளதாயின், மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் ஏன் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும்? நாட்டின் மனித உரிமைகள் எந்தளவில் உள்ளதென்பதை இச்செயல் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

ஜெனிவா தொடரில் மனித உரிமைகள் பாதுகாப்புச் செயற்றிட்டம் சமர்ப்பிக்கப்படுமாயின், அதற்கு முன்னதாக அதனை நாடாளுமன்

27

# அமெ.பாதுகாப்புக் குழு கொழும்பில்

கொழும்பு,பெப் 3

அமெரிக்காவின் உலக அமைதி நடவடிக்கை அமைப்பின் வளங்கள் மதிப்பீட்டு அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு உண்மையைக் கண்டறியும் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள அமைதி ஆதரவு நடவடிக்கைப் பயிற்சி நிறுவனத்தின் அமைதிகாப்புப் பயிற்சிகளின் தரம் தொடர்பாக மதிப்பீடு செய்யவே இவர்கள் கொழும்பு வந்துள்ளனர்.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் பல்தேசியப் பயிற்சிப் பிரிவின் தலைவர் ஸ்கொட் வெய்டி, தலைமையிலான இந்தக் குழுவில் ஐந்து பாதுகாப்பு அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை இராணுவத் தளபதியைக் கொழும்பில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இதன்போது, இலங்கை இராணுவத்துக்கு ஐ.நா அமைதிப்படையில் பணியாற்ற மேலதிக படையி

27

## ஆட்சியை கவிழ்க்க பெரும் சதி

கொழும்பு, பெப்.3

எதிர்க்கட்சிகள் சர்வதேசத்துடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முயற்சிக்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

களிகமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும்

27

## காணி, பொலிஸ் உள்ளடக்கி தென்கிழக்கு மாகாண சபை

### கோருகிறது முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு,பெப் 3

கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்க்ளை ஒன்றிணைத்துத் தென்கிழக்கு மாகாணசபையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் முன்வைத்துள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலர் ஹசன் அலி,

மாகாணசபைகளுக்கு 13ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அதிகாரங்களை வழங்குவதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்காது. ஆனால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்டுப்பாட்டில் உள்ளதும் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கின்றதுமான திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் பொத்துவில் சம்மாந்துறை, கல்முனை போன்ற பிரதேசசபைகளை ஒருங்கி

27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கடற்றொழில் அபிவிருத்திக்கு 40 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். மாவட்டத்தில் கடற்றொழில் அபிவிருத்திக்கென இந்த ஆண்டு 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித் தார்.

ஏற்கனவே திணைக்களத்தால் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு அமைய ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதி மூலம் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கடற்றொழிலாளர்களும் பயனடையக் கூடிய வகையில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மீனவர்களுக்கான இளைப்பாறும் மண்டபங்கள், மீன் ஏல விற்பனை நிலையங்கள், மீன் சந்தைகள் போன்றவை புதிதாக அமைக்கப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களை விரைவாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எமது திணைக்களம் மேற்கொண்டுள்ளது - என்றார் அவர். (த-17)

## சஜித் தரப்பு இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 3

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கையில் தம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு கோரி சஜித் பிரேமதாஸ தரப்பினர் இன்று பேருவளையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகின்றனர்.

புனரமைப்புப் பணிக்காக நிதி திரட்டும் நிகழ்வொன்றை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி இன்று காலை 9 மணிக்கு பேருவளை நகரில் நடத்துகின்றது.

இந்த நிகழ்வு இடம்பெறும் இடத்திற்கு அருகாமையிலேயே சஜித் பிரேமதாஸ தரப்பினர் மேற்படி ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றனர்.

சிறிகொத்தாவை நாமே சேதப்படுத்தினோம் என்று எம்மீது பழியைப்போட்டு ஐ.தே.க. எம்மை ஓரங்கட்டிவிட்டே புனரமைப்புப் பணியை முன்னெடுக்கின்றது என்று சஜித் பிரேமதாஸ தரப்பினர் கூறுகின்றனர்.

இதேவேளை, தாம் கட்சியில் யாரையும் ஓரங்கட்டவில்லை என்றும் இந்த ஆர்ப்பாட்டம் தேவையற்ற ஒன்று என்றும் ஐ.தே.க. வட்டாரம் தெரிவித்துள்ளது.

## பொன்சேகாவுக்கான போராட்டத்தில் பங்கேற்ற அணிதிரண்டு வாருங்கள்

### மக்களிடம் அழைப்பு விடுக்கிறார் அனோமா



''எனது கணவரின் விடுதலையை வலியுறுத்தி 8 ஆம் திகதி நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் அவரை நேசிக்கும் அனைத்து இதயங்களும் அலைபோல் திரள வேண்டும்''-என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா மக்களிடம் அழைப்பு விடுத்துள்ளார்.

''சுதந்திரதினத்தன்று எனது கணவரை விடுதலை செய்யமாட்டார்கள்''- என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''ஜெனரலை சுதந்திரதினத்தன்று விடுதலைசெய்வார்கள் என மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அவரை சுதந்திரதினத்தன்று இவர்கள் விடுவிக்கமாட்டார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும்.

எனது கணவர் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்களாகின்றன. இந்நாளில் அவரின் விடுதலையை வலியுறுத்தி கொழும்பில் ஆர்ப் பாட்டமொன்று நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அவரை நேசிக்கும் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும்'' - என்றார். (த-சி)

## கண்காட்சிக்கு யாழ். மக்களும் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 3

சுதந்திர தினத்தை முன்னிட்டு அனுராதபுரம் தந்திரிமலை ஓயாமடுவில் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகும் 'தேசத்தின் மகுடம்' கண்காட்சியில் கலந்து கொள்ளுமாறு யாழ். மக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுவரொட்டிகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

நாளை பிற்பகல் ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி யில் குடாநாட்டு மக்களும் அணிதிரள வேண்டும் என்று அந்தச் சுவரெட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுவரொட்டிகள் குடாநாட்டில் உள்ள அரச திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (த-17)

## கீரிமலையில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், பெப்.3

கீரிமலை சிவநெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் பொங்கல்விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கீரிமலை சிவபூமி மடத்தில் கழகத் தலைவர் பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிவத் தமிழ்ச் செல்வர் ச.விநாயகமூர்த்தி 'திருவாசகம் என்னும் தேன்' என்ற தொனிப் பொருளிலும் சிவத்தமிழ் வித்தகர் மகாலிங்கம் 'திருமந்திரம் காட்டும் நெறி' என்னும் தொனிப்பொருளிலும் பேராசிரியர் இ.குமாரவடிவேல் 'சிவநெறி' எனும் தலைப்பிலும் சிறப்புரை ஆற்ற உள்ளனர். (ஒ-15)

## அல்வாய் மாணவி கொலை: இருவர் பொலிஸாரால் கைது

வடமராட்சி, பெப். 3

அல்வாய் மாணவி படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொலைக்கான காரணம் குறித்து அவர்களிடம் தீவிரமாக தாம் விசாரித்து வருகின்றனர் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெகத் அபயக்கோன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மயிலிட்டியையும் மற்றவர் தும்பளையையும் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தவிர வேறு யாருக்காவது இந்தக் கொலையுடன் தொடர்புகள் இருக்கின்றனவா என்ற கோணத்திலும் தாம் தீவிரமாக விசாரித்து வருகின்றோம் என்று பொலிஸார் கூறினர்.

இருதயநாதர் மேரி டிலக்ஸனா ஜனவரி 25ஆம் திகதி முன்னிரவில் கொல்லப்பட்டார். இரவு 7 மணியளவில் காணாமல்போயிருந்த டிலக்ஸனாவின் உடல் அவரது வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டு வளவினுள் இருந்து ஒன்றரை மணி நேரத்தின் பின்னர் கண்டெடுக்கப்பட்டது. கூர்மையான ஆயுதத்தால் கழுத்தில் குற்றப்பட்ட காயம் காணப்பட்டது. (உ-8)

## தெரிவுக்குழுவே ஜனநாயக நடைமுறை

கொழும்பு,பெப் 3

நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவே சிறப்பான ஜனநாயக நடைமுறை என அமைச்சரவை பதில் பேச்சாளரும் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சருமான அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது:

மாகாண சபைகளுக்குக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது பற்றி பலரும் பலவித கருத்துக்களைத் தெரிவித்துவருகின்றனர். அரசாங்கத் தரப்பு அமைச்சர்களும் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனால் இவை அரசின் கருத்தல்ல.அரசின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கவும் ஏனைய தரப்பினரின் முன்மொழிவுகளை முன்வைக்கவுமே நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

என்னதான் முரண்பாடான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு உண்டு.நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு இறுதியான மற்றும் ஜனநாயகரீதியான முடிவை நாடாளுமன்ற தெரிவுக் குழுவினாலேயே முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.




கொழும்பு நீதவான் நீதிமன்ற கட்டிடத் தொகுதியை பத்தரமுல்லை பிரதேசத்துக்கு இடமாற்றும் அரசின் திட்டத்துக்கு எதிராக நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நேற்று வியாழக்கிழமை பிற்பகல் கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்ட சட்டத்தரணிகள்.

## ஆசனப்பட்டி அணியாத சாரதியின் லைசன்ஸ் ரத்து

வாகனங்களின் முன் ஆசனத்தில் அமர்ந்து ஆசனப்பட்டி அணியாது செல்வோருக்கு அவர்கள் பிடிபடும் இடத்தில் வைத்தே தண்டப்பணம் அறவிடக் கூடிய வகையில் மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் ஆசனப்பட்டி அணியாது செல்லும் சாரதியின் வாகனம் செலுத்தும் அனுமதிப்பத்திரத்தை செல்லுபடியற்றதாக்கவும் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது அமைச்சர் அனுரபிரியதர்ஸன யாப்பா இதனைத் தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

இதன்படி முதல் முறையாகக் குற்றவாளியாக இணங்கானப்படுவோருக்கு 1000 ரூபா முதல் 2000 ரூபா வரையிலும் -

இரண்டாம் முறை குற்றவாளியாவோருக்கு 2000 ரூபா முதல் 3000 ரூபா வரையிலும்-

மூன்றாம் முறையும் குற்றவாளியாவோருக்கு 3500 ரூபாவுக்கு குறையாத அபராதம் விதிக்க சட்டத்தில் மாற்றம் செய்யவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மன்னார் சந்தை ஆக்கிரமிப்பாளர்கள் அங்கிருந்து வெளியேற இறுதிக்கெடு

### இல்லையேல் சட்ட நடவடிக்கை என்கிறது நகர சபை

மன்னார், பெப். 3

மன்னார் நகரிலுள்ள வாராந்த சந்தைத் தொகுதியை ஆக்கிரமித்திருக்கும் வியாபாரிகள் அங்கிருந்து வெளியேறுவதற்கு இரு வார கால இறுதிக் காலக்கெடு மன்னார் நகர சபையால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தை இரு தசாப்தங்களுக்கு முன்னர் 'பொல' என்று அழைக்கப்படும் வாரச் சந்தையாக இருந்தது. போர்க் காலங்களில் சந்தைத் தொகுதியை ஆக்கிரமித்த சில வியாபாரிகள் தினந்தோறும் விற்பனையில் ஈடுபட்டு வந்தனர்,

மன்னார் நகர சபைக்கு மக்கள் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தைத் தொகுதியை மேம்படுத்தும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் ஒரு பகுதியாகச் சந்தையை ஆக்கிரமித்திருப்பவர்களை அகற்றி மீண்டும் வாரச் சந்தையாக அதனை மாற்றச் சபை முடிவெடுத்தது.

வாரச் சந்தையாக இருக்கும்போது தெற்கு, வடக்கு என அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வியாபாரிகள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் கூடி வியாபாரம் செய்யக் கூடியதாக இருக்கும்.

இதனைக் கருத்தில் கொண்டு, சந்தைத் தொகுதியை ஆக்கிரமித்திருந்தவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு நகர சபை அவர்களுக்கு அறிவித்திருந்தது. எனினும் அவர்கள் வெளியேறவில்லை. இதற்கு முன்னர் வழங்கப்பட்ட பல கால அவகாசங்களை அவர்கள் கணக்கெடுக்கத் தவறியதனால் தற்போது இறுதிக் காலக்கெடு வழங்கப்பட்டிருப்பதாக சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

சந்தையை ஆக்கிரமித்திருப்பவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து மன்னார் வர்த்தகர்ளுக்கும் நகர சபைக்கும் இடையில் நேற்றுப் பகல் சந்திப்பு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பாளர்கள் சந்தையை விட்டு வெளியேற எதிர்வரும் 16ஆம் திகதிவரை இறுதிக் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

''இந்த முறையும் அவர்கள் வெளியேறாதுபோனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று சபைத் தலைவர் தெரிவித்தார். (உ-12)

## சீரற்ற காலநிலையால் மீன்களின் விலை உயர்வு

வடமராட்சி, பெப்.3

சீரற்ற காலநிலை காரணமாகக் கடந்த மூன்று தினங்களாக மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லாமையினால் வடமராட்சிப் பிரதேசத்தில் மீன் வகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் அவற்றின் விலைகளும் திடீரென உயர்ந்துள்ளன.

தொண்டமானாறு தொடக்கம் ஆழியவளை வரையிலான வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு கடல் பிரதேசங்களில் கடும் காற்றும், கடற்கொந்தளிப்பும் கடந்த மூன்று தினங்களாக நிலவுவதால் மீனவர்கள் கடற்றொழிலுக்குச்செல்ல அஞ்சுகின்றனர்.

பெருமளவான மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லாததால் சந்தைகளுக்கு மீன்கள் போதியளவு வரவில்லை. ஆழங்குறைந்த கடற்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களால் பிடிக்கப்பட்ட சிறிய வகையிலான மீன்களே விற்பனைக்கு வந்திருந்தன. இதனால் வழமையாகக் கேட்பாரற்றுக் கிடக்கும் இத்தகைய சிறிய வகை மீன்களுக்கு சந்தைகளில் கிராக்கி ஏற்பட்டது.

போதிய மீன் இன்மையால் கிலோ 300 ரூபா தொடக்கம் 400 ரூபா வரை விற்ற மீன்கள் 600 ரூபாவாகவும், கிலோ 20 ரூபாவாக விற்கப்பட்ட சூடை மீன் கிலோ 70 ரூபா தொடக்கம் 100 ரூபா வரையிலும் விற்பனையாகின்றது. (ங-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஈரான்மீதான அமெரிக்கத் தடையும் இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடியும்

பேரழிவு தரும் இரசாயன ஆயுதங்கள் ஈராக்கிடம் இருப்பதாக அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் குற்றஞ்சாட்டின. 2003ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் ஈராக் மீது படையெடுக்கவும், பாரிய அழிவு ஏற்படவும் அது வழிவகுத்தது. ஆனால், எந்த ஓர் இரசாயன ஆயுதமும் ஆக்கிரமிப்புப் படைகளால் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஈராக் மீதான படையெடுப்பு நிகழ்ந்து எட்டு வருடங்கள் கழிந்து விட்டன. ஈராக்கைத் தாக்குவதற்கு அமெரிக்கா எத்தகைய தந்திரோபாயத்தைக் கையாண் டதோ அதே தந்திரோபாயம் மீண்டும் பிரயோகிக்கப்படுகிறது.

அணு ஆயுத உற்பத்தியில் ஈரான் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டி அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஈரான் மீது கொண்டுவந்துள்ள பொருளாதாரத் தடையால் ஏற்படக்கூடிய விளைவுகளையும், ஈரான் மீதான அமெரிக்காவின் அடுத்தகட்ட நகர்வுகளையும் முழு உலகமும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

முபாரக்கைப் போன்றோ கடாபியைப் போன்றோ சுலபமாக அடிபணியக் கூடியவர் அல்லர் ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதி நிஜாத்.

அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளுக்கும் ஈராணுக்கும் இடையேயான இந்தப் போராட்டத் தில் பாவம் சிறிய நாடுகளே பாதிக்கப்படப் போகின்றன.

ஜனாதிபதி ராஜபக்ஷ சில நாள்களுக்கு முன்னர் வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தது போன்று, ஈரானைத் தண்டிப்பதாகக் கூறிக்கொண்டு சிறிய நாடுகளையே அமெரிக்கா தண்டிக்கிறது. ஈரான் மீதான அமெரிக்காவினதும், ஐரோப்பிய நாடுகளினதும் தடை இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. போருக்கு பின்னரான பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவு பாதிப்பை ஈரான் மீதான தடை ஏற்படுத்தும்.

இந்தப் பிரச்சினையில் இருந்து மீள இலங்கையிடம் இரு வழிகளே இருக்கின்றன. ஒன்று, வேறு நாடுகளின் மசகு எண்ணெய்யையும் சுத்திகரிக்கக் கூடியதாக சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீள் நிர்மாணிப்பது. அடுத்தது, அமெரிக்காவிடம் சலுகை பெறுவது.

இலங்கையின் மசகு எண்ணெய்த் தேவையில் 93 சதவீதம் ஈரானில் இருந்தே வருகிறது. ஏழு வருடக் கடன் சலுகையும் அதற்கு உண்டு. உயர்கந்தகமும், அடர்த்தியும் உடைய ஈரானிய மசகு எண்ணெய்யை சுத்திகரிக்கக் கூடியதாகவே சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. வேறு நாடுகளின் மசகு எண்ணெய்யை இங்கு சுத்திகரிக்க முடியாது.

வேறு நாடுகளின் மசகு எண்ணெய்க்கு ஏற்ப இந்த சுத்திகரிப்பு நிலையத்தை மாற்றி அமைப்பது சுலபமானது அல்ல. இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலையில் இது சாத்தியப்படாது. குறுகிய காலத்தில் இதனை செய்து முடிக்கவும் இயலாது.

மற்றையது, அமெரிக்காவிடமிருந்து சில சலுகைகளைப் பெறுவது. இதேபோன்ற சலுகைகள் ஜப்பான், துருக்கி, தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதனைப் பெறுவதே இன்றைய நெருக்கடியில் புத்திசாலித்தனமானது என்று கருதப்படுகிறது. ஆனால், உள்நாட்டில் இதற்கு கடும் எதிர்ப்பு உருவாகும். இலங்கை மீது போர்க்குற்றச்சாட்டுச் சுமத்தி வரும் அமெரிக்காவிடம் இலங்கை மண்டியிட முடியுமா என்று இங்குள்ளோரால் கேள்வி எழுப்பப்படுகிறது.

இலங்கை அரசு மீதான போர்க்குற்றச் சாட்டுகள், மற்றும் நாட்டில் மனித உரிமைகளைப் பேணுவதில் அரசு விட்டேத்தியான போக்கை கைக்கொள்ளுதல், இனப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வை முன்வைப்பதில் அக்கறை கொள்ளாமை என்பனவும், அமெரிக்கா ஏனைய நாடுகளுக்கு வழங்கிய சலுகையை இந்நாட்டுக்கும் கொடுப்பதற்கு தடைக் கற்களாக மாறும் வாய்ப்பும் உண்டு.

ஈரானுடன் மிகவும் நெருங்கிய அரசியல், வர்த்தக, கலாசார உறவுகளைக் கொண்டுள்ளது இலங்கை. புலிகளுடனான போர் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த வேளையில் இலங்கைக்கான மசகு எண்ணெய்க்கு ஏழு மாதகால இலகு கடன் திட்டத்தை ஈரான் அறிவித்தது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நாளாந்தம் 50 ஆயிரம் பரல் ஈரானிய மசகு எண்ணெய்யைச் சுத்திகரிக்கிறது. நீர் மின்சக்தி நிலையங்களை இயக்க இதுவே பயன்படுத்தப்படுகிறது. நீர்மின் சக்தி பாதிக்கப்படுமானால் அதனைப் பயன்படுத்தும் பெரும் எண்ணிக்கையான தொழிற்சாலைகள் முடங்கிவிடும். பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து கீழ் நோக்கிச் செல்லும்.

மத்திய கிழக்கின் மற்றைய நாடுகளில் நடத்தியது போன்று, மக்கள் எழுச்சியைத் தூண்டிவிட்டு ஈரானை வீழ்த்த முடியாது. அதனால்தான் தடையை அறிவித்துள்ளன அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும். இந்த நடவடிக்கை இலங்கை போன்ற நாடுகளையும் பாதிப்பது நிச்சயமே.

# அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால் நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும்

## தேசிய பிக்குகள் முன்னணிக்கு பிரபாகணேசன் பதிலடி

கொழும்பு, பெப்.3

''தேசிய பிக்குகள் முன்னணித் தலைவர் தம்பர அமில தேரர் காணி, பொலிஸ் அதிகாரங்களால் நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என்று தெரிவித்துள்ளமை அவரது மடமைத்தனத்தை வெளிப்படுத்துகிறது. அதிகாரப்பகிர்வு வழங்கப்படாவிட்டால்தான் இந்த நிலைமை ஏற்படும் என்று அவருக்கு எச்சரிக்கை விடுக்க விரும்புகின்றேன்'' - என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

''காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தமிழ் மக்கள் கோரவில்லை எனவும் அரசியல்வாதிகளே கேட்பதாகவும் அவர் தெரிவித்திருப்பது அவரது அறியாமையைக் காட்டுகிறது. மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் மக்களின் நிலைப்பாட்டையே பிரதிபலிக்கின்றோம் என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக எதிர்க்கும் அவர், தமிழ் மக்களுக்கு இப்போது தேவையானது மீள்குடியேற்றம், தொழில் வாய்ப்பு, கல்வி போன்ற அபிவிருத்திகளே என்று தெரிவித்திருக்கின்றார். நாங்கள் அபிவிருத்தியை எதிர்க்கவில்லை. அந்த அபிவிருத்தி எமது தமிழ் அரசியல் தலைவர்களின் நிர்வாகத்தின் கீழ் நடைபெறவேண்டும் என்பதையே வலியுறுத்தி வருகின்றோம்.

தமிழ் மக்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கொடுக்கும்போது சிங்கள, முஸ்லிம் மக்கள் ஓரங்கட்டப்படுவார்கள் என்று அவர் தெரிவித்திருப்பது அவரது அரசியல் ஞான சூனியத்தை வெளிப்படுத்துகிறது. 13 ஆம் திருத்தச்சட்டம் அல்லது அதற்கு அப்பால் தீர்வு காணும்போது அனைத்து மாகாண சபைகளுக்கும் இவை கிடைக்கும் என்பதை இவர் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல் அறிவற்று, தமிழ் மக்களின் மனங்களைப் புரிந்துகொள்ளாமல் இனவாதத்தைக் கக்கியதன் காரணமாகத்தான் கடந்த 30 வருட காலமாக சிங்கள மக்களும் கஷ்டத்திற்குள்ளானார்கள் என்பதை இவர் தெரிந்து கொள்ள வேண்டும். 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பாலான தீர்வையே நாம் அரசிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். அரசும் தீர்வினில் அக்கறை செலுத்தாததை நாம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றோம்.

இந்தத் தருணத்தில் இவர் போன்றவர்களின் இனவாதப் போக்கை அரசு வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தால் நாம் அனைவரும் இலங்கையர் என்ற ஜனாதிபதியின் கனவு பிழையாகிவிடும்'' - என்றார் அவர்.

# குறிப்பிட்ட காலத்தில் அதிபர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்

## நீதிமன்றம் கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்து

அச்சுவேலி,பெப்.3

நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அதிபர் பதவி உயர்வு பெறுபவர்களுக்கான நியமனங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் வழங்கப்படவுள்ளது.

இரண்டு வார கால இடைவெளியில் விவரங்கள் திரட்டப்பட்டு பத்து வாரகால இடைவெளிக்குள்ளே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தி உள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II இலங்கை அதிபர் சேவை தரம் III ஆகிய பதவி உயர்வுகள் தொடர்பாக உயர் நீதிமன்றம் கடந்த 24ஆம், 26ஆம் திகதிகளில் தீர்ப்புக்களை வழங்கி இருந்தது.

நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் 2009ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இலங்கை அதிபர் சேவை தரம் 2:II இற்கான நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளியுடன் மொத்தமாக 212 புள்ளிகளைப் பெற்ற அனைவருக்கும் பதவி உயர்வு வழங்கப்படவிருப்பதோடு போட்டிப் பரீட்சையின் வெட்டுப் புள்ளி 154 இல் இருந்து 113 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் 2006ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் 113 புள்ளிக்கு மேல் பெற்றுக்கொண்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர். இந்த வகையில் 8958 ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு செல்வதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களின் விவரங்கள் பொருத்தமான பகிரங்க விளம்பரத்தின் மூலம் கல்வி அமைச்சு திரட்ட வேண்டும். விவரங்களைத் திரட்டுவதற்கு இரண்டு வார காலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் மொத்தமாக 212 இற்கு மேல் புள்ளி பெற்றவர்கள் என்ற வகையில் 1897 பேர் இலங்கை அதிபர் சேவை தரம் 2:II பதவி உயர்வுபெறுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இலங்கை அதிபர் சேவை தரம் III தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் போட்டிப் பரீட்சையின் வெட்டுப்புள்ளி 82ஆக குறைக்கப்பட்டுள்ளது.

82 புள்ளிக்கு மேல் பெற்றுக்கொண்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு நேர்முகப் பரீட்சை எழுத்துப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் 1223 பேருக்கு இலங்கை அதிபர் சேவை தரம் III பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை பதவி உயர்வுக்கான வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டிருப்பதன் மூலம் தற்பொழுது பாடசாலைகளில் பதில் அதிபர்களாக கடமை புரிபவர்களில் கணிசமான தொகையினருக்கு நிரந்தர நியமனம் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிராகாரம் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி 82 புள்ளிக்கு மேர் பெற்றவர்கள் அதிபர் சேவை தரம் 3 இற்கான நேர்முகப் பரீட்சைக்கும் 113 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2:II நேர்முகப் பரீட்சைக்குச் செல்வதற்கு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

(ம-11)

## இணைகின்றன 125 பாடசாலைகள்

பருத்தித்துறை பெப்.03

வடமாகாணத்தில் உள்ள125 பாடசாலைகள் இந்தவருடம் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் இணைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன

இலங்கை முழுவதிலும் 2012 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக788 பாடசாலைகள் இந்தத் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. மிகுதிப் பாடசாலைகள் 2013ஆம் ஆண்டு உள்வாங்கப்படும் என்று கூறப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இதன் ஆரம்ப நிகழ்வுகள் இன்று வெள்ளிக் கிழமை இடம் பெறவுள்ளன இந்தப் பாடசாலைகள் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்களைக் கொண்டதாகவே அமையும்.

இதேவேளையில் நாடளாவிய ரீதியில் 500 ஆரம்பப் பாடசாலைகளும் அரசால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (ம-15)

## 30 வீதத்தை பயனாளிகள் பெறலாம்

ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களது பணத் தொகையில் நூற்றுக்கு 30வீதத்தை அந்த உறுப்பினர்கள் பெறத்தக்க நடைமுறையை எதிர்வரும் மூன்று மாத காலத்தினுள் ஆரம்பிக்க முடியும் என்று தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதிப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது. அதில் சபாநாயகர் கையெழுத்திட்டு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் தொழில் திணைக்களத்தினால் அது சம்பந்தப்படும் கொடுப்பனவு முறைமை மற்றும் சட்டவிதிகளை கட்டமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஊழியர் சேமலாப நிதியத்தின் தொழிலாளர் தொடர்பான ஆணையாளர் தம்மிக்க வீரக்கோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களின் கணக்குகளிலுள்ள நிதியில் நூற்றுக்கு 30வீதமான தொகையை அவர்களது தேவைகளை முன்னிட்டு வழங்கத்தக்க விதமாக சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது

நிகழ்வுகள்

## இன்று

### பாராட்டு விழா

அச்சுவேலி தெற்கு நவோதய 15 சனசமூக நிலையத்தினூடாக சமூக முன்னெடுத்தல் குழு நடத்தும் பாராட்டுவிழா பிற்பகல் 3 மணிக்கு அச்சுவேலி தெற்கு ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தில் நவோதய சனசமூக நிலையத்தினூடாக சமூக முன்னெடுத்தல் குழுத்தலைவர் குணசேகரம் சாந்தமலர் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் கலந்து கொள்வார். (ம-ரி)

### கலந்துரையாடல்

யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் முற்பகல் 11மணிக்கு யாழ் பெருமாள் கோயில் முன்றலில் இடம் பெறவுள்ளது. இதில் வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ம-ரி-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி கோட்டங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள்

அக்கராயன், பெப்.3

கிளிநொச்சி வலயத்தின் நான்கு கல்விக் கோட்டங்களுக்கும் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனை மற்றும் கோட்டப்பணிமனைகள் நிரந்தரக் கட்டடங்கள் இன்றியே இயங்கிவருகின்றன.

பளை, பூநகரி, கரைச்சி, கண்டாவளை ஆகிய கோட்டங்கள் நிரந்தரக் கட்டடங்கள் இன்றி இடர்களுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றன என்று கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கிளிநொச்சியில் நடைபெற்ற கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் தமக்கு நிரந்தரக் கட்டடம் இன்மையால் எதிர் நோக்கும் நெருக்கடி தொடர்பாக தெரிவித்தனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி கல்வி வலயத்தின் நான்கு கோட்ட அலுவலகங்களுக்கும் நிரந்தரக் கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி வலயப் பணிமனைக்கும் நிரந்தரக் கட்டடம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம - 410)

## நீர்த்தேக்கம் உருவாக்குமாறு பூநகரி மக்கள் கோரிக்கை

அக்கராயன், பெப்.3

பூநகரியின் குடமுருட்டி ஆற்றினைத் தடுத்து பெரும் நீர்த்தேக்கத்தை உருவாக்குமாறு பூநகரி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பூநகரி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியின் பழம் பெரும் கிராமங்களைப் பூநகரி கொண்டுள்ளது.

பூநகரியின் மொட்டைக் கறுப்பன் அரிசி உலகப் புகழ் பெற்றது. இந்தப் பிரதேசம் உவராகும் ஆபத்தில் உள்ள நிலையில் குடமுட்டி ஆற்றை மறித்து, நீரைத் தேக்கினால் செங்குவான், மானம்பூ, கொக்குடையான் பகுதி மக்கள் விவசாயம் செய்யக் கூடிய நிலையுருவாகும்.

போர்க்காலத்தில் பெருமளவு மக்கள் பூநகரியில் தஞ்சமடைந்திருந்தனர். கிளிநொச்சியில் பூநகரி, கண்டாவளை, பொன்னை வெளி ஆகியன தொன்மையான கிராமங்கள் ஆகும்.

> குடமுருட்டி ஆற்றை மறித்து நீர்த் தேக்கம் உருவாக்குவதன் மூலம், பெரிய விவ சாய முயற்சிகளில் மக்கள் ஈடுபட முடி யும்.

குடமுருட்டியை மறித்து நீர்த்தேக்கம் உருவாக்குவதன் மூலம், பெரிய விவசாய முயற்சிகளில் மக்கள் ஈடுபட முடியும்.

1964 ஆம் ஆண்டு பூநகரியின் பல பகுதிகளில் உவர் நீர் உட்புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தி யது.

1969 ஆம் ஆண்டு உவர்த் தடுப்பணைகள் அமைக்கப்பட்டன. அவை தற்போது அழிந்து விட்டன. ஓய்வு பெற்ற கிளிநொச்சி அரச அதிபராக தி.இராசநாயகம் இருந்த போது உலக உணவுத் திட்டத்தின் கீழ் உவர்த் தடுப்பணைகள் புனரமைக்கப்பட்டன. இதில் ஒன்பது கிலோ மீற்றர் தூரத்துக்கு இந்தப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றன.

ஆலங்கேணி, நல்லூர், செம்மங்குன்று, கொல்லகுறிச்சி ஆகிய குளங்கள் தற்போது நன்னீர்த் தன்மையைக் கொண்டுள்ளன.

கொக்குடையான் குளம், பூக்குளம், புறாக்குளம் உட்பட பல குளங்களில் நன்னீர் அதிகளவில் தேக்கப்பட வேண்டும். இதன் மூலம் பூநகரியின் நன்னீர் வளம் பெருகும் எனப் பலரும் கூறுகின்றனர். (க - 410)



கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களின் ஊடகவியலாளர்களுக்கான ஒருநாள் வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது. (421)

## 250 ஏக்கர் பயிர்கள் அழிவு

அக்கராயன், பெப்.3

கிளிநொச்சி பூநகரியின் கரிகாலை நாகபடுவான் குளத்தின் வேலைகள் சிறந்த முறையில் இடம் பெறாமையால் 250 ஏக்கர் வரையான நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் குளத்தின் நீர் வான் வழியாகச் சீரான முறையில் பாய்ந்து சென்றது. ஆனால் இம் முறை வான்வழியாகப் பாய்ந்த நீர், சீராகப் பாயாததால் 250 ஏக்கர் நெற் செய்கை அழிவடைந்துள்ளது.

கோடைமழை பெய்து வான் வழியாகப் பாயுமானால் நெற்பயிர்களை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்படும். வான் பகுதியின் இருபக்கக் கட்டுக்களும், பாதுகாப்பாக அமைக்கப்பட வேண்டும். நீர்ப்பாசனத் திணைக்களம் திட்டமிட்டு வேலைகளை வழங்கிய போதிலும், ஒப்பந்தநபர்கள் உரிய முறையில் வேலைகளைச் செய்யவில்லையெனக் குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்பவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (க-410)

## 'மீட்சி' வெளியீடு

வவுனியா, பெப்.3

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் "மீட்சி" என்னும் கைநூல் அண்மையில் வவுனியாவில் வெளியிடப்பட்டது.

இந்த நிறுவனத்தின் தலைவர் வெ.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா கலந்து கொண்டு நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

இதே நிகழ்வில் அந்த நிறுவனத்தின் உள சமூக பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு வவுனியா தெற்கு கல்விவலய வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் சான்றிதழ்களை வழங்கினார். (ம - 421)



கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் இருந்து ஈரநிலம் தேசியப் போட்டியில் விருது பெற்றுள்ள சாதனையாளர் செல்வி அமிர்தலிங்கம் தர்சனா, புவியியல் ஆசிரியர் ச.இராஜராஜேஸ்வரன், உபஅதிபர் திருமதி இ.அருணாசலம், பாடசாலை முதல்வர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் உயர்தர பகுதித்தலைவர் திருமதி சு.பவானந்தன் ஆகியோருடன் உள்ளார். (ம)

## விசுவமடு ம.வியின் போட்டிகள்

முல்லைத்தீவு, பெப்.3

முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாயலத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் த.இராதாகிருஸ்ணன், பாடசாலை முதல்வர் வி.சிறிகரன், சிறப்பு விருந்தினராகப் பரந்தன் மக்கள் வங்கி கிளை முகாமையாளர் எஸ்.கந்தசாமி, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையின் கல்வி நிர்வாக உத்தியோகத்தர் ந.ராஜ்குமார் மற்றும் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி ஜி.எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-6)

## சிறுதானியச் செய்கையில் மும்முரம் காட்டும் படையினர்

வன்னிப் பிரதேசங் களில் நிலைகொண்டுள்ள படையினர் நெல் உற்பத்தி மற்றும் சோளம், பயறு போன்ற சிறுதானியச் செய் கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந் துள்ள நிலையில் வன்னிப் பிரதேசத்தில் பெருமளவான விவசாய நிலங்களை ஆக்கிரமித்துள்ள படையினர் அங்கு விவசாய நடவடிக்கையில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

இதற்கு ஏற்றவாறாக வன்னியில் கிடைக்கும் தண்ணீர் வசதியும் அவர்களுக்கு சாதகமாக அமைந்துள்ளது. ஏக்கர் கணக்கில் இவர்கள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளதும் அறுவடைக்குத் தயார் நிலையில் அவை உள்ளதும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் அவற்றைப் பார்த்து பெருமூச்சு விட்டுச் செல்கின்றனர். (ம)

## பொதுத் தேவைகளுக்கு கிளி.பாடசாலைகள்

### கற்றல் செயற்பாடுகள் பாதிப்படையும் நிலைமை

அக்கராயன், பெப்.3

கிளிநொச்சி கல்வி வலயத்தில் உள்ள சில பாடசாலைகள் பொதுத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுவதால் மாணவர்களது கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பரந்தன் மகா வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம் என்பன அடிக்கடி பொது நிகழ்வுகள் நடத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இதனால் குறித்த பாடசாலைகளின் மாணவர்களுக்கான விடுமுறை நாள்களும் அதிகரிக்கின்றன.

இந்த நிலையில் அவர்களது கல்வி நிலை கேள்விக் குறியாக உள்ளதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கல்விச் சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. (ம -410)

## கிராமங்களின் அபிவிருத்தி குறித்து நேரில் ஆராய்வு

### வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் நடவடிக்கை

வவுனியா, பெப்.3

வவுனியா தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள கிராம மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டு அறிந்து வருவதுடன் அங்கு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக வேப்பங்குளம், கல்னாட்டிய குளம் ஆகிய கிராமங்களுக்கு பிரதேச சபை உறுப்பினர் பா.பார்த்தீபன் மற்றும் உறுப்பினர்களும் அண்மையில் சென்றனர்.

கல்னாட்டிய குளம் கிராமத்துக்குச் சென்ற இவர்கள் அந்தப் பகுதி கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களைச் சந்தித்து அங்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக கேட்டு அறிந்தனர்.

இதேவேளை, கல் னாட்டிய குளம் இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தின் மைதான புனரமைப்புத் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ம - 421)

## பிரதேச மருத்துவ மனைகளின் கட்டுமானப் பணிகள் ஆரம்பம்

அக்கராயன், பெப்.3

கிளிநொச்சி, பூநகரி, ஜெயபுரத்தில் பிரதேச மருத்துவமனைக்குரிய கட்டுமானப் பணிகள் இவ்வாண்டு தொடங்கவுள்ளதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பா.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் முழங்காவில் ஆதார மருத்துவமனையும், இரு பிரதேச மருத்துவமனைகளும் உள்ளன.

பூநகரி மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றன. பூநகரி மருத்துவமனை தனியார் வீடு ஒன்றில் இயங்கி வருகிறது.

பூநகரி பிரதேச மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் ஒக்டோபர் மாதத்தில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கின்றோம். மருத்துவர் விடுதியும் அமைக்கவுள்ளோம்.

முழங்காவில் ஆதார வைத்தியசாலையிலும் நோயாளர் விடுதிக்கான கட்டடப் பணி இடம்பெற்று வருகிறது.

இதுவும் ஒக்ரோபர் மாதத்தில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வேரவில் மருத்துவமனைக்குரிய கட்டுமானப் பணிகளும், ஜெயபுரத்தில் பிரதேச மருத்துவமனைக்கான கட்டுமானப் பணிகளும் இவ் வருடம் இடம் பெறவுள்ளன.

யுனிசெப் நிறுவன நிதி உதவியுடன் சுகாதாரப் பணிமனையை அமைத்து வருகிறோம்.

யுனிசெப் நாகதேவன் துறையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு உதவ முன்வந்துள்ளனர்.

என்றிப் நிதி உதவியுடன் தம்பிராயம் பகுதியில் ஆரம்பசுகாதாரநிலையவேலைகள் இடம்பெற்று வருகின்றன.

கௌதாரி முனையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவுள்ளோம். ஜெயபுரம் தெற்கில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க உத்தேசித்துள்ளோம்.

ஜெயபுரத்திலும், முக்கொம்பனிலும் நடமாடும் மருத்துவப் பணி நடைபெறவுள்ளது எனவும் தெரிவித்தார். (ம - 410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் 'பங்கர்'கள் வீதி அகலிப்புக்குத் தடை

**இலங்கை மின்சார சபையினர் மற்றும் ரெலிக்கொம் ஆகியவற்றின் கம்பங்களை பின் நகர்த்தும் பணிகள் மிக மந்தமாகவே நடைபெற்று வருவதாக சுட்டிக்காட்டப்பட்டது.**

யாழ்ப்பாணம், பெப்.3

வீதி அகலிப்புப் பணிகளில் தாமதம் ஏற்படுவதற்குப் படையினர் அமைத்துள்ள பங்கர்களும் ஒரு காரணமாக உள்ளன என்று ஒப்பந்தகாரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அகலிப்பு வேலைகள் தாமதமடைவது தொடர்பாகவும் அவற்றுக்கு உடனடியாகவே தீர்வைப் பெற்றுக் கொள்ளும் முகமாகவும் கலந்துரையாடலொன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், வீதி அபிவிருத்தி அதிகார சபை, உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், வீதி அகலிப்பு வேலைகளை மேற்கொண்டுவரும் நிறுவனங்கள், இலங்கை மின்சார சபை, ரெலிக்கொம்மின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போதே மேற்கண்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. அங்கு மேலும் கூறப்பட்டதாவது:

யாழ்.மாவட்டத்தின் பிரதான வீதிகளும் தற்போது அகலிக்கப்பட்டு வருகின்றன. பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, காங்கேசன் துறை வீதி, கண்டி வீதிபோன்றனவே அகலிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது பல்வேறு இடர்பாடுகள் இருப்பதாக வேலைகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்த நிறுவனங்களால் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக இலங்கை மின்சார சபையினர் மற்றும் ரெலிக்கொம் ஆகியவற்றின் கம்பங்களை பின் நகர்த்தும் பணிகள் மிக மந்தமாகவே நடைபெற்று வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

நீர் வழங்கலுக்குரிய ஒழுங்குகளை வீதிகளைப் புனரமைப்பதற்கு முன்பாகவே செய்யுமாறும் புனரமைப்பு செய்யப்பட்ட பின்னர் வீதிகளைக் கொத்திச் செய்ய முடியாது என்றும் அவற்றையும் விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மாலுசந்தி, நெல்லியடிச் சந்தி ஆகியவற்றில் இராணுவத்தினரின் பங்கர்கள் வீதி அகலிப்புக்கு இடையூறாக இருப்பதாகவும் மற்றும் சில இடங்களில் இராணுவத்தினரின் மண் அணைகள் இடையூறாக இருப்பதாகவும் ஒப்பந்தகாரர்களால் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாகவே இராணுவத் தளபதியுடன் பேசிய அரச அதிபர் இந்த பங்கர்கள் மற்றும் மண் அணைகளை அகற்றி ஒத்துழைப்பதாக தளபதி உறுதியளித்ததாகத் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி வேலைகளுக்கு நாகர் கோயில் மணல் அவசரமாகத் தேவையாக இருக்கின்றபோதும் அதைப் பெற்றுக் கொள்வதற்கு சிரமமாக இருப்பதாக ஒப்பந்தகாரர்கள் தெரிவித்தனர். அதற்கு நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் தெரிவித்தார். (ம-5)

# துரத்துகிறது டெங்கு

வலி.வடக்கு, பெப்.3

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

51 வயதான குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் சுகாதாரப் பிரிவினர் புகையூட்டும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதாக சுகாதாரப் பிரிவினர் கூறினர்.

இதேவேளை, டெங்கு நோயின் தாக்கத்தை இல்லாது ஒழிக்கும் வகையில் வீடு வீடாகச்சென்று சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்றும் இந்தச் செயற்பாடுகள் மும்முரமாக இடம்பெறவுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கைகளில் கிராம அலுவலர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவமாதுக்கள், சுகாதாரத் தொண்டர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பிரதேச சபை ஊழியர்கள், பொலிஸார், படையினர் இணைந்து ஈடுபட்டுள்ளனர். (ம-86)

# இடைவழியில் பயணிகளை இறக்கிவிட்ட மினிபஸ்

**பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இது தொடர்பாக முறைப்பாடுகள் செய்யுமிடத்து குறித்த சாரதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது.**

யாழ்ப்பாணம், பெப்.3

இரண்டு மணிநேரம் காத்திருந்து பயணித்த பயணிகளை மினிபஸ் இடைவழியில் இறக்கிவிட்டதால் இரண்டு மைல் தூரம் நடந்து சென்ற அனுபவம் நேற்று முன்தினம் கிளாலிப் பகுதி மக்களுக்கு ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் கிளாலிக்குப் புறப்பட்ட மினிபஸ் எழுதுமட்டுவாழ் சந்திக்கு அப்பால் செல்ல மறுத்து பயணிகளை இறக்கிவிட்டு சென்றது.

இதில் பயணித்த பெண்கள், சிறுவர்கள் உட்பட பதினைந்துக்கும் மேற்பட்டோர் கால்நடையாக கிளாலியில் உள்ள தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

பயணிகளிடமிருந்து கிளாலி வரைக்குமான கட்டணம் அறவிட்ட போதிலும் தம்மை இடை நடுவில் இறக்கிவிட்டுச் சென்றது குறித்து பயணிகள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த மினிபஸ்ஸின் வருகைக்காக கிளாலியில் காத்திருந்த 20 இற்கு மேற்பட்ட பயணிகள் மினிபஸ் வராது என அறிந்து கால்நடையாக எழுதுமட்டுவாழ் சந்திவரை வந்து தமது பயணத்தை தொடர்ந்ததாகவும் இந்த விடயம் தொடர்பாக மினிபஸ் சங்கத்துக்கு முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி மினிபஸ் சங்கத் தலைவர் க.சத்தியமூர்த்தியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இது தொடர்பாக எந்த விதமான முறைப்பாடுகளும் எமக்குக் கிடைக்கவில்லை.

பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இது தொடர்பாக முறைப்பாடுகள் செய்யுமிடத்து குறித்த சாரதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# குற்றச்செய்திகள்

காலாவதியான அனு மதிப்பத்திரத்துடன் பல லட்சம் ரூபா பெறுமதியான பலகைகளையும், மரங்களையும் இரு வாகனங்களில் ஏற்றிச் சென்ற இருவருக்கு மல்லாகம் நீதிவான் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

தென்னிலங்கையிலிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பலகைகளையும் காட்டு மரங்களையும் ஏற்றி வந்த இரு லொறிகளை மானிப்பாயில் வைத்து சோதனை செய்த மானிப்பாய் பொலிஸார் மரம் ஏற்றி வருவதற்கான அனுமதிப்பத்திரம் காலாவதியாகி இருப்பதைக் கண்டு பிடித்தனர்.

இதைத் தொடர்ந்து இரு சாரதிகளுக்கும் எதிராக மல்லாகம் நீதிமன்றில் பொலிஸாரால் தாக்கல் செய்யப் பட்ட வழக்கில் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து நீதி வான் இவர்களுக்கு இந்த அபராதத்தை விதித்தார். (ம-115)

* * *

கைத்தொலைபேசியில் கதைத்தவாறு மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதுண்டு விழுந்ததனால் அவரது கால் முறிந்தது.


இதனால் அந்த வாகன உரிமையாளரிடமிருந்து நஷ்ட ஈடாகத் தனக்கு 4 லட்சம் ரூபாவைப் பெற்றுத்தருமாறு காயப்பட்டவர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார். எனினும் காயப்பட்டவருக்கு மனிதாபிமான அடிப்படையில் 50 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கலாம் என எதிர்தரப்பினர் மன்றில் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த வழக்கு விளக்கத்துக்காக எதிர்வரும் 28 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரியில் இந்த விபத்து இடம் பெற்றது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் கதவுடன் மோதியே அவருக்குக் கால் முறிந்தது.

நேற்று முன்தினம் மன்றில் ஆஜரான அவர் தான் இதுவரை நாள்களும் நடக்க முடியாததால் எதுவித வருமானமும் இன்றி இருந்துள்ளார் எனவும் நஷ்ட ஈடாக 4 லட்சம் ரூபா பெற்றுத் தருமாறும் கோரியிருந்தார். எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் கோப்பாயைச் சேர்ந்த பிரஸ்தாப வழக்குத் தொடுத்த நபருக்கு மனிதாபிமான அடிப்படையில் மட்டும் 50 ஆயிரம் ரூபா தரமுடியும் என்றும் மேலதிகமாக நஷ்ட ஈடுதர முடியாது எனவும் தெரிவித்தார். (ம - 4)




ஊர்காவற்றுறை பிரதேச சபையின் புதிய கட்டடம் நேற்று வியாழக் கிழமை திறந்து வைக்கப்பட்டது. பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார். (ம-7)

# குண்டு மீட்பு

வலி.வடக்கு, பெப்.3

வலி.வடக்கு காங்கேசன் துறையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் அமைந்துள்ள பகுதியில் இருந்து வெடிக்காத நிலையில் பெரிய குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களே இதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கென மேடை அமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த போதே இது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பலாலி படைத் தலைமையகத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையின் பொறியியல் பிரிவினர் உடனடியாக குறித்த இடத் துக்கு விரைந்து குண்டை மீட்டுச் சென்றனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் இந்தப் பகுதியில் அமைந்து 16 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ம-86)

# பளை ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டடம் அமைப்பு

## பணிகள் நேற்று ஆரம்பம்

பளை, பெப்.3

பளை மாவட்ட வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. புதிய கட்டடத்திற்கான அடிக்கல் கடந்த நவம்பர் மாதம் நாமல் ராஜபக்ஷவால் நடத்தப்பட் டது. பணிகள் நேற்று ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலர் சி.சிவப்பிரகாசம், படை உயர் அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

2000 ஆம் ஆண்டு இடம் பெற்ற யுத்தத்தால் வைத்தியசாலை வளாகத்தில் இருந்த வெளிநோயாளர் பிரிவு, விடுதிகள், பிரசவ விடுதி, வைத்திய அதிகாரி வதிவிடங்கள் உட்பட அனைத்துக் கட்டடங்களும் தரைமட்டமாயின.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்ததை அடுத்து வைத்தியசாலையை அண்டிய பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் வைத்தியசாலை வளாகத்தில் ஏ-9 வீதியை அண்டிய பகுதி யில், வைத்தியசாலை நிர்வாக அலகு கட்டடம் 46.2 மில்லியன் செலவில் அமைக்கப்படவுள்ளது. (ம - 9)

# பருத்தித்துறையில் வீதிகளுக்கு 'காப்பெற்'

பருத்தித்துறை, பெப்.3

பருத்தித்துறையில் உள்ளூராட்சி சபைக்கான வீதிகளை 'காப்பெற்' வீதிகளாகப் புனரமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

தம்பசிட்டி வீதி, விநாயக முதலியார் வீதி ஆகியவற்றை 'காப்பெற்' வீதிகளாக அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கல்லூரி வீதி, இரண்டாம் குறுக்குத்தெரு, நான்காம் குறுக்குத் தெரு ஆகியனவும் 'காப்பெற்' வீதிகளாக மாற்றியமைக்கப்படுகின்றன. (ம-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எலும்புக்கூடு உறவினர்களிடம்

தனங்களப்பு பகுதியிலிருந்து கடந்த மாதம் 25 ஆம் திகதி மீட்கப்பட்ட பெண்ணின் மண்டையோடு மற்றும் உடலின் எச்சங்கள் என்பன நேற்று முன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மூன்று மாதங்களுக்கு முன்பு காணாமல் போனசுப் பிரமணியம் அற்புதமலர் (வயது-24) என்பவரே கடந்த மாதம் எலும்புக் கூடாக சாவகச்சேரி தனங்களப்பு பகுதியிலிருந்து மீட்கப்பட்டிருந்தார். உடற்கூற்று ஆய்வுகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த மண்டையோடு மற்றும் எலும்புகள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த எலும்புகளில் பன்றி தின்றமைக்கான அடையாளங்கள் காணப்படுவதுடன் உடலின் பல பாகங்களும் சேதமடைந்து காணப்படுவதால் மரணத்துக்கான உறுதியான காரணங்கள் எதனையும் தெரிவிக்க முடியாதென வைத்தியசாலை வட்டாரங்கள் ெரிவித்தன.

அத்துடன் குறித்த யுவதி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்று அவரது ஆடைகளின் கிழிவுகளைக் கொண்டு ஊகிக்க முடியுமே தவிர உறுதியாகச் சொல்ல முடியாது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த இளம் பெண்ணின் எலும்புக் கூட்டை எரிக்கக் கூடாது என்றும் நிபந்தனையுடன் அவரது தந்தையிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

எலும்புக் கூடு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த நீதிவான் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் பொறுப்பில் உள்ள எலும்புக் கூடு தொடர்பான மருத்துவ அறிக்கையை சட்ட வைத்திய அதிகாரியிடம் பெற்று விசாரணைகளை நடத்தினார். (ம-5-9)

# உழவர் தின விழா யாழில் இடம்பெறுமா?

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்ப்பாணக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் உழவர் தின விழா இம்முறை யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படுமா என விவசாயிகள் கேட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் உள்ள உள்ளூராட்சி சபைகள் வருடா வருடம் தமது கலாசார நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் உழவர் தின நிகழ்வுகளை சிறப்புடன் நடத்தி வருகின்றன.

30 வருட இடைவெளிக்குப் பின்னர் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட உள்ளூராட்சி சபைகள் யாழ். மாவட்டத்தில் உள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகள் உள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயாராக உள்ளன.

**தென்னிலங்கையில் உள்ள உள்ளூராட்சி சபைகள் வருடா வருடம் தமது கலாசார நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் உழவர் தின நிகழ்வுகளை சிறப்புடன் நடத்தி வரு கின்றன.**

எதிர்வரும் ஏழாம் திகதி தைப்பூசத் தினத்தன்று அந்தந்த உள்ளூராட்சி சபைகள் தத்தமது பிரதேச மக்களின் பங்களிப்புடன் அறுவடை நிகழ்வை நடத்துவதுடன் அங்கிருந்து எடுத்துவரும் நெல் மணிகளை பொங்கலிட்டு கலந்துகொள்வோருக்கு பகிர்ந்தளிப்பதுடன் அந்தந்தப் பிரதேச கலாசார நிகழ்வுகளை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளையும் நடத்தி எமது எதிர்கால சந்ததியினருக்கு எமது கலாசாரங்கள் பற்றிய தெளிவான விழிப்புணர்வை ஊட்ட வேண்டுமெனவும் கேட்டுள்ளனர். (ம-9)

# 69 கொடை வள்ளல்கள்

வடமராட்சி, பெப்.3

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து கோப்பாய் கல்வியியற்கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் 69 பேர் நேற்று இரத்ததானம் செய்தனர்.

இரத்த வங்கியில் இரத்தம் குறைந்த நிலையில், யாழ். போதனா வைத்திய சாலை விடுதியில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு இரத்தத்தை வழங்க முடியாத அளவுக்கு தட்டுப்பாடு இருந்து வருவதனால் குருதிக் கொடையாளர்கள் இரத்த தானம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கம் , லயன்ஸ் கழகம் என்பன இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையால் கோப்பாய் கல்வியியற்கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மாணவர்கள் இரத்ததானம் செய்ய முன்வந்தனர்.

நேற்றைய தினம் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 57 பேரும், ஆசிரிய

**இரத்த வங்கியில் இரத்தம் குறைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு இரத்தத்தை வழங்க முடியாத நிலை இருந்தது.**

பயிற்சிக்கலாசாலை மாணவர்கள் 12 பேரும் தத்தம் கல்லூரியில் வைத்து யாழ். போதனா வைத்தியசாலை நடமாடும் இரத்த வங்கியில் இரத்த தானம் செய்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததிற்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் செஞ்சிலுவைச்சங்க கோப்பாய்ப்பிரிவு, செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை உப தலைவர் டாக்டர் கா. தியாகராசாவின் ஒத்துழைப்புடன் தொண்டர்களைத் திரட்டி இரத்த தானம் செய்து வந்துள்ளதாக பிரிவுத் தலைவர் இ. மயில்வாகனம் தெரிவித்தார். (ம-8)

# மாசாரில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மின் இணைப்பு

## இலவசமாக வழங்க நடவடிக்கை

பளை, பெப்.3

பளை பிரதேசத்துக்கு உட்பட்ட மாசார் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்க இலங்கை மின்சார சபையினரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்துக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார விநியோகம் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து குடியிருப்புகளுக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்கள் சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தில், கடந்த திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதி மக்களுக்கு இலவச மின்னிணைப்பு வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்கள் கடந்ததிங்கட்கிழமை பளைப் பிரதேச செயலகத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டதாகவும் அங்கு படிவங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் சாவகச்சேரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# மந்தகதியில் வீதிப் புனரமைப்பு நெருக்கடியில் பயணிகள்

பளை, பெப்.3

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வாரிபட்டம் வீதியின் புனரமைப்புப் பணிகள் மந்தகதியில் நடைபெறுகின்றன. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்களுடன் இந்த வீதியில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

**பயணிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் நீண்ட தூரம் நடந்து செல்கின்றனர்.**

மருதங்கேணி மகா வித்தியாலயம், உடுத்துறை மகா வித்தியாலயம் ஆகியவை அமைந்துள்ள இந்த வீதி, துரித மீட்சித் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் புனரமைக்க ஒப்பந்தக்காரரிடம் கையளிக்கப்பட்டது.

முன்னர் இந்தப் பகுதி மக்களின் பிரதான வீதியாக காணப்பட்ட இந்த வீதி கனரக வாகனங்களின் பாவனையால் மோசமாகச் சேதமடைந்து இலக்காகி காணப்பட்டது.

இதனைப் புனரமைக்க ஒப்பந்தம் செய்தவர்கள் வீதியை கிரவல் பறித்து பரவிவிட்டதுடன் கற்கள் அனைத்தும் பறித்து அடுக்கி வைத்துள்ளனர்.

புனரமைப்பு வேலைகள் முடிவடையாததால் பயணிகளின் வாகனங்கள் வேறு வீதியால் செல்வதால் வாகனங்களில் பயணிக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வேலையைத் துரிதப்படுத்துமாறு என்றிப் திட்டப் பணிப்பாளர், அரச அதிபர், பிரதேச செயலர் ஆகியோருக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம- 207)

# பொலிஸார் துன்புறுத்தியதாக ஆணைக்குழுவில் முறைப்பாடு

மாவீர் தினத்தை முன்னிட்டு சட்டவிரோத கூட்டம் கூடினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை பொலிஸார் துன்புறுத்தியதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பாகத் தெரியவந்துள்ளதாவது:

சுன்னாகத்தைச் சேர்ந்த துரைராசா லோகேஸ்வரன்- (வயது- 30) என்பவர் மாவீரர் தினத்தை முன்னிட்டு சட்ட விரோதமாகக் கூட்டம் கூட்டினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த நபர் தான் பொலிஸாரால் துன்புறுத்தப்பட்டிருந்ததாக முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி புன்னாலைக்கட்டுவனில் இந்த நபர் கூட்டமொன்றை நடத்தியுள்ளார் எனவும் இந்தக் கூட்டத்தில் வைத்து பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பொதியை வழங்கியுள்ளார் என்று குறித்த நபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸார் இந்த நபரைக் கைது செய்திருந்தனர்.

**பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் குறித்த நபர் மீது பொலிஸார் மின்சார கம்பியால் சூடு வைத்துள்ளனர்.**

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் குறித்த நபர் மீது பொலிஸார் மின்சார கம்பியால் சூடு வைத்துள்ளனர். இதனால் மேற்படி நபரின் கை எரிகாயத்துக்கு உள்ளானது. இதனைத் தொடர்ந்து போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இது தொடர்பாகவே இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-5)

# அரச ஊழியர்களை மிரட்டிய நிர்வாகி

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து பிரிவினுள் நுழைந்த தனியார் சாரதி பயிற்சிப் பாடசாலை நிர்வாகி ஒருவர் அங்குள்ள அரச ஊழியர்களை மிரட்டிய சம்பவம் ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:

யாழ்.மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து பிரிவினுள் கடந்த வாரம் தனியார் சாரத்தியப் பயிற்சிப் பாடசாலை நிர்வாகி ஒருவர் உள் நுழைந்துள்ளார். இந்த நிர்வாகி அங்குள்ள ஆவணங்கள் சிலவற்றை எடுக்க முற்பட்டபோது கடமையில் இருந்த மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து உத்தியோகத்தர் அதனைத் தடுத்துள்ளார்.

அதற்கு சாரதியப் பாடசாலை நிர்வாகி, குறித்த அரச ஊழியரை தரக் குறைவான வார்த்தைகளால் பேசியுள்ளார். அத்துடன் அடிப்பேன் எனவும் மிரட்டியுள்ளார். இதனைத் தட்டிக் கேட்க முற்பட்ட போது அரச ஊழியரையும் சாரத்தியப் பயிற்சிப் பாடசாலை நிர்வாகி மிரட்டியுள்ளார். இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு வாரம் ஆகியும் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டுகின்றது. (ம-5)

# சுற்றுலாத்துறை விருத்திக்காக குடாநாட்டில் 4 திட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்.குடாநாட்டில் 2011 இல் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் நான்கு பெரிய திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறார். குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியூடாக இந்தத் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

* சுழிபுரம் பிரதேச சபையில் நவீன பஸ்தரிப்பு நிலையம் அமைத்தல்.
* கீரிமலையில் குளியல் அறை, மலசலகூட வசதிகளுடனான நவீன கட்டட வசதியை ஏற்படுத்தல்.
* புங்குடுதீவில் சுற்றுலாப் பயணிகள் இளைப்பாற்று மண்டபம் அமைத்தல்.
* சாட்டி கடற்கரையில் சுற்றுலாப் பயணிகளுக்கான ஆடை மாற்றும் இடமும் குளியல் அறையும் அமைத்தல்.

மேற்படி நான்கு அபிவிருத்திகளுக்கும் 16 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. (உ-01)

# போதையில் நின்றோர் செலுத்தினர் அபராதம்

வீதியில் மதுபோதையில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்திய [illegible] மாட்டிக் கொண்டனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட இவர்களுக்கு நீதிவான் தலா 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளார். மானிப்பாய் பிரதான வீதியில் மதுபோதையுடன்நின்று போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியது [illegible] மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்திய அறுவர் ரோந்து சென்ற பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர். இவர்களைக்கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தியபோது இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

குடாநாட்டில் மதுபான நிலையங்கள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து மதுப்பிரியர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

மதுப்பிரியர்களின் தொல்லை குறித்து பொது மக்கள் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து இவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தீர்மானம்; காலம் கடந்த ஞானம்

மட்டக்களப்பு,பெப்.3

கிழக்கு மாகாண சபையினர் அண்மையில் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை மாகாணசபையில் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கின்றனர். இது காலம் கடந்த ஞானமாகும். கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய மூன்று வருடங்கள் முடிந்து அடுத்த தேர்தலை எதிர்நோக்கியிருக்கின்ற வேளையில்தான் அவர்களுக்கு இந்த ஞானம் பிறந்திருக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

பட்டிப்பளை, வால்கட்டு தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று வரை சோரம் போகாமல் தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் தீர்வைப் பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததன் நிமித்தமாக இப்போது பலர் கூட்டமைப்பின் நிலைப்பாடு சரியானதென்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என்கிறார் அரியநேத்திரன் எம்.பி.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு தாயகத்தில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களும் உள்ளடக்கப்பட்ட சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு தீர்வையே வலியுறுத்தி வருகிறோம்.


ஆனால், இப்போதுதான் கிழக்கு மாகாண சபையில் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்கின்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கின்றனர். இதுவொரு காலம் கடந்த ஞானம் என்றுதான் நான் நினைக்கின்றேன். ஏனென்றால் கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய மூன்று வருடங்கள் முடிந்து அடுத்த தேர்தலை எதிர்நோக்கியிருக்கின்ற வேளையில்தான் அவர்களுக்கு இந்த ஞானம் பிறந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக கூறி வருவது காணி அதிகாரம், பொலிஸ்அதிகாரம் உள்ளிட்ட அதிகாரங்களுடன் கூடிய தீர்வுதான். இப்போது பலர் அதனை உணர்ந்து கூட்டமைப்பின் நிலைப்பாடு சரியென்பதைப் புரிந்திருக்கின்றனர். இதனை இப்போது கிழக்கு மாகாணசபையும் ஏற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் அது குறித்து ஏகமனதான ஒரு தீர்மானத்தையும் நிறை வேற்றியுள்ளது.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று வரை சோரம் போகாமல் தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வைப் பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததன் நிமித்தமாக இப்போது பலர் கூட்டமைப்பின் நிலைப்பாடு சரியானதென்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால். இந்தக் காணிக்காகவும் பொலிஸ் அதிகாரத்துக்காகவும் கடந்த காலங்களில் ஆயுதம் ஏந்திப் போராடிய சிலர் இப்போது காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் தேவையில்லை எனக் கூறுகின்றார்கள். அவர்களுக்கு எந்த அதிகாரம் தேவை என்பதை மக்களே புரிந்து கொள்வார்கள் - என்றார். (ச)

## சாதனையாளர்களின் உருவச் சிலைகள் திறப்பு



மண்டூர்,பெப்.3

மயிர்க்கூச்செறியும் சாதனைகள் பலவற்றை இலங்கை மற்றும் வெளிநாடுகளிலும் நிகழ்த்தியதன் மூலம் உலக சாதனைகள் பல படைத்த பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸ், கலாபூஷணம் சாண்டோ வே.தாஸ் ஆகியோரின் உருவச்சிலைகள் ஆரையம்பதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டன.

இந்தச் சிலைகளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி கே.தங்கேஸ்வரி, மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத் தலைவர் கே.ரஞ்சிதமூர்த்தி ஆகியோர் திறந்து வைத்துள்ளனர்.

இவர்கள் யானைகளை நெஞ்சின் மேல் ஏற்றுதல், ஓடும் 36 உழவு இயந்திரங்களை மார்பின் மேல் ஏற்றுதல் உட்பட 50 இற்கும் அதிகமான சாதனைகளை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-21-31)

## கால்நடைகளுக்கும் துப்பாக்கிச் சூடா?

மட்டக்களப்பு,பெப்.3

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களின் கால்நடைகள் அம்பாறை மாவட்டத்தினைச் சேர்ந்த ஊர்காவல் படை, இராணுவத்தினர் ஆகியோரினால் தினமும் சுடப்பட்டு வருவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரையில் வளர்க்கப்படும் கால்நடைகளில் இதுவரையில் 50 மாடுகள் துப்பாக்கி சூட்டினால் இறந்தும், 150 இற்கு மேற்பட்ட மாடுகள் துப்பாக்கிச் சூட்டில் காயப்பட்டும் உள்ளதாக கால் நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் வருடாந்தம் பெரும்போக வேளாண்மைச் செய்கைக் காலங்கள் வரை மட்டக்களப்பு ,அம்பாறை மாவட்டத்தின் எல்லை பிரதேசங்களான கெவுளியாமடு, மங்களகம, திவுலானை, கச்சக்கொடி, நவகிரி, போன்ற பிரதேசங்களில் தங்களது கால்நடைகளை கட்டி வளர்த்து வருவது வழக்கமாகும்.

அதுபோன்று இந்த வருடமும் தமது கால் நடைகளை வளர்த்துவரும் வேளையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக கால்நடை வளர்ப்போர் தெரிவித்தனர். தமது கால்நடைகள் ஏன் இவ்வாறு நடக்கின்றது என்று தாம் இது வரையில் அறியாத நிலையில் உள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தவிடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர் போன்றோரிடம் முறையிட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ச-31)

## கட்டடம் மாநகர சபையிடம்

**கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் 30 வருடங்களாக பொலிஸ் காவலரணாக கட்டடம் மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டது.**

மண்டூர்,பெப்.3

30 வருடங்களாக இலங்கைப் பொலிஸாரினால் அரசடி பொலிஸ் காவலரணாக பாவனையில் இருந்து வந்த மட்டக்களப்பு மாநகர சபையின் கீழுள்ள அரசடி நூலகக் கட்டடம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாநகர சபையிடம் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் இந்தக் கட்டடத்தில் இலங்கைப் பொலிஸார் நிலைகொண்டிருந்ததுடன், பொலிஸ் காவலரணாகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

போர் முடிவுற்றதைத் தொடர்ந்து பொலிஸ் மா அதிபர் என்.ஏ. இலங்ககோனின் பணிப்புரையின் கீழ் இந்தக் கட்டடம் மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கையளிக்கப்பட்ட மாநகர சபைக்குரிய நூலகக் கட்டடத்தை மாநகர முதல்வர் திருமதி சிவகீதா பிரபாகரன் தலைமையில் மாநகர சபை உறுப்பினர்களும் அதிகாரிகளும் பார்வையிட்டனர்.

இந்தக் கட்டடம் புனர்நிர்மானம் செய்யப்பட்டு அரசடி நூலகமாக இயங்க வைக்கப்படவுள்ளதாக மாநகர முதல்வர் தெரிவித்தார். (ச-31)



*சேனைக்குடி கணேசா முன்பள்ளி பாடசாலை சிறுவர் பூங்கா நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பூங்காவை நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன,கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீரா சாஹிப் ஆகியோர் கலந்துகொண்டு திறந்து வைக்கின்றனர். (ச-31)*

## தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும்

### யோகராஜன் எம்.பி கூறுகிறார்

நுவரெலியா, பெப்.3

அரசு கணிப்பீடு செய்துள்ள 37,000 ஏக்கர் தரிசு நிலங்களை தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்தது ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்படவேண்டும் என்ற ஏகோபித்த குரல் எங்கும் ஒலிக்கவேண்டும்.

இந்தத் திட்டத்தை முறையாக நடைமுறை செய்வதன் மூலம் மலையக சமூகத்தினர் ஒரு ஏக்கர் தேயிலைக் காணிக்கு உரிமையாளராவதுடன் 'சிறு தேயிலைத் தோட்ட முதலாளி' என்ற மதிப்பையும் பெறுவார்கள். - என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை, கிளாஸ்கோ தோட்ட நிதஸ்டல் பிரிவில் நடைபெற்ற இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத் தேவைகளையும் தொழில் உரிமைகளையும் உறிஞ்சி எடுத்துவரும் தோட்ட நிர்வாகங்களும், லாபத்தை மட்டுமே குறியாகக் கொண்டுள்ள கம்பனிகளும் சட்ட மீறல்களிலும், மனித உரிமைகளை அவமதிப்பதிலும், கூட்டு ஒப்பந்தத்தை சிதைப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சுயமாக வீடமைத்துக் கொள்வதற்கு வசதியாக 7 பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். மற்றைய சமூகங்களுக்கு இருக்கின்ற வீட்டுரிமை தோட்டத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கவேண்டும்.

தொழிற்சங்க ரீதியில் மலையக சமூகத்தை கூறு போடும் அவலம் நீங்க வேண்டும். மற்றவர்களைப் போல் அதிகாரமும் உரிமையும் கொண்ட சமூகமாக மலையக மக்கள் மறு மலர்ச்சி காணவேண்டும்.

தோட்டப் பகுதியில் உழைப்பைச் சுரண்டும் நிர்வாகங்களுடன் போராட்டம் நடத்திக் களைத்துப் போன உழைக்கும் சமூகத் தின் துயரங்களை நேரில் பார்வையிடுவதற்கு அரசியல் வாதிகளும், தொழிற் சங்கப் பிரமுகர்களும் முன்வர வேண்டும்.

கூட்டு ஒப்பந்தத்தை மீறிச் செயற்படும் தோட்ட நிர்வாகிகளை நீதியின் முன் நிறுத்தி நீதியை நிலை நாட்ட வேண்டும்.

தொழிற்சங்க அரசியல் முரண்பாடுகளும் அர்த்தமில்லாத கருத்து வேறுபாடுகளும் சமூகச் சிதைவை ஏற்படுத்தி வருவதால் வருங்கால சந்ததியின் எதிர்காலம் சூனியமயமாகி வருவதை தோட்டப்புற இளைஞர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சொந்த வீட்டில் வாழும் சுதந்திரமான சமூகமாக நாம் மாறுவதற்கு அனைவரும் அணி திரள்வதே இன்றைய அவசியமாகும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EUROPEAN COMMISSION
Humanitarian Aid and Civil Protection
DRC DANISH REFUGEE COUNCIL
N-GACDO
என்-காக்டோ
Oxfam

# INVITATION TO TENDER

## Procurement of Construction Material & Hardware Items

The National Gender and Community Development Organization (N-GACDO) is implementing a project in the Mullaitivu District of Sri Lanka, in partnership with Oxfam GB and funded by the European Commission – Humanitarian aid and Civil Protection (ECHO) through the Danish Refugee Council (DRC), (Contract No: ECHO/LKA/BUD/2011/91011). The project aims to address the Shelter, WASH & Food Security Assistance to conflict affected returnees in Mullaitivu District. N-GACDO works in Mullaitivu District to support the Government's resettlement process. To this effect N-GACDO invites eligible Local Suppliers, Traders (Importers), Distributors and Contractors having the capacity to supply, construction materials, as noted below to submit bids on an urgent basis.

**Category 01: Hardware Items**

| Tender Number | Description | Specifications | Unit | Qty |
|---|---|---|---|---|
| VAVNGDHW2012/01 | GI Pipe | Ø1.25", 18' Long & 2 mm Thick | Pipe | 156 |
| | GI Pipe | Ø1", 18' Long & 2 mm Thick | Pipe | 182 |
| | GI Pipe | Ø0.75", 18' Long & 1.8 mm Thick | Pipe | 271 |
| | GI Pipe | Ø0.5", 18' Long & 1.8 mm Thick | Pipe | 325 |
| | GI Pipe | 2" - 12 feet -Heavy duty | Piece | 50 |
| | Tin sheet | 34G [6'H x 2'-2"W] | Nos | 2920 |
| | Tin sheet | 32G [6'H x 2'-2"W] | Nos | 730 |
| | Tin sheet | 32G [7'H x 2'-2"W] | Nos | 1460 |
| | PVC pipe | 110 mm - T250 & 6ft Length | Piece | 365 |
| | Squatting pan | Pan & U-bend - Ceramics -Medium | Set | 365 |
| | Wire Nail | 3" | Kg | 26 |
| | Wire Nail | 4" | Kg | 52 |
| | Iron nail | 3" | Kg | 182.5 |
| | Iron nail | 2" | Kg | 91.25 |
| | Iron nail | 1.5" | Kg | 54.75 |
| | Cap nails | 1.5" | Kg | 104.25 |
| | Re-bar | Y10mm (Grade II) & L-16' | bar | 2190 |
| | Polythene | 1000 G – Black | Sq.ft | 26615 |
| | Binding Wire | 18 Gauge GI | Kg | 177 |
| | Wood Preservative | Oil-type preservatives,20 liter can | Liter | 469 |
| | Tower bolt with steel screws | 4" Oxidized | Nos | 312 |
| | Butt hinge with screws | 6"x4" Oxidized | Nos | 156 |
| | Butt hinges with screws | 4"x3" Oxidized | Nos | 416 |
| | Hasp & staples with screws | 6" | Nos | 52 |
| | Hook with eye | 6" | Nos | 416 |
| | Door handle with screws | 6" | Nos | 52 |
| | T-Hinges with screws | 6" | Nos | 730 |
| | Door handle with screws | 4" | Nos | 365 |
| | Tower Bolt with screws | 6" | Nos | 365 |
| | Zn Al Corrugated roofing sheet | 10' long, 32 gauge | Nos | 832 |
| | Ridge Tiles | No 1 quality | Nos | 624 |
| | Tar sheet | Wide 2' | Feet | 728 |
| | J- Hooks with diamond and rubber washers | 4" | Nos | 2600 |
| | Cement | 50Kg & OPC (107) | Bags | 2671 |
| | Pulley | Ø6" | Nos | 50 |
| | GI bucket | No-10 | Nos | 50 |
| | Nylon rope | 15mm thick | Meter | 1250 |
| | Chlorine | HTH - 70% | Kg | 50 |
| | Tyre strands for thatching of cadjans | 1.5 feet | Kg | 52 |
| | Coir rope | 5 mm thick | Kg | 104 |
| | Kerosene | Kerosene | Liter | 250 |

**Category: 02 Timber items and Door**

| Tender Number | Description | Specifications | Unit | Qty |
|---|---|---|---|---|
| VAVNGDTI2012/01 | 4"x2" Class III Timber | 11'-0" Long | Nos | 156 |
| | 4"x2" Class III Timber | 8'-6" Long | Nos | 104 |
| | 2"x2" Class III Timber | 11'-0" Long | Nos | 312 |
| | 2"x2" Class III Timber | 10'-0" Long | Nos | 52 |
| | 2"x2" Class III Timber | 8'-6" Long | Nos | 260 |
| | 2"x2" Class III Timber | 3'-0" Long | Nos | 52 |
| | 2"x1" Class III Timber | 10'-0" Long | Nos | 156 |
| | 2"x1" Class III Timber | 6'-0" Long | Nos | 1040 |
| | 4"x2" Class II Timber | 10'-0" Long | Nos | 1460 |
| | 2"x2" Class II Timber | 10'-0" Long | Nos | 1460 |
| | 2"x1" Class II Timber | 10'-0" Long | Nos | 2555 |
| | Single shutter door sash | 1" Thick & 6'x2'-6" sized timber ledged, braced and batten door sash (Sappu timber planks) | Nos | 52 |
| | Single shutter window sash | 1" Thick & 1'-6"x 3' sized ledged, braced and batten window sash (Sappu timber planks) | Nos | 208 |

**Category 03: Local Construction Materials**

| Tender Number | Description | Specifications | Unit | Qty |
|---|---|---|---|---|
| VAVNGDLC2012/01 | Cadjan Leaves | Minimum 8 feet | Pairs | 7020 |
| | Cement blocks | 12"x6"x4" | Nos | 110650 |
| | Course sand | | Cube | 124 |
| | Fine sand | | Cube | 49 |
| | Gravel | | Cube | 26 |
| | Metal | 3/4" | Cube | 75.25 |

The solicitation tender documents with detailed specifications will be available for collection from the undernoted address from date 03/02/2012 to date 16/02/2012 during office hours, (9.00 am to 3.30 pm) on working days. Completed sealed bid documents must be dropped in the tender box held at the same location before 5.00 pm on date 16/02/2012. Bids will be opened through public bids opening and Bidders can contact below address on 17/02/2012 (10.00 to 15.00 hrs) for bids opening. A pre bid meeting will be held on 09/02/2012 at 10.30 am at the same location, where the tender procedures will be briefed and the complete specifications will be made available to the intended bidders.

The Chairman Tender Committee,
National Gender and Community Development Organization,
PillaiyarKovilVeethy,
MathavuvaithaKulam,
Vavuniya.
Telephone 0242222267

# காணவில்லை



ஒலுமடு, மாங்குளத்தைச் சேர்ந்த
தில்லை நடராசா கந்தசாமி(37)
என்பவரை கடந்த 2011.12.25 ஆம் திகதி வியாபார நிமித்தம் கொழும்பு சென்றார். இவரை இதுவரை காண வில்லை. தயவு செய்து இவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தில்லைநடராசா பூமணி
ஒலுமடு, மாங்குளம். (13795) (6-7-8)

# மரண அறிவித்தல்கள்



## அன்னப்பிள்ளை சொர்ணவடிவேல்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை சொர்ணவடிவேல் (01.02.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும் சின்னையா - செல்லாச்சி தம்பதியரின் மருமகளும் சொர்ணவடிவேலுவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சிவக்கொழுந்து, செல்லம்மா ஆகியோரின் சகோதரியும், மங்கையர்க்கரசி (R.D.A), விக்னேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற மீன லோசினி (ஆசிரியை) மற்றும் மதிவதனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், தெய்வேந்திரராசா, ஜெயராஜன் (லண்டன்), யோகரட்ணம், செந்தில் நாதன் (லண்டன்) ஆகியோரின் மாமியும். லம்போதரன், கீர்த்தனா, கிசாந், கீர்த்திகா, மதுரங்கன், சாயிரங்கன், ஜனனி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய். (13730) (45-6-7)

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி மகேஸ்வரி இராமலிங்கம்

*(யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் முன்னாள் ஆசிரியையும், முன்னாள் மாணவியும்)*



திருமதி மகேஸ்வரி இராமலிங்கம் (மகேஸ் ரீச்சர்) 27.01.2012 அன்று U.K. பர்மிங்ஹாமில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சி.இராமலிங்கம் (R.M.P) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சித்திராஞ்சன் (ரஞ்சன் Supdt.of Police, கொழும்பு), பேராசிரியர் சித்திரமோகன் (U.K), ஆகியோரின் பாசமிகு தாயும், மரீனா (கொழும்பு), சுமித்திரா (U.K) ஆகியோரின் அன்பு மாமியும் அர்ச்சனா, ஆரோன் (கொழும்பு), அனிற்றா, தாமரா (U.K) ஆகியோரின் அருமைப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கான இரங்கற் திருப்பலி யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் சிற்றாலயத்தில் நாளை (04.02.2012) சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த இரங்கல் திருப்பலியில் அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(13731)(2-6-7) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 ★ 03 ★ 1934



மறைவு
29 ★ 01 ★ 2011

## சரவணமுத்து அண்ணாமலை

திதி: ஏகாதசி (03.02.2012)

எம்மை எல்லாம் வளர்த்து
ஆளாக்கிய அன்புத் தெய்வத்தின்
முதலாம் ஆண்டை நினைவு கூருகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(13729)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரகசிய கஞ்சா செடிகள்



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் ஒக்லேண்ட் நகரில் வெளியுலகுக்கு தெரியாமல் இரகசியமாக வளர்க்கப்படும் கஞ்சா பண்ணையின் புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

எய்ட்ஸ் நோயாளிகள், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கிமோதெரபி சிகிச்சை பெற்று வருபவர்கள் ஆகியோருக்கு பசி எடுப்பதற்கான மருந்து கஞ்சாவிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது பரவலாகப் பயன்படுத்தப்படும் போதை மருந்து என்பதால் கஞ்சா பயிரிட, விற்க, வாங்க, வைத்திருக்க, பயன்படுத்த பெரும்பாலான நாடுகள் தடை விதித்துள்ளன.

ஆனால் அமெரிக்கா உட்பட சில நாடுகள் பிரத்யேகமாக அனுமதி பெற்று மருந்துக்காக சிலர் வளர்த்து வருகின்றனர். வளர்க்கப்படும் இடம் தெரிந்தால் தீவிரவாதிகள், கொள்ளையர்கள், போதை விரும்பிகளால் ஆபத்து நேரிடும் என்பதால் மிகமிக இரகசியமாகவே பயிரிடுகின்றனர்.

ஒக்லேண்ட் நகரில் ஒரு வீட்டின் உட்புற தோட்டத்தில் இத்தோட்டம் உள்ளது. சூரிய ஒளி கிடைக்க வாய்ப்பு இல்லாததால், கண்ணை கூச வைக்கும் விளக்குகள் தோட்டம் முழுவதும் வைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப கால, செடிகள் மொட்டு விடும் பருவம், அறுவடை பருவம் எனப் பயிரின் பருவத்துக்கு ஏற்ப விதவிதமான விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.

அறுவடைக்குப் பின் இவற்றிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் பெரும்பாலான மக்களால் விருப்பத்துடன் பயன்படுத்தப்படுகின்றன.

# தோல்வியில் முடிந்தது சிரியா குறித்த விவாதம்

### சீனா, ரஷ்யாவின் எதிர்ப்பால்

சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை பதவி விலகக் கோரும் ஐரோப்பிய நாடுகள் - அரபு லீக் கூட்டணியின் பிரேரணை தொடர்பான விவாதம் சீனாவும், ரஷ்யாவும் கடுமையாக எதிர்த்ததால் ஐ.நா பாதுகாப்புக் குழுக் கூட்டம் எவ்வித முடிவும் எடுக்கப்படாமல் முடிவடைந்துள்ளது.

சிரியாவில் கடந்தாண்டு முதல் ஜனாதிபதி அசாத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் நடந்து வருகிறது. எனவே இராணுவம் போராட்டக்காரர்களை அடக்கி வருகிறது. இந்தப் போராட்டத்தில் இதுவரை 5400 பேர் பலியாகி உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் சிரியா விவகாரம் மீது ஐரோப்பிய நாடுகள் - அரபு லீக் கூட்டணி, ஐ.நா பாதுகாப்புக் குழுவில் ஒரு பிரேரணையை நேற்றுமுன்தினம் கொண்டு வந்தன. இந்தப் பிரேரணையை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட மேற்குலக நாடுகள் ஆதரித்துப் பேசின. இந்தப் பிரேரணையின் அவசியம் குறித்துக் கட்டார் பிரதமர் ஷேக் ஹமாத் பன் ஜசிம் அல் தானி பேசிய தாவது-

சிரியா விவகாரத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சர்வதேச முயற்சிகள் தோல்வி அடைந்து விட்டன. சிரியாவும் இதுவரை கொடுத்த வாக்குறுதிப்படி நடக்கவில்லை. அதனால் இதில் உடனடியாக நாம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும் - என்றார்.

ஆனால் சீனாவும், ரஷ்யாவும் இந்தப் பிரேரணையைக் கடுமையாக எதிர்த்து வருகின்றன. மக்கள் மீதான இராணுவ வன்முறைகளை இரு நாடுகளும் கண்டித்த போதிலும் ஜனாதிபதி அசாத்தை பதவி விலகச் சொல்ல முடியாது எனத் தீர்மானமாகச் சொல்லி விட்டன. மேலும் இந்தப் பிரேரணை சிரியாவில் அன்னியத் தலையீட்டுக்கு வழிவகுக்கும் எனவும் அவை கூறியுள்ளன.

இதேவேளை சீனாவும், ரஷ்யாவும் பயப்படுவது போல சிரியா மற்றொரு லிபியாவாக வாய்ப்பில்லை எனச் சுட்டிக் காட்டிய ஹிலாரி கிளின்டன், அரபு லீக்கின் ஒப்பந்தம் சிரியா விவகாரத்துக்கு நல்லதொரு தீர்வாக அமையும் எனத் தெரிவித்தார். சிரியா தொடர்பான விவாதம் மீண்டும் தொடர்ந்து நடக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

# அமெரிக்க உதவியை நாடும் ஆசிய நாடுகள்

### பெருமைப்படுகிறார் ஒபாமா



தங்கள் நாடுகளை மேம்படுத்திக் கொள்ளவும், சீனாவிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆசிய நாடுகள் அமெரிக்காவின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நடந்த தேர்தல் பிரசார நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போதே ஒபாமா இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது;

கடந்த மூன்றாண்டுகளில் நாம் அனேக பிரச்சினைகளைக் கடந்து வந்துவிட்டோம். அதே காலகட்டத்தில் உலகம் முழுவதும் சுற்றிப் பார்த்த நான் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். அது உலகம் இன்னும் நமது தலைமையை எதிர்பார்த்திருப்பது தான். நம்மிடம் உள்ள அதிகாரத்திற்காக அவர்கள் நம்மை எதிர்பார்க்கின்றனர்.

ஆசியாவின் சிறிய நாடுகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தங்களின் இயற்கை வளங்கள் சுரண்டப்படாமல் முறையாக மேம்படுத்தவும் விரும்புகின்றனர். அதனால் அவர்கள் நம்மை விரும்புகின்றனர் என்று தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் போர்க் கப்பல் போக்லாந்துக்கு விரைகிறது



ஆர்ஜென்டீனா நாட்டுக்கு அருகே உள்ள போக்லாந்து தீவுக்கு பிரிட்டன் போர்க் கப்பலான எச்.எம்.எஸ் டான்ப்லெஸ் ஐ விரைந்துள்ளது .இது போர் ஏற்படுவதற்கான அறிகுறியாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போக்லாந்து தீவை ஆர்ஜென்டினாவும் பிரிட்டனும் உரிமை கொண்டாடி வருகின்றன. 1982ஆம் ஆண்டு ஆர்ஜென்டினா பொக்லாந்து தீவைக் கைப்பற்றி கொண்டது. இதனால் பிரிட்டன் தாக்குதல் நடத்தி அந்தத் தீவை மீட்டது.

அண்மையில் ஆர்ஜென்டீனா மீண்டும் போக்லாந்து பிரச்சினையை தொடங்கியுள்ளது. இதனால் பிரிட்டன்- ஆர்ஜென்டீனா இடையே மோதல் ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளது.

எனவே ஆர்ஜென்டீனா திடீரெனத் தாக்கிவிடக் கூடாது எனக் கருதி பிரிட்டன் போக்லாந்தில் படையை குவித்து வருகிறது. அதுமட்டுமன்றி பிரிட்டனின் அதி நவீன போர்க் கப்பலான எச்.எம்.எஸ் டான்ப்லெஸ் பொக்லாந்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது தவிர நீர்மூழ்கி கப்பல்களும் அங்கு சென்றுள்ளன.

இந்த நிலையில் ஆர்ஜென்டினாவுடன் மோதல் காரணமாகத் தான் கப்பல் அனுப்பப்பட்டுள்ளதா? என்று பிரிட்டன் அதிகாரிகளிடம் கேட்டபோது வழக்கமான ரோந்துப் பணிக்காகத் தான் கப்பல் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

# இந்திய மாணவர்களை வெளியேற்றியது ஈரான்

தெக்ரான்,பெப்.3

ஈரான் நாட்டில் மருத்துவக்கல்வி பயின்று வரும் நான்கு இந்திய மாணவர்களை அந்நாட்டு அரசு வெளியேற்றியுள்ளது.


இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் 4 முதல் 10 ஆண்டு காலமாக மருத்துவம் மற்றும் பல்வேறு மேற்படிப்புகளை ஈரான் அரசு வழங்கும் உதவி மூலம் படித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்பு கேரளாவைச் சேர்ந்த ரஷீன் என்ற மாணவர் ஒருவர் கடந்தாண்டு ஜூலை மாதம் அவருடைய மாநிலத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். அதேபோல கான்பூர், ஜம்முகாஷ்மீர் மாநிலம் உட்பட பல்வேறு மாநிலத்தை சேர்ந்த மாணவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்பு ஈரான் மாணவர்கள், இந்தியாவில் உள்ள உள்ளூர் அமைப்புகளின் தூண்டுதல் காரணமாக வெளிநாட்டு கொள்கைகளை எதிர்த்துப் போராடுவதாக உளவுத் துறை தகவல் அளித்ததன் அடிப்படையில் 2009ஆம் ஆண்டில் 32 மாணவர்களை இந்தியா வெளியேற்றியது.

இதற்கு இந்திய தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கம் திருப்தியளிக்கவில்லை என்று ஈரான் தரப்பில் கூறப்பட்டது. எனினும் ஈரான் மற்றும் இந்தியா இடையே மாணவர்களை வெளியேற்றும் போராட்டத்துக்கும் அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கும் சம்பந்தமில்லை என்று இரு நாட்டு அரசும் தெரிவித்துள்ளன.

# மூழ்கும் கப்பல்



300 பயணிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று பப்புவா நியூகினியாவின் வட கடல் பகுதியில் மூழ்கி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிம்பே மற்றும் லயிக்கு இடையில் சேவையில் ஈடுபட்டுள்ள எம்வி ரபுகுல்குயின் என்ற படகே இவ்வாறு மூழ்கி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விப்த்தில் நீரில் மூழ்கியவர்களை காப்பாற்றவும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பப்புவா நியூகினியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகியன மீட்புப் படகுகளை அனுப்பிவைத்துள்ளன.

படகில் பயணித்தவர்கள் நீரில் மிதக்கும் உயிர் பாதுகாப்பு அங்கிகளை அணிந்துள்ளதாக பப்புவா நியூகினியாவின் தேசிய கடல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நுரூர் ரகுமான் சர்வதேச ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான படகில் இருந்து 28 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# விளையாட்டு வினையானது எகிப்தில் 73 பேர் பரிதாபச் சாவு

ஹெய்ரோ,பெப்.3

எகிப்தில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றின் போது ஏற்பட்ட கலவரத்தில் 73 பேர் உயிரிழந்துள்ளனர்.

எகிப்தின் முன்னணி காற்பந்து கிளப் அணிகளான அல் மாஸ்ரி மற்றும் அல் ஆஹ்லி ஆகியவற்றுக்கு இடையில் போர்ட் நகரில் நேற்று இடம்பெற்ற போட்டி ஒன்றின் போதே, இந்த மோதல் வெடித்துள்ளது.

இப்போட்டியில் அல் மாஸ்ரி அணி 3-1 என வெற்றி பெற்றது. எனினும் தனது அணிக்கான தீவிர ஆதரவுப் போக்கை கொண்டிருந்த அல் ஆஹ்லி கிளப் ரசிகர்கள், போட்டி நடைபெற்று கொண்டிருந்த போது எதிரணியை இம்சிக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை பிடித்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த அல் மாஸ்ரி அணி ரசிகர்கள், போட்டி முடிவடைந்ததும், அல் ஆஹ்லி அணி ரசிகர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளத் தொடங்கினர். இதையடுத்து இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் கடுமையாக தாக்கிக்கொண்டுள்ளனர். கத்தி போன்ற கூரான ஆயுதங்களுடனும் பலர் மைதானத்தில் இறங்கியுள்ளனர்.

இந்தக் கலவரத்தில் 73 பேர் உயிரிழந்துள்ளனர்; 1000 க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என எகிப்து அரசு தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் பலருக்கு கழுத்தில் வெட்டுக் காயங்கள் இருந்துள்ளன.

கடந்த வருடம் எகிப்தின் இடம்பெற்ற மக்கள் புரட்சியின் போது தீவிர ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்கள் பலர் அல் ஆஹ்லி அணி ரசிகர்கள். அவர்களின் இந்த மனோநிலையே இந்தப் போட்டி மைதானத்திலும் பிரதிபலித்ததாகச் சிலர் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் மைதானத்துக்குப் போதிய பாதுகாப்பு வழங்கவில்லை எனவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எகிப்தின் முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக் பதவி விலகிய பின்னர், அங்கு இடம்பெற்ற வன்முறைகளில் ஒரே தடவையில் அதிகமானோர் உயிரிழந்த முதல் நிகழ்வாக இது பதிவாகியுள்ளது.

உலகின் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் ஏற்பட்ட வன்முறைகளில் அதிகமானோர் உயிரிழந்த சம்பவங்களில் இது இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. 1964ஆம் ஆண்டு, லீமா வில் நடைபெற பெரு - ஆர்ஜென்டீனா அணிகளுக்கு இடையிலான போட்டியில் ஏற்பட்ட கழகத்தில் 318 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதியின் ஆதரவுக் குழுக்களே சிரியாவின் வன்முறைக்கு காரணம்

## ரஷ்யா குற்றச்சாட்டு

**அரபு லீக் சிரியாவுக்கு கண்காணிப்பு குழுவை அனுப்பாமல் நிறுத்தி வைத்துள்ளதையும் ஐ.நா.வுக்கான ரஷ்ய தூதர் சுர்கின் கண்டித்தார்.**

சவூதி அரேபியாவின் ஆதரவுடன் செயற்படும் அமைப்புகள் தான் சிரியாவில் வன்முறையைத் தூண்டி வருவதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை ஐ.நா. பாதுகாப்பு சபையில் பேசும்போது ஐ.நா.வுக்கான ரஷ்யத் தூதர் விடாலி சுர்கின் முன்வைத்தார்.

சிரியாவில் அதிபர் பஷர் அல் அசாத் பதவி விலகக் கோரி கடந்த வருடம் மார்ச் மாதம் தொடங்கிய போராட்டங்கள் தற்போது தீவிரமடைந்து ஆயுதப் போராட்டமாக மாறியுள்ளது. அரசுக்கெதிரான போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்துவதும் போராட்டக்காரர்களை அடக்குவதற்காக ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்துவதும் அங்கு அன்றாட நிகழ்வாகி உள்ளது.

இந்த நிலையில் சிரியாவில் இந்தக் கலவரத்தை தூண்டிவிடுபவர்கள் சவூதி அரேபிய அரசின் துணையுடன் செயற்படும் தீவிரவாத அமைப்புகள்தான் என ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. அரபு லீக் சிரியாவுக்கு கண்காணிப்பு குழுவை அனுப்பாமல் நிறுத்தி வைத்துள்ளதையும் சுர்கின் கண்டித்தார்.

'அண்மையில் சவூதி தொலைக்காட்சி ஒன்றில் தீவிரவாத அமைப்பைச் சார்ந்த மதத் தலைவர் ஒருவர் கண்காணிப்புக் குழுவினர் இரத்தம் சிந்துவதற்குத்தான் விரும்புகின்றனர் எனத் தெரிவித்ததால் அரபு லீக், கண்காணிப்புக் குழுவை சிரியாவுக்கு அனுப்பாமல் நிறுத்திவிட்டதாகத் தான் அறிந்ததாக ரஷ்யத் தூதர் மேலும் குறிப்பிட்டார்.

மேற்கத்தைய நாடுகளின் உதவியுடன் சிரியாவுக்கெதிராக பிரேரணையை நிறைவேற்ற அரபு லீக் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தது.

ஆனால் சிரியா வுக்கெதிராக புதிய பிரேரணை நிறைவேற்றப்படுவதை ரஷ்யாவும் சீனாவும் எதிர்த்ததால் இது நிறைவேற்றப் படவில்லை. (ந)

# இணையம் மீதான மோகம்; கொலையுண்டனர் சகோதரிகள்



இணையத்தளத்தைப் பார்வையிட்டார்கள் என்ற காரணத்துக்காகத் தனது மூன்று மகள்மாரையும் கொலை செய்த ஆப்கானிஸ்தான் தந்தையொருவருக்கும் அவருக்கு ஆதரவாக செயற்பட்ட மனைவி மற்றும் மகன் ஆகியோருக்கு கனடா, ஒஸ்ட்ரியோ நீதிமன்றம் ஆயுள்கால சிறைத் தண்டனை விதித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் ஆடைகளைப் பயன்படுத்தாமை, ஆண் நண்பர்களுடன் பழகியமை, சமூகத்துடன் ஒன்றிப் பழகியமை மற்றும் இணையத்தள நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டமை உள்ளிட்ட விடயங்களைக் காரணங்காட்டியே மேற்படி மூன்று பெண் பிள்ளைகளும் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட மொஹமட் சப்பியா (வயது 58), அவரது மனைவி டுபா (வயது 42) மற்றும் அவர்களின் மகன் ஹமீட் (வயது 21) ஆகிய மூவருக்குமே கனடா நீதிமன்றம் ஆயுள்கால சிறைத்தண்டனை விதிக்கத் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்த்து விட்டு வந்து கொண்டிருந்தபோது குறித்த மூன்று பெண் பிள்ளைகளையும் காரோடு நீரில் மூழ்கச் செய்து இந்தப் படுகொலையை மேற்கொண்டுள்ளார்கள் என்று சந்தேக நபர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதியாக்கப் பட்டதை அடுத்தே சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆயுள்கால சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. (ந)

# சவால் நிறைந்தது பாக்.உறவு

பாகிஸ்தானுடனான உறவு சவாலானது எனினும் முக்கியத்துவம் நிறைந்தது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் மறைந்துள்ள தீவிரவாதிகள் குறித்து செனட் சபையில் கேள்வி எழுப்பப்பட்ட கேள்விக்கே அமெரிக்கா புலனாய்வு முகாமையின் இயக்குநர் ஜேம்ஸ் கிளாப்பர் இவ்வாறு பதில் அளித்தார்.

கடந்த வருடம் சில தலிபான்கள் பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்டாலும், மேலும் தலிபான் தலைவர்கள் அங்கு மகிழ்ச்சியுடனும் பாதுகாப்புடனும் வலம் வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்ல பாகிஸ்தானில் மறைந்திருந்து தாக்குதல்களை மேற்கொள்வது அல்குவைதாதான் என ஜேம்ஸ் கிளாப்பர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந)

# ஈராக்கில் 17 பேருக்கு ஒரே நாளில் தூக்கு

ஈராக்கில் தீவிரவாதச் செயல்கள் மற்றும் குற்றங் களில் ஈடுபட்ட 17 பேருக்கு கடந்த வாரம் ஒரே நாளில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அந்நாட்டு நீதித்துறை அமைச்சரகம் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் கொலை, கொள்ளை, வன்புணர்வு போன்ற குற்றங்கள் மட்டுமின்றி பொருள்களுக்கு சேதம் விளைவிக்கும் குற்றங்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது.

இதேபோன்று கடந்த மாதம் 34 பேருக்கு ஒரே நாளில் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது . இந்த ஆண்டில் மட்டும் 51 பேருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட உள்ளது. அவர் களில் 17 பேருக்கே கடந்தவாரம் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. (ந)

**Doctor on Call**

Call Doctors 0776458253

வைத்தியரை வீட்டிற்கே அழைத்திடுங்கள்

jaffnaonline.info/doc

வயோதிபம்,நீரிழிவு.குருதி அழுத்தம், நாட்பட்ட நோய்கள் முதல் தொடர் பராமரிப்பு தேவைப்படும் அல்லது எந்த நோயானாலும் வைத்திய சேவையை உங்கள் வீட்டிலேயே பெற விரும்பும் நிலையில் நீங்களோ உங்கள் அன்புக்கு உரியவர்களே இருந்தால் ,எம்முடன் வருடாந்த ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதன் மூலம் MBBS வைத்தியர்களின் சேவையினை குடா நாட்டின் எப்பகுதியிலும் உங்கள் வீட்டிலேயே பெறமுடியும். விபரங்களுக்கு : 0776458253

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**அழகரத்தினம் கனகசபை**



தோற்றம்

30★ 05 ★ 1948

மறைவு

04 ★ 02 ★ 2008

விதிவரைந்த பாதையில் நீங்கள் எம்மை
பாதியில் விட்டுச் சென்றீர்கள்
உங்கள் சிரித்த முகம்
எம் கண்முன்னே நிழலாடுதப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

மட்டுவில் மத்தி, சாவகச்சேரி. மனைவி, பிள்ளைகள்.

(13780)(2-6)

## விற்பனைக்கு

TATA Tipper LB - xxxx,
2006 Model விற்பனைக்குண்டு.

(13711) (45-6) தொடர்புகளுக்கு: 077 8147139

## விற்பனைக்கு

சிமெந்துக் கல் விற்பனைக்குண்டு
27/= (ஒன்று) (கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு விநியோகமும் செய்யலாம்)

(11015) (45-6) தொடர்புகளுக்கு: 077 7742778

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி வடக்கு, சரஸ்வதி வீதியில் 2 ¾ பரப்பு அளவிலான (வருமானத்துடன் கூடிய ) காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு. 077 7637692, 077 4002286

## விற்பனை ஆள் தேவை

இரு பாலாரும் வரலாம்

**செல்வா ஸ்ரோர்ஸ்**

2A, நியூ மார்கற், யாழ்ப்பாணம்.

(13719) தொ.பே: 021 2224563

## காணி விற்பனைக்கு

இராமநாதன் வீதி, கண்ணன் களஞ்சியத் துக்கு அருகில் கொக்குவில் செல்லும் வீதியில் இரண்டாவது காணி 8 பரப்பு விற்பனைக்கு உள்ளது. முழுமையாகவும் இரண்டாகப் பிரித்தும் கொடுக்கப்படும். (தரகர் தேவையில்லை)

தொடர்பு : 0112591720, 0771331784.

## தவறிவிட்டது

இல. 2/1, மருதடிலேன், நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் உதிரோவியம் என்பவரது தே.அ.அ. (731312826V ) யாழ் நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும்

(13804) (45-6-7) தொ.பே. 077 7158667

## தவறிவிட்டது

இல.555, மதவடி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முருகையா சதீஸ்குமார் என்பவரது தே.அ.அ. (693623340V) கே.கே.எஸ். வீதிக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும்.

தொ.பே. 0776199498

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 03.01.2012 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

அமரர்

**சிதம்பரநாதன் நேசகுமாரி**

அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் நாளை (04.02.2012) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெறும். இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு எமக்கு எல்லா வழிகளிலும் உதவி புரிந்து இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு அனுதாபத்தைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இலக்கணாவத்தை,
உடுப்பிட்டி. (13778) (6,7,10) குடும்பத்தினர்.

## திருமுருகன் திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும்

**★ விசேட விலை**

திருமண மண்டபம் 25,000 ரூபா மட்டும் (மணவறை, மேளம், கிரியைப்பொருள்கள் உட்பட)கலை நிகழ்வுகள், சமயநிகழ்வுகள் உட்பட கருத்தரங்குகளும் செய்து மகிழ்ந்திடலாம்.

**★ சித்திரைப் புதுவருடத்துடன்**

குடா நாட்டில் கோலாகல புதிய அறிமுகம்.

இதுவரை எங்கும் இல்லாத கலைநுட்பத்துடன்மூன்று வாசல் பெரிய பூமண வறை, பூமாலைகள், உணவு வகைகள், ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் சோடா, பூந்திலட்டு, கேக் ஆகிய பொருள்கள் யாவும் ஒரே இடத்தில் மலிவு விலையில் ஓடருக்குப் பெற்றிடலாம்.

கரந்தன் வீதி, நீர்வேலி திருமுருகன்

தொலை பேசி இல :
077 6660211
0213211523, 0212230181

(C/8736) (6-7-8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **நடராசா இரங்கநாதன்**

தோற்றம்

01★ 04 ★ 1951

மறைவு

15 ★ 01 ★ 2011

திதி:தைமாத அபூர்வபட்ச ஏகாதசி

ஆண்டு ஒன்று சென்றாலும்
அன்புருவம் மறக்க முடியவில்லை
இனி ஒரு பிறப்பு இருக்குமெனில்
இணைந்தே இருக்க விரும்புகின்றேன்.

'பிருந்தாவனம்'
29/21, உடையார் ஒழுங்கை, ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

அன்பு
மனைவி.

(13751)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய அரசு பதவியில் நீடிக்கக் கூடாது

### ஜேத்மலானி

டில்லி,பெப்.3

2ஜி ஊழலில் 122 தொலைத்தொடர்பு உரிமங்களை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதையடுத்து மத்திய அரசு இனியும் பதவியில் நீடிக்கக் கூடாது என்று பிரபல சட்டத்தரணி ராம்ஜேத்மலானி தெரிவித்தார்.

அரசின் தொலைத் தொடர்பு கொள்கைகள் சட்ட ரீதியாகச் செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள் ளது. அரசுக்கும், அமைச்சர வைக்கும் இதில் கூட்டு பொறுப்பு உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசு இனியும் பதவியில் நீடிக் கக்கூடாது என்பதை தெளிவு படுத்துகிறது. ராஜினாமா செய்து விட்டு தேர்தலுக்கு உத்தர விட வேண்டும் என்று ராம் ஜேத்மலானி தெரிவித்தார். (வ)


## மீனவர்களின் வாகன யாத்திரை

தமிழக மீனவர்கள், தங்களுடைய ஏழு அம்ச கோரிக்கையை வலியுறுத்தி, நேற்று படகு மற்றும் வாகன யாத்திரை நடத்தினர். தேசிய மீனவர் பேரவை மற்றும் மாவட்ட மீன்பிடி தொழிலாளர் சங்கம் சார்பில், ராமநாதபுரத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில், இந்த முடிவு எடுக்கப் பட்டது.

அந்தக் கூட்டத்தில், தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும், மன்னார் வளைகுடா கடல் பகுதியில் உள்ள 21 தீவுகளைச் சுற்றி மீன் பிடிக்க அனுமதி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட ஏழு கோரிக்கைகள் கொண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நேற்று ஆரம்பமாகிய இந்த யாத்திரை எதிர்வரும் 7 ஆம் திகதி நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# 122 தொலைத் தொடர்பு நிறுவன உரிமங்கள் ரத்து

### உச்ச நீதிமன்றம் அதிரடி




**2ஜி ஊழலில் ப.சிதம்பரத்தின் பங்கு குறித்து விசாரிப்பதா, வேண்டாமா என்பதை சி.பி.ஐ. நீதிமன்றமே தீர்மானிக்கலாம்**

டில்லி, பெப்.3

முன்னாள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ஆ.ராசா காலத்தில் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வழங்கப்பட்ட 122 தொலைத் தொடர்பு நிறுவனங்களின் உரிமங்களை உச்சநீதிமன்றம் நேற்று ரத்து செய்து தீர்ப்பளித்துள்ளது.

2ஜி ஊழலில் ப.சிதம்பரத்தையும் சேர்க்க வேண்டும் என்று கோரி ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணிய சுவாமி தாக்கல் செய்த மனு மீது உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏகே.கங்குலி, ஜி.எஸ். சிங்வி ஆகியோர் நேற்று தீர்ப்பளித்தனர்.

2ஜி ஊழலில் ப.சிதம்பரத்தை சேர்ப்பது குறித்து சி.பி.ஐ. நீதிமன்றத்திலும் வழக்கு நடைபெற்று வருகிறது.

ராசா காலத்தில் வழங்கப்பட்ட 122 தொலைத் தொடர்பு உரிமங்களை ரத்து செய்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், ப.சிதம்பரத்தை 2ஜி ஊழல் வழக்கில் சேர்ப்பது குறித்து சி.பி.ஐ. நீதிமன்றமே முடிவெடுக்கலாம் என்று தெரிவித்தனர்.

சி.பி.ஐ. விசாரணையைக் கண்காணிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கத் தேவையில்லை என்றும் நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் தெரிவித்த னர். மேலும் 2ஜி உரிமங்கள் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக புதிதாக விதிமுறைகளை உருவாக்குமாறு தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

தொலைத்தொடர்பு உரிமங்களை ரத்து செய்யும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் யுனிடெக் வயர்லெஸ், டாடா, ஏர்செல் மற்றும் ஐடியா உள்ளிட்ட பெரிய தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



சென்னை பெண் சட்டபேரவை உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடத்தை முதல்வர் ஜெயலலிதா மங்கல விளக்கேற்றித் திறந்து வைத்தார்.

## மாவோயிஸ்டுகள் தாக்குதல் பொலிஸார் 3 பேர் சாவு



ஜார்க்கண்ட் மாவோயிஸ்டுகளின் தாக்குதலில் 3 பொலிஸார் உயிரிழந்தனர்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் லேத்கர் மாவட்டத்தில் உள்ள பலுமத் பொலிஸ் பிரிவில் இரு பிரிவினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது.

இதுபற்றி விசாரணை நடத்துவதற்காக சென்ற உதவிப் பொலிஸார் உட்பட 5 பொலிஸ்காரர்கள் மீது திடீரென மாவோயிஸ்டு தீவிரவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்தத் தாக்குதலை எதிர்பாராத பொலிஸார் சுதாரித்து கொண்டு எதிர்தாக்குதல் நடத்தினர். இதில் உதவிப் பொலிஸார் உட்பட 3 பொலிஸார் துப்பாக்கிக் குண்டுக்கு பலியாகினர். 2 பொலிஸ்காரர்கள் படுகாயம் அடைந்தனர்.

## சத்தீஸ்கர் வனப் பகுதியில் மாவோயிஸ்ட் மாநாடு

**பொலிஸாரை திசை திருப்பி எங்காவது தாக்குதல் நடத்த மாவோயிஸ்ட்டுகளே மாநாடு பற்றி வதந்தியைப் பரப்பியிருக்கலாம் என்றும் மாநிலம் முழுவதும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது**

ராய்ப்பூர், பெப்.3

சத்தீஸ்கரில் வனப் பகுதியில் மாநாடு நடத்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதை அடுத்து, பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

சத்தீஸ்கர், பீகார், ஒரிசா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அட்டகாசம் அதிகம் உள்ளது. அவர்களை ஒடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மாநாடு நடத்துவது வழக்கம். இதில் அந்த இயக்கத்தின் முக்கிய தலைவர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்கள் இயக்கத்தின் நடவடிக்கைகள், திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்துவார்கள். தற்போது, சட்டீஸ்கர் மாநிலம் பஸ்தார் மாவட்டம் அபுஜ் மட்டில் உள்ள அடர்ந்த வனப்பகுதியில் ரகசியமாக 10 ஆவது மாநாடு நடத்த மாவோயிஸ்ட்டுகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை மூலம் சத்தீஸ்கர் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, சத்தீஸ்கர் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

அபுஜ்மட்டில் உள்ள அடர்ந்த வனப்பகுதி தங்களுக்கு பாதுகாப்பானது என்று மாவோயிஸ்ட்டுகள் கருதியிருக்கலாம் என்று சத்தீஸ்கர் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒருவேளை, பொலிஸாரை திசை திருப்பி எங்காவது தாக்குதல் நடத்த மாவோயிஸ்ட்டுகளே மாநாடு பற்றி வதந்தியை பரப்பியிருக்கலாம் என்றும் மாநிலம் முழுவதும் கண்காணிப்பு தீவிரப் படுத்தப் பட்டுள்ளதாகவும் பஸ்தார் பொலிஸ் ஐ.ஜி. லோங்குமெர் தெரிவித்தார். (வ)

## சட்டப் பேரவையில் இருந்து 10 நாள் நீக்கம்



சென்னை, பெப்.3

சட்டசபையில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கண்ணியத்தைக் குலைக்கும் வகையில் நடந்து கொண்டதற்காக அவரை 10 நாள்கள் சபை நடவடிக்கை களில் கலந்துகொள்ள அனுமதி மறுத்து நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு தே.மு.தி.க., தி.மு.க., இடதுசாரி கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த் மற்றும் அவருடைய கட்சி உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் குறித்த பிரச்சினையை உரிமை மீறல் குழு விசாரிக்கும் என்று சபாநாயகர் ஜெயக்குமார் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் உரிமை மீறல் குழுக் கூட்டம் நடைபெற்றது. சபையில், தே.மு.திகவினர் நடந்து கொண்ட விதம் குறித்து அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தனது நிலையைத் தெரிவிக்க உரிமை மீறல் குழுக் கூட்டத்துக்கு வியாழக்கிழமை வருமாறு விஜயகாந்துக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

ஆனால் எதிர்பார்த்தபடி விஜயகாந்த் இந்தக்கூட்டத் திற்கு வரவில்லை. இதையடுத்து உரிமை மீறல் குழு சபாநாயகரிடம் தனது அறிக்கையை அளித்தது. இதையடுத்து விஜயகாந்த் சட்டசபையின் மாண்பு, கண்ணியம் ஆகியவற்றுக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டதால் அவரை 10 நாள்கள் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதி மறுக்கும் தீர்மானம் சபையில் கொண்டு வரப்பட்டது. (வ)

## ராஜஸ்தானில் நிலநடுக்கம்

இந்தியாவின் ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் நேற்றுக் காலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேற்றுக் காலை 10.11 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில், 2.1 ஆக பதிவாகி இருந்தது.

நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல் இன்னும் வெளியாகவில்லை.

## பெண் குழந்தைகளின் இறப்பு இந்தியாவில் அதிகரிப்பு

டில்லி,பெப்.3

உலக அளவில் பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் இந்தியாவில் தான் அதிகம் என்று புதிய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. சபையின் பொருளாதாரம் மற்றும் சமூக விவரங்களுக்கான துறை அண்மையில் புதிய புள்ளி விவரம் ஒன்றை வெளியிட்டது: 150 நாடுக ளில் பிறப்பு-இறப்பு விவரங்களைச் சேகரித்து தயாரிக்கப்பட்ட, அந்த புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகில் இந்தியாவில் தான் கடந்த 10 ஆண்டுகளில் ஆண் சிசுக்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பை விட, பெண் சிசுக்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பு அதிகமாக உள்ளன. இதனால் ஆண்-பெண் விகிதா சாரத்தில் மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டு வருகிறது. இந்தநிலை வரவேற்கத் தக்கதல்ல. இந்தியாவுக்கு அடுத்த நிலையில் சீனா உள்ளது.

உலகில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட இரண்டு நாடுகளில் இவ்வாறான நிலை இருப்பது கவலை அளிக்கக் கூடியது. குழந்தைகள் இறப்பு விகிதம் இந்தியாவிலும் 100:56 என்ற விகிதத்தில் உள்ளது. கடந்த 1970-ஐ விட இப்போது நிலைமை மோசம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## 2ஜி ஊழலில் அடுத்த இலக்கு சோனியாவாம்



டில்லி,பெப்.3

2ஜி ஊழலில் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு அடுத்து காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாதான் என்னுடைய அடுத்த இலக்கு என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணிய சுவாமி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஊழலில் குற்றம் புரிந்தவர்களை வெளிப்படுத்துவது சவாலான ஒன்று. போதுமான ஆதாரங்களை நீதிமன்றத்தில் அளித்திருக்கிறேன். மூன்று விவகாரங்களில் நீதிமன்றம் முடிவு எடுக்க உள்ளது.

உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு அடுத்து காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாதான் என்னுடைய இலக்கு. இந்த ஊழலில் 60 சதவீத பணத்தை அவர் தான் எடுத்துக் கொண்டார் என்று சுவாமி குற்றம் சாட்டினார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பென்டிரைவை சோதிப்பதற்கு

இன்றைய கணினி உலகத்தில் USB கருவிகளான பென்டிரைவ், மெமரிக் காரட் போன்றவை தகவல்களை சேமித்து வைத்துக் கொள்ளப் பயன்படுத்தப்படுகின்றன. இவை குறிப்பிட்ட காலம் செயற்பட்ட பின் தானாகவே இயக்கத்தை நிறுத்திக் கொள்கின்றன.

ஒரு சிலருக்கு தாங்கள் வாங்கிய பென்டிரைவ் தரமானதா அல்லது போலியானதா என்று கூட கண்டறியத் தெரியாது. அதேபோல் தற்போது நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் பென்டிரைவ் பழுதாயிருக்கிறதா என்றும் கண்டுபிடிக்க முடியாது.

பென்டிரைவ் மற்றும் ஏனைய USB கருவிகளின் தரத்தைச் சோதிக்க ChkFlsh என்ற இலவச மென்பொருள் இணையத்தில் கிடைக்கிறது. இதன் மூலம் Read Speed, Write Speed, Sector wise Errors போன்ற விடயங்களைச் சோதித்து அறியலாம். இதனால் எமது பென்டிரைவ் தரமாக உள்ளதா என்றும் தெரிந்து கொள்ளலாம்.

இதற்கு முதலில் இந்த மென்பொருளைத் தரவிறக்கியவுடன் ChkFlsh என்ற கோப்பை கிளிக் செய்யவும். பின்னர் உங்கள் பென்டிரைவை கணினியில் சொருகவும். பென்டிரைவில் உள்ள தகவல்களை அழித்து விட்டு, சோதிக்கப் பயன்படுத்துவது நலமானது. இதில் 3 வகையான Access Type கள் இருக்கின்றன.

Use Temporary file என்பதைக் கிளிக் செய்தால் Write and Read சோதனையைச் செய்ய முடியும். உங்கள் பென்டிரைவில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் Read Test மட்டுமே மேற்கொள்ள வேண்டும் எனில் As Logical Drive என்பதைக் கிளிக்செய்து கொள்ளவும். Test Length என்பதில் One Full Cycle என்பதைத் தெரிவு செய்யவும். பின்னர் Start கொடுத்தால் பென்டிரைவ் சோதிக்கப்படும்.

ஒவ்வொரு கோப்பு செக்டர்களாக[File Sector] சோதிக்கப்பட்டு வரும். இறுதியில் ஒவ்வொரு செக்டரும் பச்சை வர்ணத்தில் காண்பிக்கப்பட்டால், உங்கள் பென்டிரைவில் எந்த பிரச்சினையும் இல்லை என்று கருதலாம். அத்துடன் இந்த பென்டிரைவின் வேகம் மற்றும் பிழைகள் இருந்தாலும் காண்பிக்கப்படும்.

# கணினியில் கேலிச்சித்திர வீடியோக்களை உருவாக்குவதற்கு

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கேலிச்சித்திர வீடியோக்கள் என்றால் பிடிக்கும். இவற்றை கணினியில் உருவாக்குவதற்கு ஒரு மென்பொருள் உதவி புரிகிறது.


இதன் பெயர் WEB CARTOON MAKER ஆகும். இந்த மென்பொருளைப் பயன்படுத்தி கேலிச்சித்திர வீடியோக்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

மிக நீண்ட மற்றும் குறுகிய திரைப்படங்கள் மற்றும் வீடியோக்களை இந்த மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கலாம். அத்துடன் வடிவமைக்கப்பட்ட வீடியோக்களுக்கு ஒலி வடிவம் கொடுக்க முடியும். ஒன்லைனிலும் வடிவமைக்க முடியும். இது விண்டோஸ் இயங்குதளத்தில் செயற்படக்கூடியது. இணையத்தள முகவரி http://webcartoonmaker.com/

மிக நீண்ட மற்றும் குறுகிய திரைப்படங்கள் மற்றும் வீடியோக்களை இந்த மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கலாம்

# இணையத்தின் வழியே கணினிகள் மூலம் தகவல்களைப் பரிமாற....

இதுவரை IPv4 என்ற கட்டமைப்பில் இணையத்தள முகவரிகள் அமைக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டு வருகின்றன.



இணையத்தின் வழியே நாம் ஒரு கணினியில் இருந்து மற்றொரு கணினிக்கு தகவல்களைப் பரிமாற முடியும். எமது தகவல்கள் முதலில் சிறு சிறு பொதிகளாக(Packet) பிரிக்கப்படும். அவை மற்றொரு கணினியை அடைய வேண்டுமானால் அதற்கு வலையமைப்பும் (Network) , அடுத்தடுத்த வலையமைப்பை அடைய இணையத்தள புறோகிராம் புரோடோகால்(Internet Protocol) முகவரியும் தேவைப்படுகிறது. இணையத்தில் ஒவ்வொரு பக்கத்திற்கும் ஒரு முகவரி மாறுகிறது. இதனை எப்படி அமைக்க வேண்டும் என்பதை பன்னாட்டளவில் பிரதிநிதிகளைக் கொண்டு இயங்கும் இணையத்தள அமைப்பு முடிவெடுக்கிறது.

இதனை இணையத்தள சேவையை வழங்கும் நிறுவனங்கள் பின்பற்றுகின்றன. இதுபோன்ற ஒரு பொதுக் கட்டமைப்பில் இருந்தால்தான் அனைத்து இணையத்தளச் செயற்பாடுகளும் அனைவராலும் இயக்கப்பட முடியும். இதுவரை IPv4 என்ற கட்டமைப்பில் இணையத்தள முகவரிகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கட்டமைப்பில் மேற்கொண்டு பெயர்களை அமைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. எவ்வளவு வகைகளில் அமைக்க முடியுமோ, சுமார் அந்த எண்ணிக்கையில் முகவரிகள் அமைக்கப்பட்டு விடக் கூடிய சூழ்நிலை இன்னும் சில மாதங்களில் உருவாகிவிடும். எனவே புதிய கட்டமைப்பு IPv6 என்ற பெயரில் இணையத்தள சேவை அமைக்கப்பட்டு இதுவரை சோதனை செய்து பார்க்கப்பட்டது.

இது அனைத்து வழிகளிலும் சரியானது என்று உறுதி செய்யப்பட்டதால், இனிமேல் அந்த அமைப்பே பின்பற்றப்படும். இதற்கான அறிமுக நாள் எதிர்வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


இணையத்தள வரலாற்றில் இந்த இணையத்தளப் பெயர் அமைப்பு அறிமுகம் செய்யப்படும் நாள் மிக முக்கியமான நாளாக வரும் காலத்தில் எண்ணப்படும்.

IPv4 அமைப்பு முகவரியில்(32 பிட் கட்டமைப்பு) ஏறத்தாழ 400 கோடி இணையத்தள முகவரிகள் அமைக்கப்படும். 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே இதில் 90% பயன்படுத்தப்பட்டு விட்ட நிலை உருவானது. அதே ஆண்டு ஒக்ரோபரில் எஞ்சியிருக்கும் நிலை 5% ஆக உருவானது.

நாளுக்கு நாள் இணையத்தள தளங்களும் அவற்றுக்கான பெயர்களும் வேகமாக உயர்ந்துவரும் நிலையில், IPv 4 அமைப்பில் மேலும் பெயர்களை உருவாக்க இயலாத நிலை எட்டப்பட்டுவிடும் என்ற அபாயம் உணரப்பட்டது. இதனால் IPv6 (128 பிட்) அமைப்பு உருவாக்கப்பட்டது.

இதுமுந்தைய அமைப்பிலும் பார்க்க எளிதான முறையில் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இரண்டு அமைப்புகளிலும் உருவாக்கப்பட்ட முகவரிகளை இணையத்தளத்தில் இயங்கும் வலையமைப்பு நிறுவனங்கள் கையாளும்.

# டுவிட்டரில் புதிய தணிக்கை தொழில்நுட்பம்




ஒரு நாட்டில் ஆள்சேபனைக்குரியதாக அமைந்துள்ள குறுந்தகவல்களை அந்த நாட்டில் மட்டும் இணையத்தில் வரவிடாமல் செய்கின்ற தொழில்நுட்பத்தை தாம் இப்போது பெற்றிருப்பதாக டுவிட்டர் இணைய குறுந்தகவல் பரிமாற்ற சமூக வலைத்தளம் அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட நபர்கள் வழங்கும் தகவல்களை குறிப்பிட்ட நாட்டில் மட்டும் தெரியவிடாமல் [illegible] முடியும் என்று [illegible] பதிவில் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்புவரை, டுவிட்டர் குறிப்பிட்ட ஒரு குறுந்தகவலை இணையத்தில் இருந்து நீக்கினால், அதனை உலகில் எங்கிருந்துமே பார்க்க முடியாது என்ற நிலை இருந்து வந்தது.

ஆனால் இனி ஒரு நாட்டில் தெரியவிடாமலும், அதேநேரம் ஏனைய நாடுகளில் தெரிகிற விதமாகவும் செய்ய முடியும் என்று கூறப்படுகிறது.

உலக அளவில் தங்களது சேவையை விரிவுபடுத்தும் முயற்சிகளை டுவிட்டர் மேற்கொண்டுவரும் ஒரு சூழலில், அந்த நிறுவனம் இந்த தொழில்நுட் பத்தைப் பெறுகிறது என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

பேச்சுரிமை, கருத்துச் சுதந்திரம் என் [illegible] ஒவ்வொருநாடும் ஒவ் [illegible] அணுகுகின்றன என்பதால், சர்வதேச அளவில் தமது சேவைகளை விருத்தி செய்ய இந்தத் தொழில்நுட்பம் அவசியமாகிறது என்று டுவிட்டர் இதற்கு விளக்கம் தந்துள்ளது.

முறைப்பாடு வரும் விடயங்களை முறைப்பாடு வரும் நாடுகளில் மட்டும் இணையத்தில் வரவிடாமல் செய்வதை கூகுள் பல ஆண்டுகளாகச் செய்துவருகிறது. கூகுளின் செயற்பாட்டைப் போல் டுவிட்டரும் முடிவெடுத்திருப்பது கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்று டுவிட்டர் பயன்பாட்டாளர்கள் பலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அரபு நாடுகளில் ஏற்பட்ட மக்கள் எழுச்சி பெரும் இயக்கங்களாக உருப்பெற டுவிட்டர், ஃபேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்கள் பெரும் பங்காற்றியிருந்தன. டுவிட்டரை உலக அளவில் பத்து கோடிக்கும் அதிகமானோர் பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## 'நாய்கள் மட்டும் இங்கே சலம் கழிக்கலாம்' - இப்படி ஒரு வாசகம்!

ஒரு வீதி வழியே பயணம் செய்து கொண்டிருந்தேன்.ஒரு முடக்குப் புறமான இடத்தில் சிறிதளவு குப்பைகள் கொட்டப்பட்டிருந்தன. அந்தக் குப்பைகள் கொட்டப்பட்டிருந்த பகுதி குடியிருப்பாகும். அந்தக் குடியிருப்பு மதிலில் ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது. 'நாய்கள் மட்டும் இங்கே குப்பை கொட்டலாம்' என்பதே அவ்வாசகமாகும். அதேபோல ஒரு சந்தையில் சந்தைக் கடைகள் முடியும் இடத்தில் 'நாய்கள் மட்டும் இங்கே சலம் கழிக்கலாம்' என்று எழுதப்பட்டிருந்தது. ஆனாலும் அந்த இடத்தை அசிங்கப்படுத்த மனிதர்கள் இருந்தனர். அவர்கள் ஒன்றில் வாசிக்கத் தெரியாதவர்கள். அல்லாவிடில் தாம் நாயின் குணமுடையவர்கள் என்பதை உணர்ந்து, தமது குணப்பண்பை மாற்றமுடியாது என்பதைத் தெரிந்து கொண்டு செய்பவர்கள்.

சிலருடைய பழக்கங்களை மாற்றுவது கடினம்.அதனால்தான் நாய் வாலை நிமிர்த்த முடியாது என்று சொல்வார்கள். 'தங்கம் துருப்பிடிக்காது. வாள் வளையாது. மனிதனின் பிறவிக் குணம் மாறாது' என்றொரு அயல் நாட்டுப் பொன்மொழியுள்ளது.

எவ்வளவுதான் சொன்னாலும் சமூகத்துக்குத் தீங்கான விதத்தில் செயற்படுபவர்கள் செயற்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் மலசலம் கழிக்கக் கூடாத இடத்தில் கழிப்பார்கள். குப்பை கொட்டக் கூடாத இடத்தில் கொட்டுவார்கள். இறந்த விலங்குகளின் கழிவுகளை வீட்டில் வெட்டித் தாழ்த்தினால் அது பசளையாகும். ஆனா லும் அவ்வாறு பசளையாக்க அவர்களுக்கு மனம் வருவ தில்லை.அதைத் தூக்கி வந்து கள்ளுத் தவறணைக்கு அருகாகவுள்ள வீதியிலோ, வீட்டு வளவிலோ போட்டு விட்டு, கள்ளையும் அருந்திவிட்டுச் செல்வர்.

அவ்வாறே இங்கே குப்பை கொட்டக்கூடாது என்று பிரதேசசபை எழுதி வைத்த அறிவித்தல் பலகைக்குக் கீழே குப்பை கொட்டுவதில் அலாதி இன்பம் இவர்களுக்கு. பிரதேசசபை ஆள்கள் கையும் மெய்யுமாகப் பிடித்தால் தண்டனை கிடைக்கும். ஆனாலும் அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுக் குப்பை கொட்டுவதுதான் இவர்களது சாமர்த்தியம். ஒரு பிரதேச சபையால் வைக்கப்பட்ட இத்தகைய அறிவித்தல் பலகையைப் பிடுங்கி, சற்றுத் தள்ளி எறிந்திருந்த நிலைமை அண்மையில் இடம்பெற்றிருந்தது. குப்பை கொட்டக்கூடாது என்ற அறிவித்தல் பலகைக்கு அருகிலுள்ள வீடுகளில் வசிக்கும் குடும்பத் தலைவர்கள் சிலர் சம்பளமில்லாது காவலாளி வேலை பார்க்கும் கருமங்களும் பரவலாக நடக்கின்றது. மாலை மங்கும் நேரத்தில்தான் கொண்டு வந்து கொட்டுகிறார்களாம். அந்த நேரத்தில்தான் அவர் களது 'டியுட்டி', கொண்டு வந்து கொட்டுபவர்களுடன் மல்லுக்கட்டி தமது பிரதேசத்தைப் பாதுகாக்க அவர்கள் எடுக்கும் கரிசனை முக்கியமானது.

சட்டவிரோதமாக இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளே நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், வாந்திபேதி, மலேரியா, டெங்கு போன்ற நோய்களுக்குக் காரணமாகின்றது என்பது பலரும் உணராத விடயமாகும். இப்போது உயிர்களைக் குடிக்கும் கொடிய விடயமாக டெங்கு மாறிய போதுதான், பலருக்கும் சட்டத்தின் வலிமை தெரிந்தது. என்ரை காணி, என்ரை வீடு,என்ரை கடை. நான் எப்படியும் செயற்படுவேன். என்னைக் கேட்க நீ யார்? என்று பொதுச் சுகாதாரப் பரிசோத கர்களைப் பார்த்துக் கேட்டவர்கள் இப்போது பொலிஸ் தண்டம் அடித்த பிறகு 'கப்சிப்' என அடங்கிவிட்டனர்.

சொல்லியும் செய்யார் கயவர் என்று சொல்லப்படுவர். கயவருக்கு உரியது தண்டனையே. தண்டனைகள் கடுமையானால் சமூகத்தைத் திருத்த முடியும். சிங்கப்பூர் சுத்தமான இடமாக உள்ளது.ஒரு சினிமாப் படத்தில் சிங்கப்பூரில் நிலத்தில் சோறு போட்டுச் சாப்பிடலாம் என்று கதாநாயகன் சொல்வார். அவ்வாறு சிங்கப்பூர் சுத்தமான நாடாக வருவதற்கு அங்கு வழங்கப்படும் தண்டனையே காரணமாகும்.

அதுபோல மத்திய கிழக்கு நாடுகளில் குற்றச் செயல்கள் பெருகாமைக்கு அல்லது அதைக் குறைப்பதற்கு அங்கு வழங்கப்படும் கடுமையான தண்டனைகளே காரணமாகும்.

சமூகத்தின் மேம்பாட்டுக்கு நிலைக்களனாகும் வகையில் சமூகத்தை ஒழுங்குபடுத்துவது அவசியமாகும். அதற்காக அவர்களை நற்பிரஜைகளாகக் காண வைக்க சட்ட ரீதியான தண்டனைகளும் அவசியமே. சமூகத்தை ஒழுங்குப்படுத்த இத்தகைய சட்டங்களைச் சம்பந்தப் பட்டவர்கள் பயன்படுத்தாதுவிடின் நமது சமூகத்தை நாமே புதைகுழிக்குள் தள்ளி விடுவோம்.

விழிச்சான் குஞ்சு.

# பிள்ளைகளைக் கண்காணித்து நெறிப்படுத்த வேண்டும்

பல நூல்நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. இதனை மாற்ற ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது பிள்ளைகளை நூல் நிலையங்களுக்கு அனுப்பி நல்லொழுக்கங்களை ஏற்படுத்த வழி செய்ய வேண்டும்.

தென்மராட்சி,பெப்.3

சிறு வயதிலிருந்து பெற்றோர்கள் பிள்ளைகளைக் கண்காணிப்புடன் நல்ல புத்திமதிகளைக் கூறி, நல்வழியில் நடத்த வேண்டும். அண்ணல் காந்தியின் எண்ணக் கூற்றுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் காந்தி சேவா சங்க மண்டபத்தில் நடைபெற்ற காந்தி நினைவு அஞ்சலிக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காந்தி மகான் காட்டிய வழியில் இதய சுத்தியுடன் செயற்பட்டால் எடுத்த கருமங்கள் யாவும் வெற்றியாக அமையும்.

கிராமங்களை முன்னேற்றினால் நாடும் சமுதாயமும் முன்னேறும். இதனை முன்னெடுக்க இளைஞர்களை கிராமங்கள் தோறும் ஒன்று சேர்த்து, அந்தந்தக் கிராமங்களில் கிராம அபிவிருத்திப் பயிற்சிகளை வழங்க வேண்டும். இந்தத் திட்டத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கவுள்ளோம்.

எமது இளஞ் சிறார்களை, நல்வழிப்படுத்த நூல் நிலையங்கள் பெரிதும் உதவக் கூடியவை. இவர்களைத் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னால் இருக்கவிடாமல் நூலகங்களுக்கு அனுப்ப வேண்டும்.

தற்போது பார்த்தீர்களேயானால் பல நூல் நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. இளஞ் சமுதாயத்தினர் நூல் நிலையம் செல்வதைத் தவிர்த்து வருகின்றனர். இதனை மாற்ற ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது பிள்ளைகளை நூல் நிலையங்களுக்கு அனுப்புவதன் மூலம் அவர்கள் நல்லொழுக்கங்களைப் பழக வாய்ப்பு ஏற்படும்- என்றார். (ச-207)

## நிர்வாகிகள் தெரிவு

நவாலி,பெப்.3

நவாலி அத்திரான் முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவர் - ச.சிவசோதிநாதன், உபதலைவர் - க.கணேசு, செயலாளர் -ஐ.யோகேஸ்வரன், உப செயலாளர் - கு.சிவலிங்கம், பொருளாளர் - வே. சிற்றம்பலம், திருப்பணி பொருளாளர் - சி.சிவச்செல்வன்.

இவர்களுடன் 13 பேர் கொண்ட அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-100)

***

யாழ்ப்பாணம், பெப்.3

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 45 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் நிர்வாக சபையின் தலைவராக ச.ஜெயகணேஸ், உப தலைவர்களாக சி.மதுசூதனன், சூ.சே.குலநாயகம் ஆகியோரும், செயலாளராக சூ.ஞானசேகரம், உபசெயலாளராக கி.மகாலிங்கம், பொருளாளராக இ.இராதாகிருஸ்ணன் ஆகியோரும், நிர்வாகசபை உறுப்பினர்களாக சி.அருணாசலம், த.சந்தானவேல், ச.பிரதீபன், ச.விஷ்வரூபன், ச.ரமேஸ்குமார், வி.டினேஸ்கரன், வி.நிமலன் ஆகியோரும், காப்பாளர்களாக ந.அனந்தராஜ், சி.சிவபாலசிங்கம், பூ.அகமணிதேவர் ஆகியோரும் கணக்காய்வாளராக கே.என்.தேவதாசும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-313)

***

சாவகச்சேரி ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி, டச்சுவீதி, அகிலாண்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் நிர்வாக சபையின் தலைவராக மகாலிங்கம் விவேகானந்தன், உபதலைவராக திருமதி பரிமளம் வைத்திலிங்கம், பொருளாளராக திருமதி பரமநாதன் ஸ்ரீ காந்தரூபி, செயலாளராக திருமதி சுஜீதா துர்க்கரன், நிர்வாக சபை உறுப்பினர்களாக செல்வி ஸ்ரீ துஷாந்தி கனகரத்தினம், திருமதி நந்தாயினி சூரியகுமார், திருமதி மகிந்தா உதயகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-313)



கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி பு.ஆறுமுகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றுகின்றார்.

## பதிவு செய்யவும்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் படித்த இளைஞர், யுவதிகள் தொடர்பான விவரங்கள் யாழ்.மாவட்ட செயலகத்தால் சேகரிக்கப்படவுள்ளன.

எதிர்காலத்தில் வேலை வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கு அமைவாக படித்த வேலையற்ற இளைஞர், யுவதிகளை அந்தந்த பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று, விவரங்களைப் பதிவு செய்து மீள பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (ச-313)

## முதியோர் சங்கம் உருவாவது சிறந்த விழுமியப் பண்பு

### சமூக சேவைகள் அதிகாரி தெரிவிப்பு

நாவற்குழி, பெப்.3

முதியோர்கள் தமக்காகச் சங்கங்களை உருவாக்கிக் கொள்வது சிறந்த விழுமியப் பண்பாகும். உலகெங்கும் முதியோர்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதுபோல எமது நாட்டிலும் ஏற்பட்டு வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது என்று வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச சமூக சேவைகள் அதிகாரி திருமதி விஜயகுமாரி முகுந்தன் தெரிவித்தார்.

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

''நலிவுற்ற சமூகத்துக்குக் கை கொடுப்போம்''என்ற குறிக்கோளுடன் சமூக சேவைகள் திணைக்களம் இயங்கி வருகின்றது.

முதியோர்கள் தமக்காக சங்கங்களை அமைத்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக உதவிகளைப் பெற்றுத் தமது அங்கத்தவர்களுக்கு உதவி வழங்க வேண்டும்.

சமூகத்துக்குச் சுமையாக இருக்காது தம்மைத்தாமே பராமரிக்க முன்வருவது சமூக முன்மாதிரியாகும்.

முதியோர்களுக்கான தேசிய செயலகம், முதியோர்களின் நலன் புரி நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.

முதியோர் தொடர்பாக அரசு கொண்டுள்ள உயர்வான அக்கறையின் வெளிப்பாடே இதுவாகும்.

சமூக நன்மதிப்புமிக்க முதியோர்கள் தொடர்பான நலன்களைப் பேண முன்வரல் வேண்டும்- என்றார். (ச-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0755732271, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## அரசியல் ரீதியில் மக்களை பழிவாங்கும் டக்ளஸ்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தாவுக்கும் வேலையற்ற பட்டதாரிகளுக்கும் இடையில் புதனன்று நடந்த சந்திப்பு சுவாரஸியமானது. ''குடிகாரர்களையும் தெருப் பொறுக்கிகளையும் தேர்தலில் நிறுத்தினால் மக்கள் எப்படி வாக்களிப்பார்கள்'' என்று ஒரு பட்டதாரி அமைச்சரிடம் கேட்டார். பதிலளிக்க அமைச்சர் டக்ளஸால் முடியவில்லை.

தேர்தலில் அரசு தோற்றதற்கு மக்கள் காரணமில்லை அமைச்சர் டக்ளஸும் அவரது கட்சியும்தான் காரணம் என்றும் அந்தப் பட்டதாரி மாணவன் சொல்லியிருக்கிறார்.

தனது தவறுகள், மக்கள் தன்னை நிராகரிப்பதற்கான காரணங்கள் எதனையும் ஒருபோதும் மீளாய்வுக்கு உட்படுத்தாத அல்லது உட்படுத்த விரும்பாத அமைச்சர் டக்ளஸ், தனது எல்லாத் தோல்விகளுக்குமான தவறுகளுக்கும் மற்றையோர் மீது பழி போடுவதையே வழக்கமாகக் கொண்டவர். அதுவே அவரது அரசியல்.

முன்னர் புலிகள் செய்தவை தவறு தவறு என்று சொல்லிக் கொண்டிருந்தார். பின்னர் ஊடகங்கள் குறிப்பாக உதயன் செய்வது தவறு என்று சொல்லி அரசியல் செய்து வந்தார்; கூடவே கொஞ்சக் காலமாக மக்கள் தவறு செய்துவிட்டார்கள் என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்.

பொதுத் தேவைக்காக அவரிடம் யார் போய் நின்றாலும், ''நீங்கள் எனக்கு வாக்களித்திருந்தால் நீங்கள் கேட்பதையெல்லாம் நான் அரசிடம் இருந்து பெற்றுத் தந்திருப்பேன்; அதைச் செய்யாமல் இப்போது வந்து ஏன் கேட்கிறீர்கள்'' என்று தெரிவித்து வருகிறார்.

வேலையற்ற பட்டதாரிகளிடமும் அதையேதான் டக்ளஸ் தெரிவித்திருந்தார். ''உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறச் செய்திருந்தால் உங்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருமாறு கேட்க முடியும்; அப்படி வாக்களிக்காத உங்களுக்கு வேலை தரும்படி ஜனாதிபதியிடம் எப்படிக் கேட்கமுடியும்'' என்று பட்டதாரிகள் மீது பாய்ந்திருக்கிறார். அமைச்சர் இப்படிப் பேசியிருப்பது ஓர் அப்பட்டமான அரசியல் பழிவாங்கல்.

தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் எந்த ஒரு ஜனநாயக அரசும் தனக்கு வாக்களித்த மக்களுக்குத்தான் வசதிகளையும் வாய்ப்புகளையும் தருவேன் என்று ஒருபோதும் கூற முடியாது. ஏனெனில், ஒட்டு மொத்த மக்களுக்குமான அரசுகளே தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றன. பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்கள் அரசமைக்கலாம். ஆனால் அந்த அரசு ஒரு நாட்டின் அத்தனை மக்களுக்குமானது. அது ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய அனைத்து வசதிகளும் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

அப்படிப் பகிர்ந்தளிக்கப்படாமல் போனதன் விளைவே இன்று இலங்கையில் இனப்பூசலுக்கான அடித்தளமாக மாறியிருக்கிறது. கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் புறக்கணிக்கப்பட்ட இளைஞர்களே கடந்த காலங்களில் ஆயுதங்களை ஏந்தினார்கள். அமைச்சர் டக்ளஸ் அதனை மறந்து போனமை வேடிக்கையானது.

ஆசிய நாடுகளில் ஆட்சியில் உள்ளவர்கள் தமது ஆதரவாளர்களுக்கு நியமனங்களில் முன்னுரிமை வழங்குவதும் சலுகைகள் காட்டுவதும் இரகசியமாக நடக்கின்றன. அவையெல்லாம் உண்மையில் ஊழல் என்ற வகைப்பாட்டுக்குள் அடங்குபவை. போட்டிப் பரீட்சை அல்லது பொதுக் கொள்கை ஒன்றின் மூலமே பொது நியமனங்கள் இந்த நாட்டில் வழங்கப்படவேண்டும். அதனைக் கேட்டுச் சென்ற பட்டதாரிகளையே அமைச்சர் டக்ளஸ் அரசியல் ரீதியாகப் பழிவாங்கியிருக்கிறார்.

அவரது நியாயப்படி, சலுகைகளைப் பெற அரசுக்கு வாக்களிக்கவேண்டும் என்றால், இடையில் இவர் ஒருவர் எதற்கு? சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அங்கஜனுக்கோ அக்கட்சியைச் சேர்ந்த யாராவது ஒரு சிங்களவருக்கோ வாக்களித்து விட்டுப் போகலாமே! இடையில் தரகராக இவர் எதற்கு?

# மஹிந்தருக்கு ஞானம் மியன்மாரில் கிட்டுமா?

**கொழும்பில் வெளியாகும் 'சிலோன் ருடே' பத்திரிகையில் உப்புல் யோசப் பெர்னாண்டோ எழுதிய பத்தியின் மொழியாக்கம் இது**



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரைவில் பர்மா (மியன்மார்) செல்லவுள்ளார். போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை ஜனாதிபதி முதன் முதலில் தனது அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டது மியன்மார் நாட்டுக்கே.

மியன்மார் அரசைத் தலைமையேற்று நடத்திய இராணுவ ஆட்சியாளரான ஜெனரல் தன் ஷீவின் அழைப்பை ஏற்று இலங்கை ஜனாதிபதி அங்கு சென்றிருந்தார். இது அனைத்துலக மனிதஉரிமைகள் அமைப்புக்களாலும், மேற்குலக சக்திகளாலும், அமெரிக்காவாலும் கடுமையான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி மியன்மாருக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்த காலப்பகுதியில், ஆங் சாங் சூகி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவரை மஹிந்த பார்வையிட்டிருக்கவில்லை.

ஆனாலும் அப்போது மியன்மாரை ஆட்சிசெய்த ஜெனரல் தன்ஷீவை இலங்கைக்கு வருமாறு மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்ற ஜெனரல் தன் ஷீ 2009 நவம்பர் 12 இலங்கை வந்திருந்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தனது கூட்டுப் படைத் தளபதி பதவியிலிருந்து விலகி அரசியற் செயற்பாடுகளுக்குள் நுழையவுள்ளதாகத் தெரிவித்து மஹிந்தவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்ததும் அன்றே நிகழ்ந்தது.

ஜெனரலின் வருகையும், பொன்சேகாவின் பதவி விலகல் கடிதமும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன என்பது தற்செயலானதாகும். மியன்மார் ஜெனரலை வரவேற்கச் சென்றதே பொன்சேகாவின் இறுதி இராணுவச் செயற்பாடாக இருந்தது.

இதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தலை நடத்தி அதில் வெற்றி பெற்றார். இரண்டாவது தடவையாக நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார். மியான்மாரின் இராணுவ ஆட்சியாளர், ஆங் சாங் சூகியை வீட்டுக்காவலில் வைத்தது போன்று, மஹிந்தவும் பின்னர் சரத் பொன்சேகாவை சிறையிலடைத்தார்.

மியன்மார் ஜெனரல் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்ட வேளையில் அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களுக்கு உட்பட்டிருந்தார்.

வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஆங் சாங் சூகியை விடுதலை செய்து, நாட்டில் ஜனநாயக ஆட்சியை நடத்துமாறு தன் ஷீவி மீது ஐக்கிய நாடுகள் சபை, மேற்குலகம், ஐரோப்பிய சக்திகள், அமெரிக்கா மற்றும் அனைத்துலக மனித உரிமைகள் அமைப்புக்கள் என்பன பெரும் அழுத்தங்களை கொடுத்துக் கொண்டிருந்தன.

அத்துடன் மேற்குலக நாடுகளால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையால் மியன்மார் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியிருந்தது. இவ்வாறானதொரு சூழலில், சீனாவால் வழங்கப்பட்ட உதவி மட்டுமே மியன்மாருக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

இதேபோன்றே இலங்கையை உலக நாடுகள் பல எதிர்த்தபோதும் அதற்குத் துணையாக இருந்த நாடு சீனா. மியன்மார் மீது அமெரிக்காவாலும், மேற்குலக நாடுகளாலும் போடப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தனது நலனை மேம்படுத்தியதே தவிர, மியன்மார் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதற்குச் சீனா ஒருபோதும் உதவப்போவதில்லை என்பதை மியன்மாரின் ஜெனரல் பின்னாள்களில் நன்கு உணர்ந்து கொண்டார்.

தமது நாட்டின் நிலைப்பாட்டைப் பயன்படுத்தி சீனா தம்மீது ஏறி சவாரி செய்வதை உணர்ந்து கொண்ட மியன்மாரின் ஆட்சிப் பீடம், தமக்கான சிறந்த நலன்களை அடைவதற்காக அமெரிக்காவுடனும், மேற்குலக நாடுகளுடனும் நட்பைப் பேண வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டது.

இதன் முதற்கட்டமாக, மியன்மாரின் ஜெனரல் நாடாளுமன்ற மற்றும் அரச அதிபர் தேர்தல்கள் மேற்கொள்ளப்படும் என உறுதிப்பாடு வழங்கினார்.

ஆனால், முதலில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆங்சாங் சூகியை விடுதலை செய்த பின்னரே தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் விரும்பின.

அதற்கு தன் ஷீவி இணங்கவில்லை மியான்மாரில் அரச அதிபர் தேர்தல் நடத்தப்பட்டு ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்கப்படும்வரை ஆங் சாங் சூகியை விடுதலை செய்வதை ஜெனரல் தன் ஷீவின் தள்ளிப் போட்டார்.

தேர்தலில் துர்நடத்தைகளைக் கட்டவிழ்த்து விட்டமை மற்றும் தேர்தல் விதிமுறைகளை மீறியமை போன்றவற்றுக்காக ஜெனரல் தன் ஷீவி மீது அமெரிக்கா, மேற்குலக நாடுகள் மற்றும் மனிதஉரிமைகள் அமைப்புக்கள் என்பன குற்றம் சாட்டின. ஜனநாயக ஆட்சியை நாட்டில் கொண்டு வருவதற்கு நீண்டகாலம் எடுக்கும் என ஜெனரல் பதிலளித்தார்.

எவ்வாறிருப்பினும் அதிபர் தேர்தல் முடிந்த பின்னர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஆங் சாங் சூகியை ஜெனரல் தன் ஷீவி விடுதலை செய்தார்.

மியன்மாரில் ஜனநாயக ஆட்சி நடைமுறைக்கு வந்து கொண்டிருப்பதற்கான முதலாவது நகர்வாக இதனை அமெரிக்காவும், மேற்குலகமும் கவனத்தில் கொண்டது. அத்துடன் இம்மாற்றத்தை இந்த நாடுகள் சிறிது பாராட்டிக் கொண்டன.

மியன்மாரில் ஊடகங்கள் மீதான தடைகள் பகுதியளவில் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசியற் கைதிகளில் ஒரு தொகுதியினர் விடுவிக்கப்பட்டனர். இருந்தாலும், ஆங் சாங் சூகியின் அரசியல் எதிர்காலம் என்பது நிச்சயமற்ற ஒன்றாகவே தொடர்ந்தும் உள்ளது.

விடுதலை செய்யப்பட்ட ஆங்சாங் சூகியுடன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தொலைபேசி மூலம் கலந்துரையாடியதுடன், இவரை நேரில் சென்று பார்வையிட்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்காக அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்ரனையும் அனுப்பி வைத்திருந்தார்.

அத்துடன் சூகியைப் பார்வையிடுவதற்காக பிரிட்டனின் வெளியுறவுச் செயலர் வில்லியம் ஹேக்கும் மியன் மாருக்குப் பயணம் செய்திருந்தார்.

இவ்வாறான முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்ற வேளையில், ஆங் சாங் சூகியின் அரசியல் நகர்வுகள் எவ்வாறுள்ளன என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது. அவர் தனது அரசியல் கட்சியைப் பதிவு செய்து நாடாளுமன்றிற்குள் நுழைவதற்காகக் காத்திருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதியின் பிரதிநிதியாக மியன்மாருக்குச் சென்ற கிலாரி கிளின்ரன் ஆங் சாங் சூகியைச் சந்தித்து அரசியல் செயற்பாடுகளில் மீண்டும் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்துள்ளமையானது முக்கிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் மியன்மாருக்கு மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. எஞ்சியுள்ள ஏனைய அரசியற் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டால், மியன்மார் மீதான பொருளாதாரத் தடையை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நீக்க முடியும் என பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் நடைபெறவுள்ள தேர்தல்கள் நீதியாகவும், நேர்மையாகவும் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும், இதன் மூலம் ஆங் சாங் சூகி நாடாளுமன்றுக்குள் செல்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்வாரா என்பதையும் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் மிக நுணுக்கமாக, நெருக்கமாக அவதானிக்கும்.

மஹிந்த முதலில் மியன்மாருக்குச் சென்றபோது அங்கு ஜனநாயகத்துக்கும் சுதந்திரத்துக்கும் எதிரான இராணுவ ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அந்த வேளையில் சீனா மட்டுமே மியன்மாருக்கு உதவி செய்து கொண்டிருந்தது.

இந்தத் தடவை மஹிந்தர் மியான்மாருக்கான தனது அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளும் போது அங்கே, சீனச் செல்வாக்கால் தூக்கி வீசப்பட்டிருந்த- ஆனால் தற்போது அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளால் ஆதரவளிக்கப்படுகின்ற- ஜனநாயக ஆட்சி நடைபெறுவதைக் காண்பார்.

மியன்மாரில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் மிகப் பிரதானமாகக் கவனிக்கப்படுகின்ற ஆங் சாங் சூகியை, மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தடவை சந்தித்துக் கலந்துரையாடுவாரா இல்லையா என்பது தெரியவில்லை.

மியன்மாரிலிருந்து ஜனாதிபதி ராஜபக்ஷ இலங்கைக்குத் திரும்பி வந்த பின்னர், அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களிலிருந்து தப்பிப்பதற்காக, மியன்மார் ஜெனரல்கள் ஆங் சாங் சூகியை விடுதலை செய்தது போன்று, சரத் பொன்சேகாவையும் விடுதலை செய்வது தொடர்பாக சிந்திப்பாரா என்பது எதிர்வு கூற முடியாது.

சீனாவை மட்டும் சார்ந்திருப்பதானது இலங்கைக்கு பெரும் தடையாகவே இருக்கும் என்பதை யாவது மஹிந்த ராஜபக்ஷ இந்தப் பயணத்தின் பின்னர் ஏற்றுக் கொள்வாரா அல்லது இல்லையா என்பதும் சிந்திக்க வேண்டியது.

*(நன்றி: புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முடிவுறாத துன்பப் பயணங்கள்

ப.புவிதா

“ தற்போது நெடுந்தீவுத் துறைமுகத்தை ஆழமாக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் வேலை முற்றாக முடியும் போது வடதாரகை பழுதுபடாமல் இருந்தால் கொஞ்சம் பரவாயில்லை. தீவுப் போக்குவரத்து எப்போதும் தடைப்படக் கூடிய ஒன்றாகவும் பயங்கரமானதுமாகவே 21 ஆம் நூற்றாண்டிலும் காணப்படுவதற்கு யார் பொறுப்பு?

நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டுள்ள பகுதியே தீவு என்று அழைக்கப்படுகின்றது. அந்த வகையிலே இலங்கைத் தீவுக்குள்ளே பெரிய தீவாகக் காணப்படுகிறது நெடுந்தீவு.

இலங்கை என்ற பிரதான நிலத்துண்டில் இருந்து நெடுந் தொலைவில் உள்ளதால் இந்தத் தீவுக்கான போக்குவரத்துப் பிரச்சினை நீண்ட காலமாகவே தொடர்கிறது.

தீவக மக்களின் பெரும்பாலான தேவைகள் யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்யப்படுகின்றன. தீவகத்தையும் குடாநாட்டையும் இணைக்கும் மிக முக்கிய பாலமாக பண்ணை காணப்படுகின்றது. கடந்த பல மாதங்களாக பண்ணை தாம்போதியைத் திருத்தும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளுக்குச் செல்லும் பிரதான பாதையாகவும் பாலமாகவும் வேலணை வங்களாவடிப் பாலம் காணப்படுகின்றது. அதுவும் தற்போது மோசமாகச் சேதமாகி உள்ளது.

தீவுகளுக்கான தரைப் பயணமே பல துயரங்கள் கொண்டது என்றால் கடல் பயணம் மிகக் கொடூரமானதும் மோசமானதுமாக இருக்கிறது. நெடுந்தீவு மற்றும் நயினாதீவுக்குக் குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்துதான் படகு மூலம் செல்ல வேண்டும். வெளிமாவட்ட மக்களின் வருகை தற்சமயம் அதிகரித்து வருவதால் நயினாதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்த நிலைமையைச் சமாளிக்க பயணிகளை ஏற்றி மறுகரை கொண்டு செல்ல படகுகளின் பயணம்தான் ஒரே தஞ்சம். குறிகாட்டுவான் துறைமுகத்துக்கும் நயினாதீவுக்குமான தூரம் இரண்டு கிலோ மீற்றர்தான். என்றாலும் பயணிகள் பல அசௌகரியங்களைச் சந்தித்துத்தான் செல்கின்றனர். நயினாதீவு புனிதப் பிரதேசமாகக் காணப்படுவதால் பல்லாயிரக் கணக்கான மக்கள் வருகை தருகின்றனர். அந்தச் சமயங்களில் சில பொழுதுகளில் கடற்படையினரின் படகும் சேவையில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆனால், நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து அந்தோ பரிதாப நிலையே...

ஒரு நாளில் இரண்டு மூன்று தடவைகள்தான் நெடுந்தீவுக்குப் படகுகள் சேவையில் ஈடுபடுகின்றன. சிறிது காற்று வீசினால் அதையே சாட்டாக வைத்து ஒருவேளைதான் படகு சேவை இடம்பெறும்.

நெடுந்தீவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமான வழித் தொடர்பு பயணிகள் மூலமானதே. குமுதினி, அக்குவாட்டி, கடற்றொழிலாளர் சங்கப் படகு, அந்தோனியார் கோயில் படகு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகு, வடதாரகை போன்றன சேவையில் ஈடுபடுகின்றன.

புதிதாக போன வருடம் அனுப்பி வைக்கப்பட்ட வடதாரகை II படகு காற்றுக் காலங்களில் சேவையில் ஈடுபடுவதில்லை. அதுமட்டுமல்லாமல் வடதாரகைப் படகு நெடுந்தீவின் துறைமுகத்துக்கும் செல்வதில்லை. காரணம் கடல் ஆழம் போதாமையே. இதனால் அந்தப் படகு சேவையில் ஈடுபடும் பட்சத்தில் நெடுந்தீவுக் கரைப் பகுதியிலிருந்து இன்னோர் படகு உதவிக்கு வரவேண்டியுள்ளது.

தற்போது நெடுந்தீவுத் துறைமுகத்தை ஆழமாக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் வேலை முற்றாக முடியும் போது வடதாரகை பழுதுபடாமல் இருந்தால் கொஞ்சம் பரவாயில்லை.

மக்களுக்குப் பயன்படக் கூடிய மற்றைய படகுகளில் மேற்கூரை, இருக்கைகள் இல்லை. வெயில், மழைக் காலங்களில் இந்தப் படகுகளில் மக்கள் பயணத்தை மேற்கொள்வது கடினமானது. அந்தப் படகுகள் தற்போது சிமெந்து, கல், மணல் ஏற்றும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.

குடாநாட்டையும் தீவகத்தையும் இணைக்கும் 22 கிலோமீற்றர் தூரமான பாதையை பல துயரங்களுக்கு மத்தியில் கடந்து குறிகாட்டுவான் துறைமுகத்துக்குப் போனாலும் கடலில் பயணம் செய்யும் மக்களின் அவலம் முடியாது தொடர்வதை யாரிடம் சொல்லி அழுதும் பயனில்லை என்று தீவக மக்கள் குமுறுகிறார்கள்.

கடல் போக்குவரத்துத் தொடர்பாக நயினாதீவு படகு ஓட்டுநரிடம் கேட்டபோது, அங்குள்ள படகுகளை நேரத்தின் அடிப்படையில் பிரித்து வைத்துள்ளதாகவும் மக்கள் அதிகமாக வந்தாலும் சேவையில் ஈடுபடும் படகுகள் அவர்கள் அனைவரையும் கரைசேர்க்கும் எனவும் கருத்து வெளியிட்டார்.

நெடுந்தீவுவாசி ஒருவரிடம் கேட்ட போது, இந்தப் போக்குவரத்துப் பிரச்சினை முடிவில்லாது தொடர்கிறது என்று சலித்துக் கொண்டார். கடந்த வருட இறுதியில் நடைபெற்ற சம்பவத்தையும் சுட்டிக் காட்டினார்.

''நெடுந்தீவிலிருந்து காலை 7 மணிக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் படகு புறப்பட்டது. ஆனால் அன்று நெடுந்தீவு மேற்குப் பகுதியில் இருந்து பஸ்ஸில் வந்த மக்களை படகு ஏற்றாமல் போய்விட்டது. பஸ் கொஞ்சம் பிந்தி வந்ததே இதற்குக் காரணம். படகு குறித்த நேரத்துக்குப் புறப்பட்டுவிடும். ஊரில் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் தாமதங்களைக் கவனத்தில் எடுப்பதில்லை. கட்டாயம் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய சிலர் மற்றைய படகுக்காரரிடம் படகை விடுமாறு கேட்ட போது 7,000 ரூபா கேட்டனர். இதுதான் எமது மக்களின் நிலை'' என்றார் அந்தப் பயணி.

நெடுந்தீவுக்கு முதன் முதலாக பயணம் மேற்கொண்ட பயணி ஒருவர் குறிப்பிடுகையில் ''நேர அட்டவணைகள் துறைமுகங்களில் போடப்பட்டிருப்பதைப் பார்த்து நாங்களும் வந்து நின்றோம். ஆனால் அந்த நேரத்துக்குப் படகுகள் புறப்படவில்லை. தென்னிலங்கையிலிருந்து கணிசமானவர்கள் இப்போது நெடுந்தீவுக்குச் செல்வதால் படகுகள் விரைவில் நிறைந்துவிடுகின்றன. இது உள்ளூர் பயணிகளைப் பாதிக்கிறது என்று நினைக்கிறேன். அவர்கள் முகங்களைப் பார்க்கும் போது எம்மீது கோபம் தெரிகிறது'' என்றார்.

தீவுப் போக்குவரத்து எப்போதும் தடைப்படக் கூடிய ஒன்றாகவும் பயங்கரமானதுமாகவே 21 ஆம் நூற்றாண்டிலும் காணப்படுவதற்கு யார் பொறுப்பு? எப்போதுதான் இம்மக்கள் நிம்மதியாய் பயணம் செய்ய போகிறார்கள்...?

# இலாபத்தின் பாதையில் கூட்டுறவு

நந்தன்

“ தற்போது மோசடிகள் ஓரளவு தவிர்க்கப்பட்டாலும், சங்கங்களை துரித செயற்பாட்டுப் பாதைக்குக் கொண்டு செல்வதில் பெரும் இக்கட்டு நிலையை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் எதிர்கொள்கிறது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடத்தில் 16 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயற்பட்டிருப்பதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

2011 ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் வரைக்கும் மேற்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 16 சங்கங்கள் லாபத்தில் செயற்பட்டுள்ளன. மீதி எட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நட்டத்திலேயே இயங்கியுள்ளன.

2010 ஆம் ஆண்டின் தரவுகளின்படி இந்த நிலை தலைகீழாக இருந்துள்ளது. எட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயற்பட மீதியாகவுள்ள 16 சங்கங்கள் நட்டத்தில் செயற்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டில் சங்கங்கள் ஓரளவுக்கு முன்னோக்கிச் சென்றுள்ளன. குறைந்தது மாவட்டத்தில் 24 சங்கங்களில் 16 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது வியாபார நடவடிக்கையில் முன்னோக்கி சென்றுள்ளன.

கடந்த ஆண்டின் மொத்த வருமான லாபத்தில் மூன்று சங்கங்கள் முன்னிலையில் உள்ளன. முதலாவதாக நீர்வேலியும், இரண்டாவதாக கொடிகாமமும், மூன்றாவதாக யாழ்ப்பாணமும் இடம்பிடித்துள்ளன.

பண்டத்தரிப்பு, அச்சுவேலி, உடுப்பிட்டி, நல்லூர், பருத்தித்துறை, புலோலி, அல்லைப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம், ஊர்காவற்றுறை, கைதடி, புங்குடுதீவு, சாவகச்சேரி, மானிப்பாய், ஆகிய பலநோக்குக் கூட்டுறவு கடந்த ஆண்டில் மொத்த லாபத்துடன் செயற்பட்டுள்ளன.

சுன்னாகம், தெல்லிப்பழை, வேலணை, காரைநகர், கட்டைவேலி நெல்லியடி, சங்கானை, வடமராட்சி கிழக்கு, நெடுந்தீவு போன்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கியுள்ளன.

பின்னோக்கி நட்டத்தில் செயற்படும் எட்டு சங்கங்களையும் லாபகரத்தில் செயற்படுத்துவதற்கும் திணைக்களத்தால் உரிய நடவடிக்கைகள் [illegible] என்று அதிகாரிகள் கூறினர்.

யாழ்.குடாநாட்டில் கூட்டுறவுத் துறை கடந்த காலத்தில் அதன் செயற்பாடுகள் யாவும் பின்னோக்கியே சென்றன.

நிர்வாக திறன் இன்மை மற்றும் ஊழல் மோசடிகளால் சங்கங்கள் நட்டத்தில் இயங்கின என்கிறார்கள் யாழ்.மாவட்ட அதிகாரிகள்.

தற்போது மோசடிகள் ஓரளவு தவிர்க்கப்பட்டாலும், சங்கங்களை துரித செயற்பாட்டுப் பாதைக்குக் கொண்டு செல்வதில் பெரும் இக்கட்டு நிலையை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் எதிர்கொள்கிறது.

சங்கங்களின் செயற்பாட்டை இந்த ஆண்டில் மேலும் அதிகரிப்பதற்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் துரித நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்து, சங்கங்களை துரித வளர்ச்சிக்கு கொண்டு வரவும் நட்டத்தில் இயங்கும் சங்கங்களை லாபகரமாகச் செயற்படுத்தவும் 15 பேர் கொண்ட குழு ஒன்றை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம் நியமித்துள்ளது.

குறிப்பாக கிளை நிலையங்களில் வியாபார நடவடிக்கைகளை அதிகரிப்பதோடு மக்கள் மத்தியில் கூட்டுறவு விழிப்புணர்வையும் ஏற்படுத்தி, மக்களைக் கூட்டுறவில் முழுமையாக இணைப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

கிராமங்கள் தோறும் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களை மேலும் திறந்து வைப்பதோடு அப்பகுதி மக்களின் வசதி கருதி கூட்டுறவு 'மினி கோப்' சிற்றிகளையும் திறந்து வியாபார நடவடிக்கையை அதிகரிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு என்ற மகிமையை மக்களிடத்தில் கொண்டு செல்வதற்கு கூட்டுறவுத் துறையை புனர்நிர்மாணம் செய்யவேண்டிய ஆண்டு 2012 என கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கூறினார்.

கூட்டுறவுச் செயற்பாட்டை மேலும் விருத்தி செய்ய சங்கங்களின் தலைமைகளும் நிர்வாகங்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கூறுகின்றார்.

இதேவேளை இந்த அபிவிருத்திக் குழுவின் உறுப்பினரும் மூத்த கூட்டுறவாளரும், அச்சுவேலி, யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் பொதுமுகாமையாளருமான கவீந்திரதாஸ் கூறுகையில்,

''பெரும் நட்டத்தைச் சந்தித்த யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைக் கூட லாபம் ஈட்டுவதில் நாம் தற்போது மூன்றாம் நிலைக்கு கொண்டு வந்துள்ளோம்'' என்றார்.

சங்கங்கள் மேலும் லாபகரத்தில் செயற்படுவதற்கு பணியாளர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்கிறார்.

''பெரும் நட்டத்தைச் சந்தித்த தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தைக்கூட விரைவில் லாபகரப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். இந்தச் சங்கம் இந்த மாதத்தில் ஓரளவு லாபத்தை அடையும் நிலையில் உள்ளது. சங்கங்களின் செயற்பாட்டை மேலும் அபிவிருத்திக்கு கொண்டு செல்வதற்கு பணியாளர்களின் ஒத்துழைப்பு முக்கியமானது''.- என்றார். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிகள் ஜாக்கிரதை

தன்னை மிகவும் படித்தவனாகக் காட்டிக் கொள்ளுவதில் சிலருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. பத்துப்பேர் உட்கார்ந்து பேசுகின்ற போது அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கோள்களை, பாடல் களை, பொன்மொழிகளை அவசர அவசரமாகக் கொட்டுவார்கள்.

'வாழ்க்கையில் ஒன்றுமில்லை' 'எல்லாம் மாயை' 'எல்லோரும் கடவுளின் குழந்தைகள்தான் இதில் உயர்வு தாழ்வு எதுவுமில்லை' என்றெல்லாம் உயர்ந்த தத்துவங்களை அள்ளி வீசுவார்கள். ஆனால் அந்த அனுபவங்கள் வாழ்விலே சிறிதும் இல்லாமல் இருப்பார்கள்.

நூறு விடயங்களைப் பற்றி இப்படி அரைகுறையாக அறிந்து வைத்திருப்பதைவிட, உளறிக்கொட்டி கிளறி மூடுவதைவிட, ஒன்றையாவது உணர்ந்து கொள்வது நல்லது.

ஆழமாக ஒன்றை உணர்ந்துவிட்டால் மற்றைய உண்மைகள் தாமாகப் புரியும். எனவே அறிவாளியாகக் காட்டிக் கொள்ளப் படிப்பதை நிறுத்திவிட்டு, அறிவாளியாகுவதற்குப் படிக்கலாம். மேலான மகாவாக்கியங்களை, தத்துவங்களைக் கொச்சைப்படுத்தும் மூடத்தனத்தை விடலாம்.

இதைவிட அபத்தமான, ஆபத்தான பழக்கம் சிலருக்கு உண்டு. உயர்ந்த தத்துவங்களைக் கூடத் தங்கள் சுயலாபம் கருதித் தாழ்வாகத் தாறுமாறாக அர்த்தம் செய்து கொண்டு விளக்கம் சொல்வார்கள். ஓர் உதாரணம் சொல்கிறேன்.

ஒருவன் தூக்கத்தில் புலி துரத்துவது போலக் கனவு கண்டான். வியர்த்து விறுவிறுத்து இதயம் படபடக்க ஓடினான். திடீர் என்று விழித்துக் கொண்டான். தான் கண்டது கனவு என்று உணர்ந்தான். இனி, புலி அவனை என்ன செய்ய முடியும்? அந்தப் பயம் இனிக் கிடையாது. புலி கனவே.. அதனால் நனவில் அது பயமுறுத்த முடியாது.

அதேபோல இந்த வாழ்க்கையே ஒரு கனவு. இது பிரபஞ்ச மாயையின் விளைவு. இதில் இன்ப துன்பம் யாவும் பொய். நீ இந்தக் கனவில் இருந்து விழித்துக் கொண்டால் இந்தக் கனவில் நிகழ்ந்த பாவ புண்ணியங்கள் அர்த்தம் இழந்துவிடும் என்கிறது வேதாந்தம். 'நிற்பதுவே, நடப்பதுவே' என்கின்ற புகழ்பெற்ற பாரதி பாடலில் இவை யாவும் "காட்சிப் பிழைதானோ" "அற்ப மாயைகளோ" என்று பாரதி கேட்பதைப் படித்துப் பாருங்கள்.

இந்த வேதாந்தக் கருத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் கொலை, கற்பழிப்பு போன்ற பாவச் செயல்களை வேண்டும் என்றே செய்துவிட்டு, "இந்த வாழ்வே வெறும் கனவு. இதில் பாவ புண்ணியம் மாயை. இந்தக் கனவில் இருந்து விழித்து விட்டேன்" என்று ஒருவர் சொன்னால் அது ஞானம் ஆகுமா? இப்படித்தான் வேதாந்தக் கருத்துக்களை இன்று போலி வேதாந்திகள் சொல்லிச் சொல்லி ஏமாற்றுகிறார்கள். அதனால்தான் மதத்தின் மீது பலருக்கு எரிச்சல் வருகிறது.

பகவான் இராமகிருஷ்ணர், போலி வேதாந்திகளைக் கேலி செய்து ஒரு கதை சொல்வார். உடல் மாயை என்பது உடல் வழி வந்த நிறம், ஜாதி, ஆண் பெண் என்கின்ற பேதங்கள். இதை பொய் என்கிறது வேதாந்தம். இது மிகவும் ஆழமான விடயம். எல்லாமே விம்பம் அதனால் இவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பேதம் காட்டுவது மடமை. இந்த அத்வைத கருத்தை ஒரு ராஜாவுக்கு ஒரு குரு உபதேசம் செய்தார்.


'ஆஹா' என்று தலையாட்டிய ராஜா, மனதுக்குள் மட்டமானவன். அதனால், தன் வேலைக்காரியை மகாராணி ஆக்கினான். மகாராணியை வேலைக்காரியாக்கினான். கேட்டால் உயர்வு தாழ்வு என்று எதுவும் கிடையாது என்று தத்துவம் பேசினான். பதவியிழந்து வேலைக்காரியான மகாராணி குருநாதாரிடம் போய் அழுதாள். "உங்கள் அறிவுரையால் தானே இப்படி நடந்தது" என்று நியாயம் கேட்டாள். குருநாதர் அவளிடம் ஒரு யோசனை கூறி அதன்படி நடந்து கொள்ளச் சொன்னார்.

மதிய நேரம் குருநாதர் அரண்மனைக்கு வந்தார். அவரை வணங்கி உணவுக் கூடத்துக்கு விருந்துக்கு அழைத்து வந்தான் மகாராஜா. வேலைக்காரியாகிவிட்ட முன்னாள் மகாராணி மரியாதையுடன் உணவு பரிமாறினாள். வகை வகையாக இலையில் உணவு படைத்தவள் கடைசியாக அருவருப்பான மனித மலத்தைக் கொண்டு வந்து இலையில் வைத்தாள்.

கோபத்துடன் அவளை அடிக்க எழுந்தான் ராஜா. குருநாதர் தடுத்து, "அப்பா நீ அத்வைத ஞானி அல்லவா... வேலைக்காரியும் பிரம்மம்; மகாராணியும் பிரம்மம் என்று பேதம் கடந்த நீ மலத்திற்கும் உணவுக்கும் பேதம் பார்க்கலாமா?" என்று கேட்டார். ஒரு கணம் அதிர்ந்து போன ராஜா, சமாளித்துக் கொண்டு, "குருவே.. இந்த அபேத ஞானம் கொடுத்தவர் நீங்கள். எனவே நீங்கள் மலத்தை உண்டால் நானும் உண்ணுவேன்" என்று கேலியாகச் சிரித்தான்.

குரு உடனே பன்றியாக மாறி மலத்தை உண்டார். மீண்டும் மனிதராக மாறி உணவை உண்டார். "முட்டாளே பன்றியும் நானும் வேறல்ல. அந்த அபேத நிலை எய்தியவனுக்கு உணவும் மலமும் வேறல்ல. உன்னால் பன்றியாக மாற முடியுமா? ஆக முடியாதவரை வேலைக்காரியும் மகாராணியும் உனக்கு எப்படி ஒன்றாக முடியும்?" என்றார். ராஜா வருந்தினான், திருந்தினான்.

பூரணமான ஞானியின் வசனங் களை அரைகுறைகளாகச் சொல்லி அசிங்கப்படுத்தக் கூடாது. இன்று இந்துமதத்தில் இந்த அரைவேக்காடு களின் அரசாட்சிதான் அட்டகாசமாக நடக்கிறது!



சுகி. சிவம்

# பாரம்பரியக் கலைகளை வளர்க்கும் மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை

(சென்றவாரத் தொடர்ச்சி)




சோபனா

பாடசாலையின் வளங்கள் யாவும் இலங்கை மற்றும் புலம்பெயர் நாடுகளில் வதியும் சாயி பக்தர்களாலே இந்தப் பாடசாலைக்குக் கிடைக்கப்பெறு வது இந்தப் பாடசாலையின் ஒரு தனிச் சிறப்பாகவுள்ளது. அத்துடன் பாடசாலையின் அபி விருத்திக்காக 12 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்கள்,தமது சேவையை வழங்குவதுடன் சாயி பக்தர்களாகவும் உள்ளனர். இந்தப் பாடசாலை ஒரு தனியார் பாடசாலையாக இருந்தாலும் இலவசக் கல்விப் போதனையை வழங்குவதால் கல்வித் திணைக்களம், மாகாணக் கல்வி அமைச்சு என்பன மாணவர்களின் கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

பாடசாலைக்கு இத்தகைய ஆதரவுகள் கிடைப்பதால் மாணவர்கள் தமது கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

தரம் 1 முதல் தரம் 10 வரை உள்ள இந்தப் பாடசாலைகளில் அரச கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைகளையே மாணவர்கள் எதிர்கொள்வதற்கு பாடசாலை வழி சமைத்துக் கொடுத்துள்ளது. தமிழ்மொழி மூலம், ஆங்கில மொழி மூலம் என இரு மொழிகளிலும் பாடசாலை மாண வர்கள் திறமையுடையவர்களாகத் திகழ்வதை பரீட் சையில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் திறன் களைக் கொண்டே மதிப்பிடக் கூடியதாக உள்ளது.

சிறிய பாடசாலையில் மாணவர்களின் வளங் கள் குறைவாக இருந்தாலும் 'ஒரு பானை சோற் றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல அனைத்து மாணவர்களும் திறமையு டைய மாணவர்களாகத் திகழ்ந்து வருகின்றனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2007 ஆம் ஆண்டு 21 மாணவர்கள் பரீட்சைக் குத் தோற்றி 8 மாணவர் களும், 2008 ஆம் ஆண்டு 14 மாணவர்கள் பரீட்சைக் குத் தோற்றி 7 மாணவர் களும் 2009 ஆம் ஆண்டு 23 மாணவர்கள் பரீட்சைக் குத் தோற்றி 6 மாணவர்களும் 2010 ஆம் ஆண்டு 18 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 10 மாணவர்களும் 2011 ஆம் ஆண்டு 16 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 7 மாணவர் களும் சித்தியடைந்திருந்தனர்.

**மாணவர்களிடையே ஏற்படும் உளத்தாக் கங்களை மற்றும் சிறந்த சிந்தனைகளை ஏற்படுத்தும் முகமாகவும் வாரத்தில் இரண்டு தினங்கள் யோகாசனப் பயிற்சி இடம்பெற்று வருகின்றது.**

அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் 128 புள்ளிகளுக்கு மேல் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட் பட்ட இந்தப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட் சையில் 2008, 2009, 2011 ஆகிய ஆண்டுகளில் கோட்ட மட்டத்தில் மூன்றாமிடத்தையும் 2010 ஆம் ஆண்டு கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்று மாணவர்கள் பாடசாலைக் குப் பெருமை சேர்த்துக் கொடுத்தனர்.

பாடசாலையில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளும் ஆன்மிக ரீதியான பழக்க வழக்கங்களையும் கொண்டு சிறந்த பாடசாலையாகத் திகழ்வதால் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தமது பிள்ளைகளையும் இந்தப் பாடசாலையில் இணைத் துக் கொள்ள வேண்டும் என ஆர்வம் கொண்ட னர். எனினும் பாடசாலை குறைந்த வளங்களைக் கொண்டமைந்துள்ளதால் அதிகமான மாணவர் களை பாடசாலையில் இணைத்துக் கொள்ள பாடசாலை நிர்வாகம் சற்றுப் பின் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் வறுமை நிலைமையைக் கருத்தில் கொண்டு பாடசாலை நாள்களில் ஒவ்வொரு நாளும் போசாக்கு உணவுகள் வழங் கப்படுவதுடன் பசுப்பால் போன்ற சத்துணவு களும் வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைக்குத் தேவையான நிதியுதவிகளை சாயி பக்தர்கள் வழங்கி வருவதால் ஜீவாகாரம், நீராகாரம் என சாயியின் போதனைகளுக்கு அமை வாக மாணவர்களின் பசியையும் தாகத்தையும் தீர்ப்பது மட்டுமல்லாது கல்விப் பசியையும் எந்த விதத் தடைகளும் இல்லாமல் தீர்த்து வருகின்றது.

சைவ சமயத் திறன்களை சிறந்த ஆசிரியர் களின் வழிகாட்டலில் வழங்கும் இந்தப் பாடசாலை யில் அகில இலங்கை ரீதியாக இடம்பெறும் சைவ பரிபாலன சபைத் தேர்வுகள் மற்றும் ஏனைய போட்டிகளிலும் மாணவர்கள் தங்கம், வெள்ளி மற் றும் வெண்கலம் எனப் பதக்கங்களை வென்று திறமையுடையவர்களாக திகழ்ந்து வருகின்றனர்.

கல்விச் செயற்பாடுகளில் மட்டுமல்லாது இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் திறமையு டைய மாணவர்களை இந்தப் பாடசாலை உரு வாக்கி வருகின்றது. வருடா வருடம் பாடசாலை யில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகள் யாவும் மனித விழுமியங்களைப் பறைசாற்றுவ தாக அமைந்துள்ளதுடன் வெளிநாடுகளில் இருந்து விருந்தினர்கள் அழைக்கப்பட்டு மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்ற னர்.

அத்துடன் மாணவர்களி டையே எமது பாரம்பரியமான கலைகளை நிலை நிறுத்தும் நோக்குடன் நடனம், சங்கீதம் போன்ற பாடங்கள் மூலம் கலைத் திறன்களை விருத்தி செய்வது டன் வயலின், தபேலா, மிருதங் கம் போன்ற வாத்திய இசைக் கருவிகளையும் மாணவர்கள் பயன்படுத்துவதற்குப் பயிற்சி கள் வழங்கப்படுகின்றன.

பாடசாலையில் சிறப்பு நிகழ்வுகள் வருடந்தோறும் இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக தமிழ் விழா, பரிசளிப்பு விழா, சாயி பிறந்த தின விழா, நடன நிகழ்வு, நாடக நிகழ்வு, பண்ணிசை நிகழ்வு, சமய நிகழ்வுகள் போன்றன குறிக்கப் பட்ட தினங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. மாணவர்களிடையே ஏற்படும் உளத்தாக்கங் களை மற்றும் சிறந்த சிந்தனைகளை ஏற்படுத்தும் முகமாகவும் வாரத்தில் இரண்டு தினங்கள் யோகாசனப் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலை வளங்களில் ஒன்றாக நூல் நிலையம் இந்தப் பாடசாலைக்கு கிடைத்துள்ளமை மாண வர்களின் கற்றல் திறன்களை விருத்தியடையச் செய்ய ஏதுவாக அமைந்துள்ளது. பாடசாலைத் திட்டங் களூடாக மனித மேம்பாடுகளை உருவாக்கி சிறந்த கல்விமான்களை உருவாக்குவதே இந்தப் பாடசாலையின் நோக்கமாகவுள்ளது. முற்றிலும் சாயி போதனைகளை வழிகாட்டியாகக் கொண்டு சாயி பக்தர்களின் உறுதுணையுடன் செயற் படும் இந்தப் பாடசாலையின் அதிபராக திருமதி என். கந்தசாமி கடமையாற்றி வருகின்றார்.

பாடசாலையின் ஆரம்ப அதிபராகவும் தற்போதைய அதிபராகவும் கடமையாற்றும் இவ ரின் அளப்பரிய சேவைகளும் சாயி பாபாவின் கருணையாலும் மானிப்பாய் நகரின் சிறந்த பாடசாலையாக இந்தப் பாடசாலை திகழ்வதற் குக் காரணங்களாக அமைந்தவையாகும். எதிர்காலத்தில் சாயி பக்தர்களின் துணையுடன் மேலதிக வகுப்புகளை அதிகரிக்கச் செய்வதே பாடசாலையின் தற்போதைய இலக்காக உள்ளது. வறிய மாணவர்களின் கற்றல் திறன்களை வெளிக் கொணர்வதற்கு அடித்தளமாக உள்ள இந்தப் பாடசாலையின் கல்விப் பணி, தடைகளையும் இடர்களையும் தாண்டி சீரிய வழியில் தொடரும் என்பதில் ஐயமில்லை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டுப்புள்ளியில் குளறுபடி; ஆணையாளருக்கு அழைப்பாணை

கொழும்பு,பெப்.3

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்றில் கையாளப்பட்ட வெட்டுப்புள்ளி திட்டத்தை இரத்து செய்து அதனை மீண்டும் தயாரிக்கும்படி உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சிலர் இணைந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**வெட்டுப்புள்ளி கணிப்பீட்டுத் திட்டத்தை இரத்துச் செய்து புதிய பெறுபேறு களை வெளியிடுமாறு மனு தாரர்கள் சார்பில் கோரப்பட்டுள்ளது.**

வெட்டுப்புள்ளி கணிப்பீட்டின்போது ஏற்பட்ட குளறுபடிகளால் கல்வித்துறையில் தற்போது அதிக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது என்று இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதனால் வெட்டுப்புள்ளி கணிப்பீட்டுத் திட்டத்தை இரத்துச் செய்து புதிய பெறுபேறுகளை வெளியிடுமாறு மனுதாரர்கள் சார்பில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க உள்ளிட்ட மூன்று நீதிபதிகள் குழு முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனு மீதான விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னர் மனுவில் பிரதி வாதிகளாகக் கூறப்பட்டுள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்டவர்களுக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது. இதன்படி, மனு மீதான விசாரணை எதிர்வரும் 13 ஆம் திகதி இடம்பெறும் என்று நீதிபதிகள் குழு தெரிவித்துள்ளது. (ச)

## எனக்காகப் போராடுங்கள்! பொன்சேகா கோருகிறார்

கொழும்பு,பெப்.3

என்னைக் கடத்திச் சென்று, போலிக் குற்றச்சாட்டு சுமத்தி சிறையில் அடைத்து எதிர்வரும் 8 ஆம் திகதியுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. எனக்காக நடத்தப்படும் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மக்களிடம் கோரியுள்ளார்.

மேன்முறையீட்டு வழக்கு விசாரணைகளில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் உயர் அதிகாரி, மனசாட்சிக்கிணங்க பணியாற்ற முடியாமையினால் பதவி விலகியுள்ளார்.

அந்த உயரதிகாரியை நாம் பாராட்டுகின்றோம். இதன் மூலம் யார் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பது வெளிப்படுகின் றது. இந்த நிலைமைகளை மாற்றி அமைப்போம் என்று அவர் தெரிவித்தார். (ச)

## 13 பிளஸ் தீர்வுத் திட்டம் எவருக்குமே பாதிப்பில்லை

கொழும்பு,பெப்.3

நாட்டில் வாழும் சாதாரண மக்களுக்கு 13 ஆம் திருத்தச் சட்டத்தை கடந்த தீர்வுத் திட்டம் ஓர் பிரச்சினை யல்ல என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிலும் தெற்கிலும் வாழும் சாதாரண மக்களுக்கு 13 பிளஸ் பற்றிக் கவலையில்லை. வடக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த சில அரசியல்வாதிகளே 13 பிளஸினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் பிரதேச பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் கடமையாற்ற இடமளிப்பதனை சிங்களவர்கள் எதிர்க்கவில்லை. நாட்டின் சில அரசியல்வாதிகளே இதனை எதிர்க்கின்றனர்.

**நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்கக் கூடாது என்பதே சாதாரண மக்களின் பிரதான நோக்கம்.**

வடக்கில் விவசாயம் செய்யப்படாத தரிசு நிலங்களில், விவசாயம் செய்ய மக்களுக்கு அனுமதி அளிப்பதனை தெற்கு விவசாயிகள் ஒருபோதும் எதிர்க்கவில்லை. மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலை தூக்கக்கூடாது என்பதே சாதாரண மக்களின் பிரதான நோக்கமாகும்.

வடக்கு, கிழக்கு, தெற்கு உள்ளிட்ட இந்த நாட்டின் சாதாரண மக்களுக்கு 13 பிளஸை விட மேலும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன - என்றார்.(ச)

## டெங்கு ஒழிப்பு அமைச்சுக்கு உட்பட்டதல்ல

கொழும்பு,பெப்.3

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையானது சுகாதார அமைச்சின் அதிகார வரம்புக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய விடயமில்லை என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கை சுகாதார அமைச்சின் கடமைநோக்கங்களுக்குள் அடங்கவில்லை. இது சுகாதார அமைச்சின் கடமைகளை விஸ்தரிக்கிறது. சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சுற்றாடல் அமைச்சின் கீழேயே டெங்கு ஒழிப்பு உள்ளடங்குகிறது என்று அவர் தெரிவித்தார். (ச)



வெள்ளவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொதுச் சந்தை கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்பு முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மஞ்சள் மழை

கொழும்பு,பெப்.3

ஹற்றன், மேபீல்ட் தோட்டத்தில் தொழிலாளர்கள் நேற்று வியாழக்கிழமை வேலை செய்துகொண்டிருந்தபோது ஒரு வகையான மஞ்சள் நிறத் திரவ மழைப் பொழிந்தது என்று தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேபீல்ட் தோட்டத்தின் எட்டாம் இலக்க மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீதும் தேயிலைச் செடிகளின் மீதும் இந்த மஞ்சள் திரவ மழை பொழிந்ததாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் 10.15 மணி முதல் 11 மணி வரை இந்த மஞ்சள் மழை தூறல் காணப்பட்டதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர். (ச)

## மக்களின் ஆதரவை அரசு பெறவில்லை

கொழும்பு,பெப்.3

தமிழ் மக்களின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களை அரசு பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தவிசாளர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு உரியமுறையில் அபிவிருத்தித் திட்டங்களையோ அல்லது அரசியல் தீர்வுத் திட்டத்தையோ அரசு வழங்கவில்லை. இதன் காரணமாகவே தமிழ் இனவாத சக்திகள் 13ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பாலான தீர்வுத் திட்டங்களை கோருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

**போர் நிறைவடைந்தும் வடக்கு, கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் திருப்தி அடையமுடியாது.**

போர் நிறைவடைந்து மூன்றாண்டுகள் கடந்த நிலையில் வடக்கு, கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் திருப்தி அடைய முடியாது. இந்தியாவிடம் அபிவிருத்திப் பணிகள் ஒப்படைக்கப்பட்டதனால் உரிய முறையில் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது. தூர நோக்கற்ற அரசின் கொள்கையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

## தனியான நிர்வாக அலகு முஸ்லிம்களுக்கு அவசியம்

கொழும்பு,பெப்.3

முஸ்லிம் மக்களுக்கு தனியானதொரு நிர்வாக அலகு அவசியம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம். ஹசன் அலி தெரிவித்தார்.

புதிதாக தென்கிழக்கு மாகாண சபை ஒன்று உருவாக்கப்பட்டு அதன் அதிகாரத்தை முஸ்லிம் சமூகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்துக்கு அப்பாலான தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு தனியானதொரு நிர்வாக அலகு வழங்கப்படவேண்டும்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முழுமையாக ஆதரிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்கள் ஒன்றிணைக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு தனியான அலகு உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அதன் பின்னர் 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்துக்கு அப்பாலான தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென் கிழக்கு மாகாண சபையை உருவாக்குவதன் மூலம் மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சு மூலம் ஏனைய இன சமூகங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அறிவிக்கப்பட்டுள்ள சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ளத் தயார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றுகிறது அரசு

கொழும்பு,பெப்.3

அரசு தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சித்து வருவதாக ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்,

அவர் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசியப் பிரச்சினை நாளுக்கு நாள் சிக்கல் மிகுந்த தன்மையை வெளிப்படுத்துகின்றது. 13 ஆம் திருத்தச் சட்டத்தைக் கடந்த தீர்வுத் திட்டம், செனட் சபை, நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அனைத்துக் கட்சி கூட்டம் என்று அரசு நாளுக்கு நாள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஏழு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கும் முயற்சியில் முழுமையாக ஈடுபடவில்லை, மக்களை ஏமாற்றும் வகையில் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்காத அரசு, எவ்வாறு காணி மற்றும் பொலீஸ் அதிகாரங்களை வழங்கும்?

தேசியப் பிரச்சினை தொடர்பான அரசின் இரட்டை நிலைப்பாடு அமைச்சர்களின் முரண்பட்ட கருத்துக்களின் மூலம் வெளிப்படுகின்றது. அரசு காணி உரிமைகளை வழங்கவேண்டுமாயின் சம்பூர் மற்றும் வண்ணி போன்ற பிரதேசங்களில் இடம் பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட வேண்டும்.

போரைக் காரணம் காட்டி அரசு தமிழ் மக்களின் கூடுதலான பாரம்பரிய நிலத்தை அபகரித்துக் கொண்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காக போராடவில்லை. அரசியல் இருப்பை உறுதி செய்யும் நோக்கில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

புலிகளினால் பிரசாரம் செய்யப்பட்ட பிரிவினைவாத கொள்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் பின்பற்றுகின்றனர்.

தேசிய ஒற்றுமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் பேசியதில்லை- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Baby Cheramy

# அன்பும் பரிசும்

# அடுத்த சுற்றுப் போட்டிகளின் வெற்றியாளர்கள் நீங்கள்தானா?

பேபி ஷெரமி அன்பும் பரிசும் 2ம் சுற்று
வெற்றியாளர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!




1 பரிசு

## சுசுகி அல்டோ காரினை வென்ற அதிஷ்டசாலி


ஜோசப் சின்துஜா - குறுமண்வெல 12, களவன்சிக்கொடி



2 பரிசு

## சுகூட்டி பெப் இனை வென்ற அதிஷ்டசாலி

தின்னார பஸ்நாயக - ஹெம்பலகொட, பல்காஹதென்ன
H. A. பாரமி பெரேரா - பனாவெவ, அனுராதபுரம்




3 பரிசு

## இருபது தங்க மாலைகளை வென்ற அதிஷ்டசாலிகள்

B. ஹிருனி காவின்திந்தி - மடவில, அத்கடுர
T. P. இரேஷா சன்தமாலி - அக்கரள, அத்கதுர
ஜீலியன் மார்ஸ்டன் - ரம்பிடிய வீதி, ராகம
அனுருத்த் ஏகநாயக - மஹாபிடிய, பொதுஹர
மதுக பிரசாத் குளதுங்க - கோட்டே வீதி, நுகேகொட
ஜெயன்த பாலசூரிய - கண்டி வீதி, பஸ்யால
அனோமா வீரசிங்க - கரநிமர, வதுருகம
ரோஹினி கத்ரிஆராச்சி - கந்தனபிடிய, போபே, பாதுக்க
D. A. M. டிகிரி குமாரி - வள்கோள்ளாகம, பதுளை
P. K. டினுஷி உதயங்க - நிரல்கம, ரத்னபுர
M. D. மொஹமட் அக்ரம் - பவத்குளம், வவுனியா
M. M. ராணி - மல்லவபிடிய, குருநாகலை
நிரோஷா முதுமால - முருத்தலாவ, பேராதனை, கண்டி
P. ஸ்ரீதேவி - இல. 81, நவ ஜனபதய, புவக்பிடிய
கருணாரத்ன - வரக்காபிடிய, சல்கொட
K. H. பமோதா ஜநெத் நிஷ்சன்க - முருத்தலாவ, பஸ்யால
பாத்திமா ருஸ்னா - நொக்ஸ் வீதி, முத்தூர்
V. அச்சுதன் - கடவனம் கோவில், வள்வட்டிதுறை
V. சிவம் ஐயர் - இராமநாதன் வீதி, தெற்கு கோபாய்
S. சுவேன்தினி - மன்னம்பிட்டி, பொலன்றுவை

4 பரிசு



## கையடக்கத்தொலைபேசிகளை வென்ற அதிஷ்டசாலிகள்

M. K. டினுஷன் பெரேரா - கெமுனு இடம், வெயன்கொட
ரம்யா லசன்தி - காலி வீதி, கல்கிஸ்சை
W. D. K. எதிரிசிங்க - ஓலுகங்தொட, பலன்கொட
W. K. ரூபிகா - வலஸ்கலவத்தை, வலஸ்களை
ருக்மன் ஜெயசேகர - மிதிவலான, நாகொள்ளாகொட
E. M. C. சித்ரான்கனி - பண்டியமுல்லை, கம்பஹா
G. J. K. வருணிகா பிரபாஷினி - தெற்கு மாகொல, மாகொல
ரஷ்மிதா கிருஷ்ணமேனன் - T R I தலவாகலை
P. D. ரமணி மேரி ஜெனட் - ரண்பொகுணகம, நிட்டம்புவ
D. G. தமாரா குமாரி - ஹீனடியான, மினுவன்கொட
R. M. சன்ஜீவ பண்டார - பலுடெனிய, சிறிபுர
W. G. தேவிகா மனோஹாரி - ஹப்பாவள, வன்ச்சாவள, காலி
K. D. துஷாரிகா குமாரி - உடகஹஹென, உடஹெரதெம்புவ
ரவீஷ சன்தருவன் - பில்லவ, ஹொரன
M. A. டம்மிகா பிரியன்தி - லக்ஷப்திய, மொரட்டுவ
ஷானிகா குமாரி - மாலிம்பட, பலடுவ, மாத்தறை
லதா விஜேசூரிய - வலகம்முல்ல, பொதுஹர
K. M. அக்மால் - எலுவன்குளம், புத்தளம்
ஷஹானா சல்மான் - மஹாவீத்தியா மாவத்தை, கொழும்பு 13
செல்வராஜ் மேரி யோலன்ட் - நாவன்துறை, யாழ்ப்பாணம்

## போட்டி விதிமுறைகள்

1. குலுக்கலில் வெல்லப்படும் பரிசுகளுக்கு பதிலாக எந்தவொரு பணப்பரிசும் கிடைக்கப்பெறமாட்டாது.
2. பரிசினது வடிவம், நிறம் என்பன கையிருப்புக்கு ஏற்ப வேறுபடலாம்.
3. பரிசுகள் வழங்கப்பட்ட பின், பரிசுகளின் உத்தரவாதத்தை ஹெமாஸ் நிறுவனம் பொறுப்பேற்காது

இப்போட்டியில் ஹேமாஸ் நிறுவனம், சர்வா இன்டிகிரேடட், பீனிக்ஸ் O&M ஊழியர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களும் பங்கு பெற முடியாது. இவர்களை தவிர்த்து ஏனைய இலங்கை பிரஜைகள் பங்கு பெறலாம்.

## குலுக்கல் நடைபெறும் திகதிகள்

மூன்றாவது குலுக்கல் 2012 பெப்ரவரி 15

## போட்டியில் கலந்துகொள்ளும் முறை

பேபி ஷெரமி சவர்க்கார உறைகள் 2 ம் கிறீம் லேபில் 1ம் உங்கள் பெயரையும், முகவரியையும், தொலைபேசி இலக்கத்தையும் எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.
**"பேபி ஷெரமி, அன்பும் பரிசும்"**
**த.பெ. இல. 2285, கொழும்பு**




WP / GT / 3408

Baby Cheramy
தூய அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐந்து மாவட்டங்களிலும் ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# ஐக்கிய நாணய சங்கத்தின் 28 ஆவது நிறைவு விழா

தென்மராட்சி, பெப். 3

சரசாலை வடக்கு, நித்திலா மகளிர் ஐக்கிய நாணய சங்கத்தின் 28 ஆவது ஆண்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவி திருமதி க.ஞானச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு, முதன்மை விருந்தினராக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வட மாகாணப் பணிப்பாளர் திரும்தி வி.ஸ்ரீகாந்தரூபன், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.அருந்தவநாதன், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் செ.பத்மநாதன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் கு.பிரேமகாந்தன், தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ந-207)

## ஹற்றன் நஷனல் வங்கியின் வாகன பவனி

தென்மராட்சி, பெப்.3

ஹற்றன் நஷனல் வங்கியின் பத்தும் விமன பரிசூதியசீட்டிழுப்புத் திட்டம் அறிமுகம் தொடர்பான வாகன பவனி நேற்றுமுன்தினம் பருத்தித்துறை கிளையில் ஆரம்பமாகி அம்பாந்தோட்டை கிளை வரையில் செல்கிறது.

பருத்தித்துறை முனையில் தொடங்கி தெய்வேந்திர முனை வரையான வடக்கு தெற்கு இணைப்பு நிகழ்வான இந்த வாகன பவனி இடம் பெறுகிறது.

ஒவ்வொரு கிளையிலும் இந்த வாகனம் தரித்து நின்று வாடிக்கையாளர்களின் கையடையாளங்களைப் பெற்றுச் செல்கிறது.

மேலும் வங்கியினால் அறிமுகப் படுத்தும் பரிசூதியத்திட்டம் தொடர்பான விளக்கமும் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. (ந-207)

## கைகள் எதற்கு?

தானமும் தருமமும் புரிவதற்காகவே மனிதர்களுக்கு இறைவனால், கைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. விலங்குகளில் யானை ஒன்றைத் தவிர மற்றவைகளுக்கு கைகள் இல்லை. யானை தனக்குக் கை இருந்தாலும்கூடத் தானமும் தருமமும் செய்வதில்லை. அதனால்தான் கை இருந்தும் கூட தருமம் செய்யாத யானையை அதிவீரராம பாண்டியன் ''யானைக்கில்லை தானமும் தருமமும்'' என்று பாடினார். முருகப் பெருமானுக்கு பன்னிரெண்டு கரங்கள். பன்னிரண்டு கரங்களாலும் பக்தர்களுக்கு வாரி வாரி வழங்கும் கருணையினால் முருகனை வள்ளல் என்று வாழ்த்துகின்றோம்.

ஞானக்கதிர்

## 'காந்தீயம்' டிசெம்பர் மாத இதழ்

அகில இலங்கை 'காந்தி சேவா' சங்கத்தின் அதிகார பூர்வ ஏடான 'காந்தீயம்' இதழின் 2011 டிசெம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழின் இலவச பிரதியொன்றைப் பெற விரும்பும் அன்பர்கள் 5.00 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர் 'காந்தீயம்', இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ள முடியுமென்று 'காந்தீயம்' இதழாசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.

(ந)

## சுவிஸ் வருவோருக்கு விதிமுறைகளைக் கூறவேண்டும்

சுவிற்சர்லாந்தில் புகலிடம் நாடி வருவோருக்கு விரைவாகப் பதில்களை கூறினால் அவர்களின் எண் ணிக்கையை குறைக்க முடியும் என்று சுவிஸ் அரசின் அகதிகள் குழு தெரிவித்துள்ளது.

அந்தக் குழுவின் பொதுச் செயலாளரான பீட்மேனர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது;

தங்கள் தேவைகளை இங்கு உடனடியாக நிறைவேற்ற இயலாதவர்கள் வேறு இடம் தேடிப் போவதற்கு அவர்கள் விரைவாக சுவிஸ் நாட்டின் விதிமுறைகளை அறிந்து கொள்வதும் அவசியமாகும் என்று கூறியுள்ளார். இரண்டு வாரங்களில் அவர்கள் இந்த விதிமுறைகளைப் பற்றித் தெரிந்து கொண்டால் விரைவாக வெளியேறி விடுவர்கள். மேலும் அவர்கள் இப்போது இங்கு வருவதற்கே ஒரு முறைக்குப் பல முறை யோசிக்க வேண்டியுள்ளது என்றார். டச்சு அரசின் முன் மாதிரியை சுவிஸ் அரசும் பின்பற்றினால் அகதிகள் சுவிற்சர்லாந்தில் தங்குவது என்பது மிகவும் குறையும், என்றும் தங்க விருப்பமில்லாதவர் உடனே வேறு நாடுகளைத் தேடிச் செல்வார்கள் என்றும் தெரிவித்தார். இங்கு பதிவு மையங்களும், அலுவலர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக இருப்பதினால் அகதிகள் தங்க வைக்கப்படவோ அல்லது அனுப்பிவிடவோ அரசுக்கு மிகவும் கால தாமதாமாகிறது என்றும் கூறினார். (ந)

## சமையலறைக் கட்டடம் திறப்பு

தென்மராட்சி, பெப்.3

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் உலக உணவுத் திட்ட நிறுவனத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட சமையலறைக் கட்டடம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் க. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சமையலறைக் கட்டடத்தை திறந்து வைத்தார். (ந-207)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31.03.1950

மறைவு
15.01.2011



## அமரர் சண்முகநாதன் சத்தியநாதன்

கணக்காளர் - பிள்ளையார் களஞ்சியம், மல்லாவி.

ஆசையாய் எமைப் பெற்றுவளர்த்து
அறிவும் பண்பும் புகட்டி வளர்த்த எம் அப்பாவே...
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள்
நித்தமும் உங்கள் நினைவோடுதானப்பா...
எங்கள் அன்புக்குரிய அப்பா - உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (03.02.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

முருகன் கோயிலடி,
ஊற்றுப்புலம், கிளிநொச்சி. (11018)(2-6)

- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னையா சிவநாதன் (சிவா)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடா, மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவநாதன் 30.01.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் அதிரூபராணியின் (ராணி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திருமதி குகேஸ்பரன், ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற துரையப்பாவின் மருமகனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன்-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் ரஜீவ், சங்கீதா, சிவசாம்பவி ஆகியோரின் தந்தையும் ஜெகதேவி, மேர்வின், தாரகாந்தன் (காந்தன்) ஆகியோரின் மாமனும் கிறிஸ்யஸ்ரின், யஸ்வின், சர்வாங்கி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Urgel Bourgie 3955 Cote-De-Liesse, Saint-Laurent மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 05.02.2012 ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

த.தர்மராசா,
சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய். (13797) (6,7,10)

தகவல்:
குடும்பத்தினர்
(0014387642178, கனடா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இறைவழிபாட்டில் நாட்டம் செல்லும். வழக்கமான பணிகளை, உடற்பயிற்சிகளைச் செய்வதை தள்ளி வைக்கலாம். குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். வீண் வம்பு, விவகாரங்களில் இருந்து விடுபடுவீர்கள். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

**இடபம்:** நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள். தனவரவுகளைப் பெறலாம். குடும்ப உறுப்பினர்கள் உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். ஓய்வின்றி சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பெண்கள் பிறந்த வீட்டினர் வருகையால் சந்தோஷம் அடைவர். கடந்தகால இழப்பு ஒன்றை ஈடு செய்யும் வாய்ப்பு உருவாகும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

**மிதுனம்:** சுபச்செலவுகள் அதிகரிக்கும் நாள். எதிர்காலத் திட்டம் ஒன்றுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். கடன்கள் வசூலாகி திருப்தி தரும். ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் அலைந்து திரியலாம். கோபம், வேகத்தைக் குறைக்க வேண்டும். வெளியூரில் வசிக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம்.

**கடகம்:** சுகம், சந்தோஷம் அதிகரிக்கும் நாள். தொல்லை கொடுத்தவர்களே தோள் கொடுக்க முன்வருவர். வேண்டிய பணத்தைப் புரட்டிக் கொள்ள வாய்ப்புக் கிட்டும். வெறுப்பாகச் செயற்பட்ட சொந்த பந்தங்கள் அன்பாக, அனுசரணையாக நடந்து கொள்வர். விருப்பமான உணவுகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சுகமான அனுபவம் உண்டு

**சிங்கம்:** எதையும் ஒன்றுக்கு பலமுறை யோசித்து புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள். கொடுக்கல், வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். காலதாமதமாக சில வேலைகளை ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். குடும்பப் பெரியவர்களின் யோசனைகளைக் கேட்டு நடப்பீர்கள். குரு வழிபாட்டின் மூலம் குதுகலம், மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** ஆரோக்கியத்தில் அக்கறைகாட்ட வேண்டிய நாள். திடீரென நிகழும் மாற்றங்களால் வியப்படையலாம். எதிரிகள் தொல்லைகள் குறைந்து ஏற்றம் பெறுவீர்கள். உடன்பிறப்புகள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். திடீர் பயணங்கள் செல்ல நேரிடலாம். முன்பின் பார்த்திராத சிலருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம்.

**துலாம்:** குடும்பத்தில் கருத்துவேறுபாடுகள் அதிகரிக்கும். உதவிசெய்வதாகச் சொன்ன சிலர் கையை விரிக்கலாம். பிள்ளைகள் வழியில் தண்டச்செலவுகளைச் சந்திக்கலாம். தீவிரயோசனைகள், அலைக்கழிப்புகளுக்கு ஆளாகலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும்நாள்.

**விருச்சிகம்:** உறவு, பகை பாராமல் உதவி செய்வீர்கள். பண ஆதாயம் தரும் சில வேலைகளை அக்கறையோடு செய்வீர்கள். பெண்கள் வழியில் சந்தோஷம்தரும் செய்திகளைக் கேட்கலாம். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும்.

**தனுசு:** காலை முதல் மாலை வரை பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். உறவினர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சக ஊழியர்களால் கோபம், எரிச்சல் உண்டாகலாம். அயலார் மதிக்கும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள். கடனாகக் கொடுத்த பணம் ஒன்று திரும்பி வரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அனுகூலமான நாள்.

**மகரம்:** புகழ், கௌரவத்துக்கு பங்கம் வராமல் நடந்துகொள்ள முற்படுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளால் சிரமங்களைச் சந்திக்கலாம். மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ளலாம். சிலரை கேலிசெய்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிலருடன் கோயில்களுக்குச் சென்று வழிபடலாம். வயிறு, வாயு உபாதைகளைச் சந்திக்கலாம்..

**கும்பம்:** உறவினர்கள் சிலர் உங்களை நம்பி வேலைகளை ஒப்படைக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகி கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களை குறை கூறுவதைத் தவிர்க்க வேண்டும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் ஒன்று இன்று எதிர்பாராதவிதமாக முடியும். சிலரிடம் கேட்ட உதவி கிடைப்பது தள்ளிப் போகலாம்.

**மீனம்:** குழப்பங்கள் தீர்ந்து எதிலும் தெளிவான, தீர்க்கமான முடிவு எடுக்கும் நாள். வரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்வீர்கள். பெண்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறைந்து, நிம்மதி பெறுவீர்கள். மாமன், மைத்துனர் உதவியோடு முக்கிய காரியம் ஒன்று நிறைவேறும். சில வேலைகளுக்காக கடுமையாக அலையலாம். அனுகூலமான நாள்.

**நாளை**

தை 21 சனிக்கிழமை 04.02.2012
திதி: துவாதசி பி.இ. 04.51 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.ப. 12.04 வரை
சுபநேரம்: 03.35 - 05.05 வரை,
ராகு காலம்: 09.35-11.05வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 2 | | 1 | | 7 |
| | 5 | | | 4 | | | | |
| 2 | | 3 | | 9 | | | | 5 |
| | 1 | 2 | 9 | | | 5 | | |
| 8 | | | | | | | | 1 |
| | | 6 | | | 4 | 7 | 8 | |
| 7 | | | | 8 | | 4 | | 3 |
| | | | | 1 | | | 5 | |
| 1 | | 8 | | 5 | | 6 | | |

சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 5 | 2 | 6 | 4 | 8 | 9 | 1 |
| 8 | 6 | 1 | 5 | 7 | 9 | 2 | 4 | 3 |
| 9 | 2 | 4 | 1 | 3 | 8 | 7 | 5 | 6 |
| 1 | 4 | 8 | 3 | 5 | 6 | 9 | 2 | 7 |
| 3 | 9 | 2 | 4 | 8 | 7 | 1 | 6 | 5 |
| 6 | 5 | 7 | 9 | 1 | 2 | 4 | 3 | 8 |
| 2 | 7 | 3 | 8 | 9 | 5 | 6 | 1 | 4 |
| 5 | 8 | 9 | 6 | 4 | 1 | 3 | 7 | 2 |
| 4 | 1 | 6 | 7 | 2 | 3 | 5 | 8 | 9 |

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டிக் கிரியையும்



5 ஆம் வட்டாரம், நயினாதீவு.

மலர்வு
17.01.1929

உதிர்வு
04.01.2012

## திருமதி சதாசிவம் சிவகாமசுந்தரி

**என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும் அரவணைத்து**
**இனிய வாழ்வு தந்த தெய்வமே**
**மாதம் ஒன்று சென்றதம்மா**
**உங்கள் மதிமுகம் மாறவில்லை**
**எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக**
**அமைந்த உங்கள் சிரித்தமுகம்**
**காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம்**
**எம்முடன் சேர்ந்து வாழ்ந்த ஒவ்வொரு கணமும்**
**எமக்குச் சொர்க்கமாய்**
**இனிக்குதம்மா உங்களை என்றும்**
**எங்கள் இதயக் கோயிலிலிருந்து பூசிப்போம் அம்மா.**

அன்னார் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்து சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறியோருக்கும் வணக்கம் செலுத்தி மலர் வளையம் சாத்தியோருக்கும் மற்றும் உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (03.02.2012) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**– மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.**

(13918)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப் பகலிலும் ஆடுகள் திருட்டு

அச்சுவேலி, பெப்.3

கிராமப்புறங்களில் கயிற்றில் கட்டிமேயவிடப்படும் ஆடுகள் வாகனங்களில் வரும் கும்பல்களினால் திட்டமிட்டமுறையில் கடத்திச் செல்லப்படுகின்றன. பகல் வேளையிலும் இந்தத் திருட்டு நிகழ்வதால் வீடுகளுக்கு வெளியே ஆடுகளை மேயவிடுவதற்கு பொதுமக்கள் தயங்குகின்றனர்.

அச்சுவேலி இராசவீதியில் உள்ள தோப்பில் வீதியோரங்களில் காணிகள், தோட்ட நிலங்களில் மேயக்கட்டப்பட்ட 10 க்கு மேற்பட்ட ஆடுகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஆடுகள் மேய்வதற்கு இணைப்புச் செய்யப்பட்ட கயிறுகள் கூரிய ஆயுதங்களினால் வெட்டப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சிறிய ரக லொறி, ஓட்டோ ஆகியவற்றில் ஆடுகள் கடத்தப்படுவதாக கூறப்படுகின்றது.

கிராமப் புறங்களில் ஆடுகள் மற்றும் மாடுகள் கயிறுகள் கட்டி மேய விடப்படுவது இயல்பு. இதனை அவதானித்துச் செல்லும் கும்பல் நண்பகல் வேளையிலும் மாலையிலும் சிறிய ரக 'டிமோ ஃவடி' லொறிகளிலும் ஓட்டோக்களிலும் வந்து ஆடுகளை திட்டமிட்ட முறையில் கடத்திச் செல்கின்றது.

**கால்நடைகளை இடத்துக்கு இடம் எடுத்துச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறவேண்டும். ஆனால் தற்போது ஆடுகளை களவாடிச் செல்லும் கும்பல் யாருடைய கண்ணிலும் தென்படாமல் சென்று விடுகின்றது.**

ஆடுகளை மேயக்கட்டிய உரிமையாளர்கள் மாலை வேளையில் ஆடுகளை அவதானிக்கும் போது கயிறுகள் அறுக்கப்பட்டு ஆடுகள் கடத்திச் செல்லப்படுவதை கண்டு அதிர்ச்சி அடைகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள நல்லின ஆடுகள் தென்னிலங்கைக்கு சட்டபூர்வமாக நாளாந்தம் கொண்டு செல்லப்பட்டு வருவதால் ஆடுகளின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது. அத்துடன் எவ்வளவு பணத்தைக் கொடுத்தும் நல்லின ஆடுகளை கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப் படுகிறது.

சாதாரணமாக கால்நடைகளை இடத்துக்கு இடம் எடுத்துச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற வேண்டும். ஆனால் தற்போது ஆடுகளைக் களவாடிச் செல்லும் கும்பல் யாருடைய கண்ணிலும் தென்படாமல் சென்று விடுகின்றது. இது எவ்வாறு இடம்பெறுகிறது என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் இருந்து ஆடுகள் இறைச்சிக்கு வெட்டப்படுவதற்கும் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்குமே திருடப்படுவதாகக் கூறப்படுகிறது.

(ந-11)

# மின்சார சபையினர் வருவதை தெரியப்படுத்தவில்லையாம்

## அயல் வீட்டுக்காரர் மீது ஆவேசத் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப்.3

திருட்டு மின்சாரம் பெறுபவர்களைப் பிடிக்க மின்சார சபையினர் வருகின்றனர் என்ற தகவல் அறிந்திருந்தும் தெரிவிக்கவில்லை என்று குற்றம்சாட்டி அயல் வீட்டில் உள்ள தாயையும் மகளையும் அடித்துத் துன்புறுத்தியுள்ளார் ஒருவர்.

மேலும் அவர்கள் மீது கழிவுப்பொருள்களை தமது வளவினுள் வீசுகின்றனர் என்றும் பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளார். கடந்த நவம்பர் மாதத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையை அண்மித்துள்ள இரு வீடுகளிலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வீட்டுக் கழிவுப் பொருள்களை தமது வீட்டு வளவினுள் வீசுகின்றனர் என்ற குற்றச்சாட்டு உண்மையே என பொலிஸ் முறைப்பாட்டுக்காரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் தெரிவித்திருந்தார்.

திருட்டு மின்சாரம் பெறுபவர்களைப் பிடிக்க இலங்கை மின்சாரசபையினர் வருகின்றனர் என்ற தகவல் அறிந்தும் தமக்குச் சொல்லவில்லை என்ற காரணத்தினாலேயே பிரதிவாதிகளாகவுள்ள இருவரும் தாக்கப்பட்டுள்ளனர் என அவர்கள் சார்பில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த வழக்கு தொடர் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.(ந-4)

# திருட்டு மின்சாரம் பெற்ற 30 பேர் வல்வெட்டித்துறையில் வசமாக மாட்டினர்

யாழ்ப்பாணம் பெப்.3

வல் வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸாரும் கொழும்பில் இருந்து வருகைதந்த இலங்கைமின்சார சபை அதிகாரிகளும் இணைந்து நடத்திய தீவிர தேடுதல் நடவடிக்கையில் திருட்டு மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் 30பேர் மாட்டிக் கொண்டனர்

கடந்த சில நாள்களாக மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கை வல்வெட்டித்துறை பொலிகண்டி, கெருடாவில் எனப் பல பகுதிகளில் தொடர்ந்த போதே இவர்கள் வசமாக மாட்டிக்கொண்டனர். இவர்கள் நேற்று மதியம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் வல்வெட்டித்துறைப் பொலிஸாராலும் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளாலும் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் இலங்கை மின்சார சபைக்கு 6 இலட்சத்து 85 ஆயிரம் ருபாவை செலுத்துமாறு உத்தரவிட்டார் இதேவேளை ஏற்கனவே நெல்லியடிப் பகுதியில் கைது செய்யப்பட்ட பலர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படுவர் எனத் தெரியவருகின்றது.

(ந- 319)

# புதிய கற்கைநெறிகள்

யாழ்ப்பாணம், பெப்.3

இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகிய, உயர் கல்வியைத் தொடர முடியாத மாணவர்களைக் கருத்திற் கொண்டு, கணினி வன்பொருள் திருத்தல், தகவல் தொழில் நுட்பம், தையற்கலை, குழாய் பொருத் துதல், மரவேலைத் தொழில் நுட்பம், வெல்டிங், கட்டட நிர்மாணம், டீசல் வாகனம் திருத்துதல் போன்ற பயிற்சிகள் கைதடி தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

ஆர்வமுடைய மாணவர்கள் தமது சுயவிவரக் கோவையை இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந)


## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணக வாழ்வில்
07 - 06 - 1930



விண்ணக வாழ்வில்
03 - 02 - 2007

## மத்தேசு பாவிலுப்பிள்ளை

காலத்தின் பெருவிளக்காய்!
சுற்றத்தின் சுடரொளியாய்!
எம் தந்தையாய்! எம் தலைவராய்!
கடமை கடந்த கருமங்கள் செய்தீரே

கருணை நிறை நேசம்மிகு நெஞ்சத்தோனாய்
அத்தான் என்றும், அப்பு என்றும், மாமா என்றும்,
சீனியையா என்றும் அழைக்க வைத்தீரே!

பாசம்மிகு பிள்ளைகளை பல்கலைக் கூடங்கள் அனுப்பி
உயர்வடையச் செய்தீரே! நான்கு பத்து ஆண்டின் முன்னே
ஊர், மத பேதமின்றி சமூகம் உயர்ந்திட உதவிக்கரம் நீட்டி
நின்றீரே!

கோயிலெல்லாம் கும்பிட்டுவர
குலத்தோரைக் கூட்டிச் செல்வீர்
ஐயா உம் மரபுவழி உம்மைப்போல
பக்திமிக்க சான்றோர்களாய்
ஒழுகிடவே ஆண்டவரை வேண்டிநிற்பீர்
உம் ஆன்மா ஆண்டவரில் சாந்திபெற வேண்டுகின்றோம்.

42, புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.
(13802) (6,7,10)
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



திருமதி சிவசிதம்பரம்
இராசம்மா

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கை பிறப்பிடமாகவும் தபாற்கந்தோர் வீதி, கற்குளி 1ஆம் ஒழுங்கை,சாவகச்சேரியை வதிவிடமாகவும்கொண்ட திருமதி சிவசிதம்பரம்இராசம்மா 02.02.2012 வியாழக்கிழமை காலமானார்..

அன்னார் காலஞ்சென்ற சிவசிதம்பரம் அவர்களின் அன்பு மனைவியும் கனகரட்ணம், காலஞ்சென்றசெல்வராஜா மற்றும் அன்னலட்சுமி, தனபாலசிங்கம்ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2012) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் (சாவகச்சேரியில்) நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலைஅனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபாற்கந்தோர் வீதி,
கற்குளி 1ம் ஒழுங்கை, சாவகச்சேரி

தகவல்.
பிள்ளைகள்

(11582) (6-7-8)



## காலங்கள் கழிந்தாலும் நினைவுகள் அழிவதில்லை



திருமதி
உதயராணி
கோபாலகிருஷ்ணன்

பாசமலர்களின்
2ஆம் ஆண்டு
நினைவஞ்சலி

திதி : 03.02.2012



"கலாபூஷணம்"
செல்லையா
மெற்றாஸ்மயில்


ஆண்டு இரண்டு கழிந்துவிட்ட போதிலும்
ஆறவில்லை எமது மனதின் சோகங்கள்
இவ்வுலக வாழ்வில் எம்மை வழிநடத்தி
நல்வாழ்வுக்கு வழிகாட்டிய ஒளி விளக்குகளே!
நீங்கள் எம்மைப்பிரியவில்லை எம்முடன் வாழ்ந்து
வழிகாட்டுகின்றீர்கள் என்ற நம்பிக்கையுடன்
நாம் இன்னும் உயிர் வாழ்கின்றோம்.
பாசமிகு சகோதர்களின் ஆத்ம சாந்திக்கு
அனுதினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

18, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்,
தொ.இல. 222 3586
(13708) (6-745)

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## யாழ். கொடிகாமம் பதியுறை (மாக்கற் வாயில்)

# அருள்மிகு காளிகாதேவி தேவஸ்தானம்

## ஆவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

## சிறப்புமலர்

**கர வருஷம் தைமாதம் 22 ஆம் நாள் (05.02.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 7.14 மணி முதல் 8.23 மணிவரை**

கிரியாரம்பம் : 03.02.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.20 முதல்

எண்ணைக் காப்பு : 04.02.2012 சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 5 மணிவரை

மஹா கும்பாபிஷேகம்: 5.2.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 7.14 முதல் 8.23 வரை

தினமும் முற்பகல் 11 மணி முதல் மண்டலாபிஷேகம் சுவாமி உள் வீதி வருதல்

15.02.2012 புதன்கிழமை: 1008 சங்காபிஷேகம் மாலை ஊஞ்சல் சுவாமி உள், வெளி வீதி வலம் வருதல்

தினமும் நண்பகல் மகேஸ்வரபூசை இடம்பெறும்.

பிரதிஷ்ட பிரதம குரு
**சிவாகம கிரியா பானு, குருமணி**
**சிவஸ்ரீ இராம ஸ்ரீரங்கக் குருக்கள்**
கொடிகாமம்.

ஆலய தருமகர்த்தா
செ.சிவராசா (சிறி - கொடிகாமம்)
காளிகாதேவி தேவஸ்தானம்,
கொடிகாமம்

### விளம்பர அனுசரணையாளர்கள்

| | |
|---|---|
| **சிறி வெற்றிலைக்கடை** - மாக்கற் கொடிகாமம் | **வதனி நகைமாடம்** - கண்டி வீதி, கொடிகாமம் |
| **நியூ அருள் நாயகி புத்தகசாலை** -கண்டி வீதி, கொடிகாமம் | |
| **ரூபி நகைமாடம்** - கண்டி வீதி, கொடிகாமம் | **கிருஷ்ணா கூல் பார்**, பருத்தித்துறை வீதி, கொடிகாமம் |
| **திருவருள் ஹாட்வெயர்** - கண்டி வீதி, கொடிகாமம் | **சிவகஜன் பதிப்பகம்** - காளிகோயில் வீதி, கொடிகாமம் |
| **பத்மகுமார்** - காளிகோயில் வீதி, கொடிகாமம் | **துரை மோட்டோர்ஸ்** - கண்டி வீதி, கொடிகாமம் |
| **ரூபன் எலக்றிக்கல்** - கண்டி வீதி, கொடிகாமம் | **குமார் இந்திராணி வெதுப்பகம்** - கொடிகாமம் |
| **வினோ (K.V)** மண்டான் சுருட்டு - கொடிகாமம் | **உதயகுமார் களஞ்சியம்** - மாக்கற் கொடிகாமம் |
| **மணியம் களஞ்சியம்** கண்டி வீதி, கொடிகாமம் | **அருண் புடைவை மாளிகை** - கண்டி வீதி,கொடிகாமம் |
| **நியூ கண்ணன் ஸ்ரோர்ஸ்** - கண்டி வீதி, கொடிகாமம் | **மணியம் கறாச்** - கொடிகாமம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்களின் அணி வகுப்பு இடம்பெறுகிறது. (ம-313)

# சிறந்த அணித் தெரிவுக்கு மாற்றம் கொண்டுவர ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.நகரில் சிறந்த அணிகள் தெரிவு செய்யப்படவுள்ளன. இதற்கென சில மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளது.

இதற்கென யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் போட்டிகளை நடத்தவுள்ளது.

தரநிலைப்படுத்தும் முறையில் ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டியாகவும் இது அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டிகள் குறித்த நடைமுறைகள் குறித்து யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் விவரம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் இப்போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கான புள்ளிகள் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன.

அணிகள் பெறும் பெறுபேறுகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டால் சில அணிகள் நன்மையடையக் கூடிய சந்தர்ப்பம் உருவாகும். அதன் அடிப்படையில் இந்த வருடம் தொடக்கம் புதிய நடைமுறைகள் அமுலுக்குக் கொண்டு வரப்படவுள்ளன. இதன்படி பத்து ஓட்டத்துக்கு 0.1 புள்ளியும் ஒரு விக்கெட்டுக்கு 0.1 புள்ளியும் வழங்கப்படவுள்ளன.

ஐம்பது ஓவர் போட்டியில் 180 ஓட்டங்களால் அல்லது 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றால், 40 ஓவர் போட்டியில் 160 ஓட்டங்களால் அல்லது 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றால், 30 ஓவர்கள் போட்டியில் 140 ஓட்டங்கள் அல்லது 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றால் 20 ஓவர் போட்டியில் 120 ஓட்டங்கள் அல்லது 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றால் மேலதிகமாக ஒருபுள்ளி வழங்கப்படவுள்ளது.

இவ்வாறாகப் புள்ளிகள் வழங்கப்படுவதன் மூலம் இந்த நிகழ்வில் வெற்றி பெறுவதற்கு சில அணிகள் சிறப்பாகச் செயற்பட்டும் சில நேரங்களில் தோல்வியடைந்தாலும் பெறுபேறுகளுக்கு வழங்கப்படும் புள்ளிகள் மூலம் நன்மையடைவர்.

இதன்மூலம் சிறந்த அணியினரையும் வீரர்களையும் அடையாளம் காண முடியும் என்று கூறப்படுகிறது. (ம-17)

# மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி,பெப்.3

சாவகச்சேரி மகளிர் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கலந்துகொள்வார். (ச-207)

***

யாழ்ப்பாணம்,பெப்.3

வண்ணை நாவலர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ம-319)

***

யாழ்ப்பாணம்,பெப்.3

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளனும் அவரது பாரியாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன் கலந்துகொள்வார். (ம)

***

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் இ.கணேசானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அதில் முதன்மை விருந்தினராக சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசுவும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதி அதிபர் செல்வி ஹேரா ஜோன் பிள்ளையும் கலந்து கொள்வர். (ம)

***

வலி வடக்கு, பெப் 03

உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வன் மைப் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் தலைமையில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடை பெறவுள்ளது. (ம-86)

***

சித்தன்கேனி ஸ்ரீகணேசா வித்தியாலய வருடாந்தஇல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு அதிபர் செல்வி நா.ஜெயராணி தலைமையில் பாடசாலைமைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக நி.சுதானந்தசர்மாவும் சிறப்பு விருந்தினராக மருத்துவர் வி.சச்சிதானந்தராஜாவும் அவரது பாரியாரும் கலந்து கொள்வர். (ம-28)

***

காட்டுப்புலம் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு அதிபர் பா.பாலகுமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் அ.பகீரதனும், சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் அ.ஸ்ரீஸ்பரலிங்கமும் கௌரவ விருந்தினராக ஆ.கனகரத்தினமும் கலந்து கொள்வர். (ம-28)

***

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப.1.30 மணிக்கு பாடசாலை அதிபர் இ.இராஜசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசாவும், சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதனும் கலந்து கொள்வர். (ம-16)

***

வரணி, நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஆ.ஸ்ரீஸ்கந்த மூர்த்தியும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜாவும் கலந்து கொள்வர். (ம)

# மரண அறிவித்தல்

## திருமதி மார்க்கண்டு செல்லம்மா

பலாலி மத்தி, பரியாரியார் வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது காலையடி தெற்கு, பண்டத்தரிப்பை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மார்க்கண்டு செல்லம்மா 01.02.2012 புதன்கிழமை தனது 100 ஆவது வயதில் கால மானார்.



அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், சின்னத்துரை மற்றும் ஐயாத்துரை, அற்புதம், தம்பித்துரை, சிவபாதசுந்தரம் (நோர்வே), தெய்வானைப்பிள்ளை, குலசிங்கம், பூமணி, கண்மணி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான பிறைசூடி, சரஸ்வதி, ரத்தினம், இராசரத்தினம் மற்றும் இராசமணி, புனிதவதி, சறோஜினிதேவி, மல்லிகாதேவி, கந்தையா, தவராசா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.02.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பில்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காலையடி தெற்கு,
பண்டத்தரிப்பு.

(13728)(2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர்
முத்தையா சிவசுந்தரலிங்கம் அவர்களின்
பாசமிகு தந்தை
**கந்தன் முத்தையா** அவர்கள்
(31.01.2012) அன்று காலமானதையிட்டு
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

கமநலசேவைகள் நிலையம்
உரும்பிராய்

(13727) (6-7-8)

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
ஊழியர்கள், குழுத்தலைவர்,
விவசாய சம்மேளனங்கள்.

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
Care
முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு

எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.
வவுனியாவில் 12,13ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு - 021 - 4923416
V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2705715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 2220288.

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல்
சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே
Care
DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic

தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புழுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு
இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது
எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது
வவுனியா 12,13ஆகிய திகதிகளில் முன் பதிவுகளுக்கு 021 - 4923416
V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 2220288.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்றோர்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வண்மைப் போட்டியை முன்னிட்டு கல்லூரி மாணவர்களிடையே மரதன் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகள் 17 வயதுக்குட்பட்டோர், 21 வயதுக்குட்பட்டோர், என இரு பிரிவுகளாக இடம் பெற்றபோது 130 மாணவர்கள் பங்குபற்றினர்.

இதில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**21 வயதுக்குட்பட்டோர்**
முதலாம் இடம் ஜெ.சுரேஸ், 2ஆம் இடம் செ.மயூரன், 3ஆம் இடம் தி.கஜரூபன்.

**17 வயதுக்குட்பட்டோர்**
முதலாம் இடம் ம.தனுசன், 2ஆம் இடம் கோ.கிரிசாந், 3ஆம் இடம் த.தனுசன். (ம)

***

மதியாமடு விவேகானந்த வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்டப்போட்டியின் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தினை ச.செளந்தராஜ், 2ஆம் இடத்தை மு.விதுஷன், 3ஆம் இடத்தை தி.திலக்ஷன் ஆகியோரும் பெற்றுள்ளனர்.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை போ.இராசேந்தினி, 2ஆம் இடத்தை ரா.நிஷாந்தினி, 3ஆம் இடத்தை ஆ.தனுசியா ஆகியோரும் பெற்றனர். (ம-435)



அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தி னராக கலந்துகொண்ட யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.குணநாதன் மாணவரொருவருக்குவெற்றிக்கேடயம் வழங்குகிறார். (ம-38)

## அரையிறுதி ஆட்டங்கள்

வலி வடக்கு, பெப்.3

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் 17, 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் வலிகாமம் வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நட ராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

17 வயதுப்பிரிவு- புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

19 வயதுப் பிரிவு- மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. (ம-86)

## சதுரங்கப் போட்டி இன்று

யாழ்ப்பாணம்,பெப்.3

இலங்கை சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்படும் 6,8,10,12,14,16 அணி வயதுப் பிரிவு ஆண்,பெண்இருபாலருக்குமான வட மாகாண இளையோர் சதுரங்கப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை 2.30 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக இதுவரையில் விண்ணப்பிக்காத போட்டியாளர்கள் இன்று 12.30 மணியிலிருந்து 2 மணிவரை போட்டி நடைபெறும் மண்டபத்தில் விண்ணப்பங்களைக் கையளித்து, போட்டியில் பங்கேற்க முடியும் என்று ஏற்பாட்டாளர்கள்அறிவித்துள்ளனர். (ம-17)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்.மத்திய கல்லூரி 2002, 2003 ஆம் ஆண்டுகளில் கூடைப் பந்தாட்ட அணியில் அங்கம் வகித்த மாணவர்களின் அனுசரணையுடன் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் க.இராசதுரை ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான இந்தக் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இடம் பெறவுள்ளது.அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள இந்தச் சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங் களை போட்டி ஏற்பாட்டுக் குழுத் தலைவர் ரமண [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## உதைபந்தாட்டச் சுற்றில் ஞாயிறு மோதும் அணிகள்

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்.உதைபந்தாட்ட லீக், அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே அமரர் டாக்டர் ஜே. பி.சி. பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

டாக்டர் ஜே. பி.சி. பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்து.

இதில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் மாலை 4.15 மணிக்கு வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. (ம -17)

## விக்ரம்- ராஜன்- கங்கு ஞாபகார்த்தக் கிரிக்கெட்


யாழ்ப்பாணம், பெப்.3

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சன சமூக நிலையமும் இணைந்து நடத்தும் 'விக்ரம்- ராஜன்- கங்கு' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு;

காலை 8.30 மணி - யாழ். *ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் அரியாலை விளையாட்டுக் கழகம்.

பிற்பகல் ஒரு மணி - *யாழ்.கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக்கழ கம் எதிர் யாழ். பல்கலைக்கழக அணி. (ம - 17)

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் செல்லையா

(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்)

சண்டிலிப்பாய், தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்லையா நேற்று (02.02.2012) வியாழக்கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான வைத்திலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளியாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், தெய்வநாயகி, செல்வபூரணம், அற்புதவேல்நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வறஞ்சினி, செல்வலிங்கம் (கனடா), ஞானறஞ்சி (நோர்வே), சாந்தி (நோர்வே), மனோறஞ்சி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன், சுகந்தி (கனடா), மூர்த்தி (நோர்வே), பிரபாகரன் (நோர்வே), யசோதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஜெயகௌரி, ஜெனார்த்தன், ஜெயந்தன், தனுஷன், சந்தியா, துவாரகா, குமரன், சந்தோஷ், சந்தியா, திவ்யா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொ. மகேந்திரன்
பாதிரி கோயிலடி, சண்டிலிப்பாய்

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(13732) (45-6-7)

## கண்ணீரில் கரைந்த பாசத்தீபம்.... 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### கந்தையா நாகராசா

தோற்றம் 18.07.1937
மறைவு 01.02.2009

சொல்லாமல் கொள்ளாமல் வந்த யமன்
செல்லுருவில் வந்து உங்களைக் கவர்ந்தான் அப்பா
உங்கள் நினைவலைகள் என்றுமே எங்களை விட்டு நீங்கா
அன்று நடந்தது இன்று போல் இருக்கிறதப்பா
ஆண்டுகள் மூன்றுதான் சென்றாலும் அருகில் இருக்கிறீர்கள் அப்பா
உங்களை அன்றி எங்களை அரவணைத்து
ஆறுதல் கூற யாரப்பா எங்களுக்கு
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நாமம்
என்றுமே நிலைத்திருக்கும் அப்பா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

4 ஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் இரத்தினசிங்கம்



பருத்தித்துறை, மாதனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இரத்தினசிங்கம் (31.01.2012) செவ்வாய்க்கிழமை தமது இல்லத்தில் சிவபதமெய் தினார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.02.2012) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஈமச்சடங்குகள் நிறைவேற்றப்பட்டு கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

யாலப்பை வீதி,
மாதனை, பருத்தித்துறை.

(13905) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும் கையுடன்....



''புத்தபெருமானே! எப்பிடியாவது எங்களை ஒரு 'மட்சில' யாவது வெல்லப் பண்ணு!''
**ஆஸிக்கு கிளம்ப முன்னர் பிரார்த்தனையில் இலங்கை வீரர்கள்.**

இலங்கை கிரிக்கெட் சபையில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக எதிர்வரும் ஆஸ்திரேலிய முக்கோண தொடரின்போதும் இலங்கை வீரர்கள் கொடுப்பனவுகள் எதுவும் இன்றி விளையாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்தகாலங்களில்இலங்கை வீரர்கள் பங்குபற்றிய தொடர்களுக்கான கொடுப்பனவு சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்க சம்மேளனத்தின் தலையீட்டினாலேயே வழங்கப்பட்டதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த தொடர் மற்றும் அதற்கு தேவையான ஏனைய செலவுகளுக்கு கிரிக்கெட் நிர்வாக சபை 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகக் கிண்ண தொடர் உள்ளிட்ட, இலங்கை - இங்கிலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் சுற்றுலா என்பவற்றிற்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாக சபை 2.3 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியுள்ளதாக ஆஸ்திரேலிய ஊடகம் தெரிவித்துள்ளது. (ந-5)

# விடுதலைப் பறவை




ஆட்டநிர்ணய சூதாட்ட குற்றச்சாட்டில் தண்டனை விதிக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர் மொஹமட் ஆமீர் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஆமீர் மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவித்த நிலையில் 'போட்லாண்ட்' சிறைச்சாலையில் இருந்து விடுதலையாகியுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிராக நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆட்டநிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டதாக மொஹமட் ஆமீர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மொஹமட் ஆமீர் மற்றும் சக வீரர்களான சல்மான் பட், மொஹமட் ஆசிப் ஆகியோருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்த மூன்று வீரர்களுக்கும் ஐந்தாண்டுகள் போட்டியில் விளையாட தடைவிதிக்கப்பட்டது.

லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற குறித்த டெஸ்ட் தொடரில் ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்ட 19 வயதான ஆமீருக்கு மேலும் பல போட்டிகளில் விளையாட இரண்டாவது சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று பல கிரிக்கெட் வர்ணணையாளர்கள் ஆரூடம் கூறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# வேலிக்கு ஓணான் சாட்சி. டோனிக்கு...?




வெளிநாட்டு மைதானங்களில் தொடர் தோல்விகளை இந்திய அணி சந்தித்து வருவதால் அணித்தலைவர் பதவியில் இருந்து டோனி நீக்கப்படலாம் என்று தகவல் வெளியானது. இந்த நிலையில் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்று டோனி அதிரடியாக அறிவித்தார்.

இதுகுறித்து முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் கூறுகையில், டோனி சிறந்த அணித்தலைவர். அவர் தனது பணியை திறம்பட செய்து வருகிறார். இப்போதைக்கு அவரை நீக்க வேண்டிய அவசியம் இல்லை. 2013 ஆம் ஆண்டு வரை அவரை அணித்தலைவர் பதவியில் தொடரச் செய்ய வேண்டும்.

3 வகையான போட்டிக்கும் வெவ்வேறு அணித்தலைவரை நியமித்தால் தேவையில்லாத குழப்பம் தான் ஏற்படும். ஒரே வீரர்களை கொண்டு ஆடும் போது யார் கட்டளையை கேட்டு நடப்பது என்ற பிரிவினை வந்துவிடும் என்றார். (ந-5)

# கூட்டணிக்கு ஆபத்து




இலங்கை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த நட்சத்திர வீரர்களான மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்ககார ஆகியோர் இணைந்து நடத்துகின்ற 'நண்டு அமைச்சுக்கு' ஜனாதிபதி செயலகத்தில் இருந்து பேராபத்து வந்து உள்ளது.

இந்த 'நண்டு அமைச்சு' கொழும்பு கோட்டையில் பழைய டச் வைத்தியசாலையில் அமையப் பெற்று உள்ளது. இரவு 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை இயங்குகின்றது. உண்மையில் இது ஒரு உணவகம்.

அமைச்சு என்கின்ற பெயரை இலங்கையில் அரச அமைச்சுக்களோ, கிறிஸ்தவ அமைப்புக்களோ அன்றி வேறு ஸ்தாபனங்களோ பயன்படுத்துவதற்கு சட்டத்தில் இடம் கிடையாது என்று அறிவித்து உள்ளார் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க. அத்துடன் சங்கா-மஹேல கூட்டாக நடத்தி வரும் உணவகத்தின் மீது உடன் நடவடிக்கை எடுக்குமாறும் மேல்மாகாண சபைக்கு லலித் வீரதுங்க அறிவுறுத்தல் வழங்கி உள்ளார். (ந-5)

# கடுப்பேத்திறாங்களே...!




# சூடுகண்ட பின்னரே சுரணை வருகிறது

இந்திய அணியின் இளம் வீரர்களுக்கு, வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக பயிற்சியளிக்க, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.,) முடிவு செய்துள்ளது.

இந்திய அணி அண்மையில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் நடந்த டெஸ்ட் தொடரில், மோசமான தோல்வியை சந்தித்தது. அணியின் துடுப்பாட்ட வீரர்கள் வேகம் மற்றும் 'சுவிங்' பந்துகளை சந்திக்க தடுமாறினர். இதையடுத்து, தொடர் தோல்வி குறித்து, தர்மசாலாவில் உள்ள அக்கடமியில், இளம் வீரர்களுக்கு பயிற்சியளிக்க முடிவு செய்துள்ளனர்.

தர்மசாலாவில் உள்ள ஆடுகளம், வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானது. பந்து நன்றாக 'சுவிங்' ஆகும். இதில் பயிற்சி பெறும் பட்சத்தில், இந்த வகை பந்துகளை எப்படி கையாள்வது என்று கற்றுத் தேறலாம். தவிர, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளுக்கு செல்லும் முன்னர், இங்கு பயிற்சி செய்வர் என்று தெரிகிறது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ., இணைச் செயலர் அனுராக் தாக்கூர் கூறுகையில், தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு செல்லும் முன்னர், இதுபோன்ற ஆடுகளங்களில் பயிற்சி செய்ய வேண்டும் என்று ஏற்கனவே சிலர் தெரிவித்து இருந்தனர். எதிர்வரும் ஏப்ரலில் ஆஸ்திரேலியாவில் நடக்கவுள்ள நான்கு நாடுகள் பங்கேற்கும், 19 வயதுக்குட்பட்ட அணியினருக்கான தொடருக்கு தயாராகும் விதத்தில், சில ஏற்பாடுகளை செய்துள்ளோம், என்றார். (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றி தற்போது காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் சிவபாதம் சுமந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

**சங்கரப்பிள்ளை சிவபாதம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

பிரதேச செயலாளரும்
சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.

# மரண அறிவித்தல்

## செல்வி ஆறுமுகம் புவனேஸ்வரி

(ஓய்வுபெற்ற ஆசிரியை, நு/ பதன்சைட் த.ம.வி)



அத்தாயைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் புவனேஸ்வரி நேற்று (02.02.2012) வியாழக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளைதம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத் தங்கம் மற்றும் சடாணணமூர்த்தி, விசா லாட்சி, காலஞ் சென்ற மகேஸ்வரி மற்றும் ஞான வடிவேல், பாலசரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் காலஞ் சென்ற சுப்பிரமணியம், இலட்சுமிப்பிள்ளை, தர்மலிங்கம் ஆகி யோரின் மைத்துனியும் பத்மாவதி, கணேஸராஜா, லோகநாதன், கமலவதனா, ரவீந்திரன், சிறீதரன் ஆகியோரின் சித்தியும் காலஞ்சென்ற வரதன் மற்றும் தவம், சிவம், நந்தன், ரமேஸ், புஸ்பலதா ஆகியோரின் மாமி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம் பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஆ. ஞானவடிவேல் (சகோதரன்)
கமலவதனா (பாப்பா)

பிலாவட்டம்,
அத்தாய்.


பிறீமா நம்ப 01 கோழிக் குஞ்சு

பிறீமா முட்டைக் குஞ்சு (வெள்ளை, சிவப்பு) இறைச்சிக் கோழிக் குஞ்சு.
ஒரு குஞ்சு 100/=
ஓடர்களை முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும்.
தொடர்புகொள்ள வேண்டிய
தொலைபேசி-0779337287/ 0774164734

NIPPON®
24 வகையான மீழ் மின்னேற்றக்கூடிய அதி சிறந்த டோஜ் லைட்
DUTY FREE PRICES
எதிர்வரும் பண்டிகைக்கு பரிசாக வழங்கலாம்






உங்களுக்கு விருப்பமான பெயர்களை பதிவுசெய்யலாம்
- ABS திரவியம்
- ஒரு கி.மீ. தூரவீச்சுக் கொண்டது
- 6V, 6.5Ah, 6V, 4.5 Ah அதி சிறந்த பற்றரி
- வேறான சாஜர்

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்

LANKA NIPPON
இல. 18, கெய்சர் வீதி, கொழும்பு-11. தொ.பே. 2437735, 5230875
இல. 10, டிரிவோனி மிலேஸ் (மில்க்பார் பின்புறம்)
பம்பலப்பிட்டிய சந்தி, கொழும்பு-4. தொ.பே. 5236878

"NIPPON" The Guaranteed Product



வட இலங்கை சுதேச மருத்துவசபை அவரச கலந்துரையாடல்

சகல சித்த, ஆயுள்வேத வைத்தியர்கள் அனைவரும் (BSMS, BAMS, DAMS DAM, பட்டதாரிகள், பரம்பரை வைத்தியர்கள்-RIMP) தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

இடம்:- வட இலங்கை சுதேச மருத்துவ சபை மண்டபம், 188B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:- நாளை (04.02.2012 - சனிக்கிழமை) நேரம்:- பி.பகல் 02.00

ஸ்ரீவிக்னேஸ்வரா — தலைவர் - வ.இ.சு.ம.ச
Dr.ஜெ. ஜெயலன் — செயலாளர் - வ.இ.சு.ம.ச.

குறிப்பு:- தற்போது சுதேச மருத்துவர்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் தீர்க்கும் முகமாக இதில் சில முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.



தபால் மூலம்

ஆறுமாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Dec 2011 To May 2012

22 வருட அனுபவம்

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | சிவில் எஞ்சினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & marketing Management | விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி |
| Dip. in Health & Hospital Management | சுகாதார மற்றும் வைத்தியசாலை மு.டி |
| Dip. in Nurseing Administration | தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | கல்வி முகாமத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

★கல்முனை ★மட்டக்களப்பு ★திருகோணமலை ★புத்தளம் ★வவுனியா ★மன்னார் ★யாழ்ப்பாணம் ★கண்டி ★கொழும்பு ★ஹட்டன் ★அனுராதபுரம் ★நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கை நெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile:- 0777140844, 0718034848

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR. A.HASSEN
(B.Sc, Psychology, M.S.c Psychology)


ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPER MARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
web:-www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org.
Tel:- 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி:- 10.02.2012


# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் - மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற Electrical Forman யாழ். மாநகர சபை)



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மயில்வாகனம் நேற்று முன்தினம் புதன்கிழமை (01.02.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னத்தங்கம் தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்தம்பி - தில்லைநாயகம் தம்பதியரின் மருமகனும் ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் திருக்குமரன் (IT Consultant. U.K), கலைச்செல்வி (ஆசிரியை- ஜேர்மனி), இந்துமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் தவபாலனின் (ஜேர்மனி) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (05.02.2012) மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்

# மரண அறிவித்தல்

## திருமதி குஞ்சுப்பிள்ளை சின்னத்தம்பி



புத்தூர் வடக்கு, புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குஞ்சுப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று (02.02.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் (கோபால் ஸ்டோர்ஸ், புத்தூர்) மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வராசா (மாயவன் ரான்ஸ்போட்), மனோகரராசா (கோபால் ரான்ஸ்போட்), மற்றும் தயாநிதி, சிவயோகநாதன் (ஜேர்மனி ), இராஜகோபால் (கனடா), வைகுந்தநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும், சரோஜினிதேவி, சியாமளா, பத்மநாதன் (உப அதிபர், யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), மங்களேஸ் வரி (ஜேர்மனி), பிரபாகினி (கனடா), மனோரஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு மாமியும், ரஜீவ்குமார், தர்சனா, கஜன்நாத், நாவண்ணன், கஜீவ் ராஜ், ஜர்சன், வினோஜன், கிரிசாந், ஹம்ஸா, பதூலா, அனுஜன், வனுஜன், ஷாருகா, விதூசிகன், கலாகரன், சுவர்ணா, எழில், பிரசன்னா, சோபிகா, கிஷோக், ஆகியோரின் பேர்த்தியும், நதுஷனனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2012) வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று , பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சியை கவிழ்க்க பெரும் சதி

1

கூறியவை வருமாறு:-

சர்வதேசத்துடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. எதிர்க்கட்சி சகோதரர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அரசுடன் அதாவது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனேயே கிராமமக்கள் இருக்கின்றனர். தீவிரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்த நாட்டைப் பாதுகாக்கும் வகையில் அனைவரும் செயற்படவேண்டும். சர்வதேசத்தால் வீதி அமைத்துக் கொடுக்கமுடியுமா? வேலையில்லாப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? பல்கலைக்கழகங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? பட்டதாரிகளின் பிரச்சினையைத் தீர்க்கமுடியுமா? இலங்கையர்களாகிய எம்மாலேயே இது முடியும் - என்றார் அவர். (த-சி)

## காணி, பொலிஸ் உள்ளடக்கி தென்கிழக்கு மாகாண சபை

1

ணைத்து தென்கிழக்கு மாகாணசபையை உருவாக்குவது என்ற நிபந்தனை அடிப்படையிலேயே அரசுக்கு ஆதரவு வழங்கப் படும்-என்றார்

இந்த மாகாணசபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். இந்தவிவகாரம் தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரைவில் அரசுடன் பேச்சு நடத்தப் போகிறது. தென்கிழக்கு மாகாணசபை அமைக்கப்படுவது அங்குள்ள மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் என்று நம்புவதாகவும் ஹசன் அலி மேலும் தெரிவித்தார். (த)

## எந்த முகத்துடன் அரசு ஜெனிவா செல்கிறது?

1

றத்தில் சமர்ப்பிக்கவேண்டும். அரசு தமக்குள்ளே மந்திரா லோசனை செய்து தன்னிச்சையாக முடிவெடுக்கின்றது.

இந்த அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் கலந்து ரையாடப்பட்ட பின்னரே ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படவேண்டும். எம்மோடு கலந்துரை யாடலில் ஈடுபடுவதை அரசு தவிர்க்கின்றது என்றால் சர்வதேசத்திடம் எவ்வாறு இதனைச் சமர்ப்பிக்கப்போகிறது?

2004ஆம் ஆண்டு 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவோம் என்ற பிரேரணையை எமது கட்சி முன்வைத்தது. அதனை இப்போது நடைமுறையிலுள்ள அரசு அன்று எதிர்த்தது. ஆனால், அவ்வேளை சர்வதேசமே இப்பிரேரணை தொடர்பில் எமக்கு ஆதரவாக இருந்தது. புலிகளுக்கே வலை விரிக்கப்பட்டது. இன்றோ இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் அரசு வலையில் விழுந்து சிக்கித் தவிக்கிறது. இது சர்வதேசம் விரித்த வலை அல்ல. அரசு சர்வதேசத்தை சமாளிக்கும் கைங்கரியத்தால் தமக்குத்தாமே விரித்துக் கொண்ட வலை.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையானது 90 சதவீதம் தருஸ்மன் அறிக்கையின் சிபாரிசுகளையே கொண்டுள்ளது. இப்போது நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையையும் ஜெனிவா தொடரில் சமர்ப்பிக்க மாட்டோம் எனக் கூறுகின்றது.

அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மக்கள் வழங்கவில்லை. தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசு இந்தப் பெரும்பான்மையை சுவீகரித்துக்கொண்டது. இந் நிலையில் 13ஆவது அரசமைப்புச் சீர்திருத்தம், 13 பிளஸ், 13 மைனஸ் மற்றும் இவை அனைத்தையும் நிராகரிக்கவும் முடியும்; நடைமுறைப்படுத்தவும் முடியும்.

இப்படியான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ள போதிலும், தீர்வு விடயத்தில் எம்மையும் பங்குகொள்ள அழைக்கின்றது. அரசுக்கு நாம் ஒரு போதும் ஆதரவளிக்க மாட்டோம். நாட்டு மக்களின் நலன் கருதி மட்டுமே தீர்வு விடயத்தில் பங்களிப்புச் செய்வோம் - என்றார்.

**New Era Academy** வழங்கும் சிறுவர்களுக்கான ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி

இடம்: **Spectra Skills,** 19,Stanley Road( Peoples' Bank 2an floor ) Jaffna. Tel: 0212221422 / 1423

ஆரம்பம்: சனிக்கிழமை (04/02/2012) 9amTraining:- Saturdays & Sundays

பயிற்சி வழங்குபவர்**Nilrukshi FoenanderLVCM/ FVCM/ALCM/TEYL/TEIL/DIP.TEFSL/TESL/ ATEFSL/ATESL/LTEFSL/LTESL**

NEW ERA ACADEMY

spectra skills

### தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)

### கூறுவிலை கோரல்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் (வரணி வடிசாலையினால்) உற்பத்தி செய்யப்படும் மதுசாரத்தைச் சேமித்து வைப்பதற்காக 5000 (ஐயாயிரம்) லீற்றர் கொள்ளளவுடைய இரு (02) வெள்ளிரும்பு கொள்கலன்களைக் கொள்வனவு செய்யவுள்ளோம்.

இதனை வடிவமைப்பு செய்பவர்களிடமிருந்து கூறுவிலைகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளோம். கூறுவிலைகளை அனுப்ப வேண்டிய முகவரி "தலைவர், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி வரணி" என்ற முகவரிக்கு 15.02.2012 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலதிக தகவல்களுக்கு 021 321 1653 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

(98771) **தலைவர்.**

## அவசரமாக வருகிறார் ரொபேர்ட் ஓ பிளேக்

1

பயணத்தின் பின்னணி குறித்து உடனடியாக விவரம் வெளிவரவில்லை. எனினும் கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட பல முக்கிய தரப்புகளுடன் பேச்சு நடத்த உள்ள பிளேக், ஆளுங் கட்சியின் உயர்மட்டத் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

பிளேக் இலங்கைக்கு வருகையில்:-

தனிப்பட்ட பயணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் செல்லவுள்ளார். இதனால் கொழும்பில் இரண்டு நாள்கள் மட்டுமே தங்கியிருக்கும் பிளேக்கிற்கும், ஜனாதிபதி மஹிந்தவிற்குமிடையில் நேரடிப் பேச்சுகள் நடைபெறுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவென உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அரசு - கூட்டமைப்பு பேச்சு, ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கையின் பங்கு உட்பட்ட பல விடயங்கள் குறித்து பிளேக் கொழும்பில் பேச்சு நடத்துவாரென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (உ-சி)

## புதுமாத்தளனில் எவரும் மீளக் குடியமர முடியாது

1

கள் நாட்டின் பாதுகாப்புக்காகவே அமைக்கப்படுகின்றனவே தவிர வேறு எந்த நோக்கத் துடனும் அல்ல. இந்த முகாம்களை அமைப்பதற்காக பொது மக்களின் காணிகளை அரசினால் சுவீகரிக்க முடியும். இதற்கு சட்டத்தில் இடமுண்டு. இந்தச் சட்டம் புதிதாக உருவாக்கப்பட்டதல்ல. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது. குறித்த காணிகளை அரசு சுவீகரித்த பின்னர் அது பற்றி வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். ஆனால் இதுவரை எந்தப் பிரதேசங்களில் நிரந்தப் படைமுகாம்களை அமைப்பது என்று தீர்மானிக்கப்படவில்லை.

அதேவேளை, புதுமாத்தளனில் நிரந்தரப் படைத்தளம் அமைக்கப்படும். அங்கு பொதுமக்கள் மீள்குடியேற அனுமதிக்கப் படமாட்டார்கள். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது இந்தப் பிரதேசத்தை அவர்கள் சுவீகரித்திருந்தார்கள். அப்போது அவர்கள் பொதுமக்களுக்கு வேறு இடங்களை வழங்கவில்லை. ஆனால் அரசு அவர்களுக்கு மாற்று இடங்களில் குடியேற வசதிகளை செய்து கொடுக்கும்.

படைமுகாம் அமைக்கும் தீர்மானத்தை அரசினால் மாற்றவோ படைமுகாமின் பரப்பைக் குறைக்கவோ முடியும்.

இதற்காக சுவீகரிக்கப்படும் காணிகளின் உரிமையாளர்களை வேறு இடங்களில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவர்களுக்கு சுமார் 40 பேர்ச் காணி வழங்கப்படும். 20 பேர்ச் நிலத்தில் வீடு கட்டவும், ஏனைய 20 பேர்ச்சில் விவசாயம் மேற்கொள்ளவும் முடியும். இதற்கு மேலதிகமாக அந்த மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கும், சுயதொழில் வாய்ப்புக்கும் அரசு உதவும். என்று தெரிவித்தார். (த)

### போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

வடக்கு மாகாணப் பரீட்சைகள்
ஏனைய அரச பரீட்சைகள்
பொது அறிவு, பொது உளச்சார்பு, மொழித்திறன்
ஆரம்பம்:- (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 1.30 மணிக்கு தொடர்பு:- 0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேமன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், 8 மாதம் பூர்த்தியான டாசோன் பெண் நாயும், 6 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூத்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும் 10 மாதம் பூர்த்தியான ரொட்விலர் ஆண் நாயும் நல்ல இன பசுக்கன்றும் (ஒரு வருடம்), வான்கோழி, மணித் தாரா என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: வி.மயூரன், இல.209, பலாலி றோட், கோண்டாவில் (ராஜா பிளாசா முன்பாக)

### தவறிவிட்டது

55/1, கந்தசாமி கோயில் வீதி திருகோணமலை மரியாம்பிள்ளை மரியசெல்வம் 751181620V என்பவருடைய தேசிய அடையாள அட்டை யாழ் நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். தொடர்பு: 0776160388 No.281, Hospital Road, Jaffna.

## சென்னையில் பற்றி எரிந்தது இலங்கைத் தேசியக் கொடி

1

தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பியவாறு நந்தம்பாக்கம் வணிக நிலையத்தை நோக்கிச் சென்றனர். அரங்கினுள் நுழைந்த சிலர் அங்கு ஏற்றப்பட்டிருந்த இலங்கைக் கொடியை இறக்கி அதனை தீயிட்டுக் கொளுத்தினர்.இதையடுத்துப் பொலிஸார் அனைவரையும் தடுத்து நிறுத்திக் கைது செய்து திருமண மண்டபம் ஒன்றில் அடைத்தனர்.

## அமெ.பாதுகாப்பு குழு கொழும்பில்

1

னரை அனுப்புவதற்கு தயாராக இருப்பதாகவும் அதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறும் இலங்கை இராணுவத் தளபதி கோரியுள்ளார். குறுகியகால இடைவெளிக்குள் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பெண் படையினரை உள்ளடக்கிய 3 பற்றாலியன் படையினரை அனுப்பத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

இந்தக் குழுவினர் நேற்று முன் தினம் குகுலேகங்கவில் அமைக்கப்பட்டுள்ள ஐ.நா அமைதிகாப்புப் படையில் பணியாற்றச் செல்லும் படையினருக்கான பயிற்சி முகாமுக்கும் சென்றிருந்தனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை இராணுவம் அதிகளவு துருப்புகளை ஐ.நா அமைதிப்படைக்கு அனுப்பும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும், இதுவரை அதற்கு ஐ.நாவிடம் இருந்து அனுமதி கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா விரைந்தார் சொல்ஹெய்ம்

1

பணியாற்றியவருமான எரிக் சொல் ஹெய்ம் புதுடில்லி சென்றுள்ளார்.

அவர் இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பு அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடத்தி வரு வதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேவேளை அமெரிக்கா தரப்பில் சில உயர்மட்டப் பிரதிநிதிகள் புதுடில்லி செல்லும் வாய்ப் புகள் இருப்பதாகவும் தெரிகிறது.

இந்தநிலையில் இலங்கையும் இந்தியாவின் ஆதரவைத் தக்க வைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது.

ஏற்கனவே கடந்த மாதம் 24ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குறுகிய பயணம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்று திரும்பியிருந்தார். அடுத்து அவர் ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத்திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளபோதும், அவர் மீண்டும் புதுடில்லிக்குச் சென்று பேச்சுக்களை நடத்தும் வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது.

அதேவேளை தற்போது இந்திய-இலங்கைப் பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்றுள்ள பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இந்திய அதிகாரிகள் பலருடனும் ஜெனிவாத் தீர்மானம் குறித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.ஜெனிவா கூட்டத்தொடரில் மேற்குலகின் சார்பில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு இந்தியாவின் ஆதரவு கிடைக்குமானால் அது இலங்கைக்குப் பெரும் பின்னடைவாக அமையும் என்று கருதப்படுகிறது. (த)

### கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி முகாமையாளராகக் கடமை புரிந்து இறைபதமடைந்த

**நடராசா காசிவேந்தனின்**

மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்ளத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலர்
சமுர்த்தி முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

*பிரதேச செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

### உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய

**உயர்திரு**
**சிதம்பரம் கந்தசாமி**

அவர்கள் தன் உன்னத சேவையினாலும் பணிச்சிறப்பினாலும் இறை ஆசியுடன் பதவி உயர்வு பெற்று வலிகாம வலய கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமை ஏற்றுக்கொண்டதையிட்டு அவரை மன மகிழ்ந்து வாழ்த்துவதுடன் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று நலமாக வாழ இறை அருள் வேண்டி நிற்கின்றோம்.

மேலும் தற்போது சண்டிலிப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று கடமை ஏற்றுள்ள

**திரு ச. சிவானந்தராஜா**

அவர்களை அன்புடன் வரவேற்பதோடு, அவர் பணி சிறக்கவும் பல உயர்வுகள் பெறவும் இறையாசி வேண்டுகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ ஆனைக்கோட்டை R.C.T.M.S.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் 6 பேரின் உயிருக்கு 6 மில்லியன் அமெரிக்க டொலர்

## சோமாலியக் கடற் கொள்ளையர் கோருகின்றனர்

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் காணாமற் போன 6 இலங்கை மீனவர்கள் சோமாலிய கடற்கொள்ளையர்கள் வசம் இருக்கின்றனர் என்று இந்த மீனவர்களை விடுதலை செய்ய கடற்கொள்ளையர்கள் 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை கப்பமாகக் கோருகின்றனர் என்று மீனவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் தனது சகோதரருடன் சேர்த்து 6 மீனவர்கள் நீர்கொழும்புக் கடலில் மீன்பிடிக்கச் சென்று ஒரு சில நாள்களின் பின் அவர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாக நிரோசன் அந்தோனி என்பவர் தெரிவித்துள்ளார்.

தனது சகோதரனான சாந்த செபஸ்டியன் உள்ளிட்ட 6 மீனவர்களை விடுவிக்க சோமாலிய கடற்கொள்ளையர்கள் கப்பம் கோருவதாகவும் இன்றைய தினத்துக்கு முன்னர் வழங்காவிட்டால் அவர்களை கொலை செய்வதாக அச்சுறுத் துவதாகவும் நிரோசன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தொலைபேசியில் அவர்கள் உரையாடும்போது துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும் கேட்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடிப்படை வசதிகளற்ற தாம் என்ன செய்வதென்பதை அறியாது இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவர்கள் கடத்தப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ள மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, மீனவர்களைக் காப்பாற்ற சோமா லிய அரசு உதவ முடியாது என்று தெரிவித்து விட்டதாகக் குறிப்பிட்டார்.

(வ)

# கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும்,அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இன்று நடைபெறவிருந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத் தால் எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 9.30மணிக்கு நடைபெறும் என்று யாழ். பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(வ)

யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
100% Mobile Phone
(With Practical Electronic)
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - வரும் ஞாயிறு காலை 11 மணி
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

A/L 2014 கலை வர்த்தகம்
தமிழ்: சிவா, குகன்
இ.நா: ஜெயக்குமார்
அளவை: துரை
அரசி: செந்தூரன்
புவியி: கரன்
வரலா: தாஸ்
கிறிஸ்: மல்லிகா
ம.பொ: மஜீபன்
விவசா: விஷ்னு
நாட.அ: சுகந்தன்
இ.கணி: கண்ணன்
Acc: தவா
Eco: சண்
B.st: பிரதீபன்
A/L 2012, 2013, Paper Class Day Class
புதிய அனுமதிகள்
யூனிவேர்சல் கந்தர்மடம்

ACADEMY OF LOGIC
பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி
A/L ஆரம்பம்
ஆங்கில இலக்கியம்
சனி, ஞாயிறு 4-5pm
ஆங்கிலம்
சனி, ஞாயிறு 5-6pm
K.JEYAKUMAR
B.A(Eng)PGDE(TESL.COL)

Special English Course
விசேட ஆங்கில வகுப்புக்கள்
ஆங்கிலம் சரளமாக பேச எழுத வாசிக்க ஏற்றவாறு ஆரம்பத்தில் இருந்து அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும். வகுப்புக்கள் திங்கள், செவ்வாய் புதன், வியாழன் ஆகிய நான்கு நாட்களிலும் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும். ஆசிரியர் செல்வி வல்லிபுரம் - தியாகேஸ்வரி
ஆரம்பம்:- 06/02/2012 திங்கள் 9AM
காலம்:- 03 மாதம்
பல்கலைக்கழகம் செல்ல உள்ள, பாடசாலை செல்லாத மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரும்
பயில அரிய வாய்ப்பு. ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்
விபரங்களுக்கு JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் முன்வீதி)
யாழ்ப்பாணம். TP:- 0778249949 / 0718561654

SAAMSON ENGLISH
3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி
உலகில் எந்தவொரு மனிதனும் புத்தகம், CD படித்து விட்டோ or இலக்கணம் கற்றுவிட்டோ அதன்படி பேசப் பழகுவதில்லை.
இயல்பாகவே தான் வளருகின்ற சூழலில் மற்றவர்கள் பேசுவதை அவதானித்து தானும் அது போலப் பேசி, அம்மொழியை சரளமாகப் பேசக் கற்றுவிடுகின்றான்.
SAAMSON ENGLISH இனது ஆங்கிலப் பயிற்சியும் இது போன்றதே! இங்கு மாணவர்களை ஏனையவர்களுடன் சிறு சிறு உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்தி 3 மாதத்தில் சரளமாக ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளிக்கும் ஒரு புதுமையான பயிற்சியாகும்.
எமது இப் பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சி நெறியில் இணைய விரும்பும் 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் 04.02.2012 ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணைந்துகொள்ள முடியும்.
பயிற்சி நேரம்
பிரிவு I 08-10
பிரிவு II 10-12
பிரிவு III 01-03
பிரிவு IV 03-05
(ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டும் அனுமதி உண்டு)
SAAMSON ENGLISH
279, மணிக்கூட்டு வீதி, யாழ். (ஆஸ்பத்திரி பின்புறம்)
TEL- 077 621 4567

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE-JAFFNA
சிங்களம்
(4 மாத பயிற்சிநெறி)
ஆரம்பம்: 04-02-2012 சனி, ஞாயிறு. 4.30 - 5.30 PM
தென்னிலங்கை ஆசிரியர் T. சாம்சன்

இலங்கைச்சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை 2012
பிரபல சட்டத்தரணிகளின் வழிகாட்டலில் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
04/02/2012, 05/02/2012
சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்
காலை 09.00 மணி தொடக்கம் 01.00 மணி வரை.
இடம் : புதிய உயர்கற்கைகள் கல்லூரி, இல.95, பருத்தித்துறை வீதி, ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.
குறிப்பு : இம்முறை சட்டக்கல்லூரி அனுமதிக்கு வயதெல்லை கிடையாது
Hotline : 0777 246 723

ஆஸ்திரேலியா விசா
5 வருட குடும்ப விசா பெற சட்ட ஆலோசனை எம்மிடம் பெற்று இதுவரையில் குடியேறியோர் 4 குடும்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 39 குடும்பங்கள்.
ஆஸ்திரேலியா ஆலோசனை இறுதித்தினம்
07/02/2012
(எதற்காகவும் மேற்படி இறுதித்திகதி பிற்போடப்பட மாட்டாது)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.021 221 9016
கிளை:- 115A, இரத்தினபுரம் றோட், கிளிநொச்சி. 0214914527

27ம் ஆண்டில் கலாலயா பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் யாழ்ப்பாணம்



கடந்த எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர்.
இதோ மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்
- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மண்ட் ஐஸிங், மாச்சீனி மலர்கள் ஐசிங், பலவகையான உணவுகள், 6 வகையான கேக், பீஸா சிற்றுண்டிகள் சர்பத், ஐஸ்கிறீம், புடிங், சுப், மற்றும் மேசை அலங்காரம் செய்தல்.
- கைவேலை - Saree Work, - பூவேலை,
- ப்றிக் வர்ணம் தீட்டுதல்.
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும் (Hair Dressing & Styling)
50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல் முடி சுருட்டுதல் முடி நிறமூட்டுதல் V-Cut, U-Cut, மற்றும் Step, Layer, feather வடிவங்களில் முடி வெட்டுதல், தலைக்கான எண்ணெய் ஒத்தடம், தமக்குத் தாமே முடிவெட்டுதல்.
- Facials, மணப்பெண் அலங்காரங்கள், Pedicure, Manicure பயிற்சிகள். ஏழு வகையான சாறி உடுத்தும் முறைகள்.
மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ். அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகள்
ஆரம்பம்: 06.02.2012 திங்கட்கிழமை காலை 9.00 மணி.

வடமாகாண ஆள்சேர்ப்பு போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்
★ பொது உளச்சார்பு ★ பொது அறிவு
★ மொழித்திறன் ★ கிரகித்தல்
ஆரம்பம்: 04.02.2012 - சனி,ஞாயிறு 9 -11 A.m 3-5 P.m
திகழ் கல்வி நிறுவனம், கே.கே.எஸ்.றோட், இணுவில். T.P. 077 1753838

கணக்கீடு
திரு.K.பாலகஜன்
A/L 2012 DAY BATCH
கிரயக் கணக்கீடு
(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக இரு இடங்களில்)
NEC - ஆனைப்பந்தி: சனி ஞாயிறு
புதியபொருளியல் கல்லூரி-மணிக்கூட்டு வீதி: சனி காலை, ஞாயிறு மதியம் 1-2
ஆரம்பம் : 04.02.2012 சனி (நாளை)
வெளி மாவட்ட மாணவர்களிற்கு தனிப்பிரிவாக கற்பிக்கப்படும்.

A/L 2014
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 04.02.2012
சனி காலை 8.00 மணி
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L 2014
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 04.02.2012
சனி காலை 8.00 மணி
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்
(பெருமாள் கோயில் அருகில்)

1 Hour Service
சகலவிதமான
Rubber Stamp
வகைகளை பல வர்ணங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம் T.P 0215676722
ONLINE UTHAYAN
359, Kasthuriyar Road, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.